Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
දිනමුරසු වාරමලර්
ஒக்.16-22,1994 ரூபா 9/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WE... 72

# பேச்சுவார்த்தை!?

புலிகளின் கனடா ஏடு **சந்தேகம்!**


## ராஜிவ் கொலையும் ஒரு கரும்புலியும்




அதிரடித் தகவல்

ரசிகனின் இலக்கிய நயம்

செவி எப்படி குணம் அப்படி ஒரு சுவையான ஆய்வு



## கனவுக் கன்னியை அடைவது எப்படி?

# முரசம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.
ஜனாதிபதித் தேர்தலுக்கு
தமிழ்-முஸ்லிம் வாக்குகளும்
சேகரிக்கப்படும் தேவை இருப்பதால்
வெளிப்படையான இனவாதம்
பிரசார அரங்கில் தோன்ற முடியாது.

அரசாங்கத்திற்கும்-புலிகளுக்கும்
இடையேயான பேச்சுக்கள் குறித்த
விமர்சனங்கள் வெளிப்படும்.
அந்த விமர்சனங்களில்
இனவாத சாயல் தெரியக்கூடும்.

'போர் நிறுத்தம்' பற்றிய கேள்விகளை
பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்
எழுப்பியதும், அதற்கு
பிரதி பாதுகாப்பு அமைச்சர்
அளித்துள்ள பதிலும்
அரசாங்கம் புலிகளோடு பேசுதல்
கயிற்றில் கத்திமுனையில் நடப்பது
போன்ற காரியமாக இருப்பதை
உணர்ந்தறிய முடிகிறது.

ஜனாதிபதித் தேர்தல்
நடந்து முடியும்வரை
அரசாங்கம் கயிற்றில் எடுத்துவைக்கும்
ஒவ்வொரு காலடியையும்
மிகக் கவனமாகவே எடுத்து வைக்கும்
என்பது தெளிவு.

பேச்சுக்களில் ஒரு நிலையை அடைய
ஒரு வருடம் செல்லும் என்று
பிரதமர் சந்திரிக்கா கூறியுள்ளார்.

மெல்ல-நிதானமாக முன்செல்லும்
அணுகுமுறையை அரசாங்கம் விரும்புவதை
பிரதமரது பேச்சு கட்டிக்காட்டுகிறது.

ஆனால்- ஒரு வருடம் என்பது
வரலாற்றில் குறுகிய காலமாயினும்
அந்த ஒரு வருடத்தில்
நிலமைகள் எவ்வாறு மாறும்
என்பதும், திருப்பங்கள் நேர்ந்து
பேச்சு முயற்சிகள்
எவ்வாறான நெருக்கடிகளை
எதிர்கொள்ள வேண்டிவரும் என்பதும்
உடனடியாக ஊகிக்க முடியாதவையே.

பிரதமரது தனிப்பட்ட விருப்பங்கள்
என்பவற்றுக்கு அப்பால்
நாட்டின் நிலவரங்கள் அமையலாம்.
பிரதமரது கட்டுப்பாட்டுக்கும்
வெளியே-
நல்லுறவுகள் பட்டுப்போகும்
சம்பவங்கள் நேரலாம்.

அவ்வாறு நேராமல்
பார்த்துக்கொள்ள வேண்டியது
இரு தரப்பின் பொறுப்புமாகும்.

அரசாங்கத் தரப்பில்
படையினரின் போக்கு
மிக முக்கியமான ஒன்று.

பொருளாதாரத் தடை நீக்கப்பட்டபின்பும்
விடாக் கண்டன், கொடாக் கண்டன்
நிலை தடை முகாம்களில் நிலவுவதும்,
கிழக்கு மாகாணத்தில் சில பகுதிகளில்
பொருளாதாரத் தடை நிலவுவதும்
ஆண்டவன் வரம் கொடுத்தாலும்
பூசாரி பொல்லோடு நின்று
தடுப்பது மாதிரியாக இருக்கிறது.

தினமும் அமைச்சர் சென்று
சோதனை முகாம்களில் இருந்தால்தான்
தடை நீக்கப்பட்ட பொருட்களை
தாராளமாக கொண்டு செல்ல முடியும்.
அப்படிப்பார்த்தால்
'பொருளாதாரத் தடை நீக்க அமைச்சு'
ஒன்றை உருவாக்கி
நான்கு-ஐந்து பிரதியமைச்சர்களையும்
நியமிக்கவன்றோ வேண்டிவரும்!

மனமுண்டானால் இடமுண்டு.
உத்தரவுகள்-தீர்மானங்கள் மூலமாக
நடைபெறும் காரியங்களாக இல்லாமல்
உளப்பூர்வமான விருப்பத்தோடு
சமாதான சூழலைத் தோற்றுவிக்க
படையினரின் சகல மட்டங்களிலும்
புரிந்துணர்வும்-ஒத்துழைப்பும் நிலவ வேண்டும்.

மறுபுறம்-புலிகளும்
தமது பலம் காட்டும்
நோக்கத்தை-பேச்சு முயற்சிகளுக்கு
குறுக்கே கொண்டுவராதிருக்க வேண்டும்.

□□

பேச்சுவார்த்தைகள் ஆரம்பித்து
இரு தரப்பும்-
புன்னகைகளைப் பரிமாறும்போதும்
வடக்கே உள்ள பொதுமக்கள்
போக்குவரத்து கஷ்டங்களை
இன்னமும் கடக்க முடியவில்லை.

புலிகளும் தமது கட்டுப்பாடுகளை
தொடர்ந்தும் கடைப்பிடிக்கிறார்கள்.
இன்னொரு நாட்டுக்கு செல்வது போன்ற
கட்டுப்பாட்டு விதிகள்
வடக்கில் உள்ள பொதுஜனத்தின்
கால்களில் கட்டுப்போட்டுள்ளன.

கட்டுப்பாடு தளர்த்தப்பட்டால்
மக்கள் வெளியேறிவிடுவார்கள்
என்று புலிகள் நினைப்பதானால்
தமது அதிகாரத்தில் உள்ள பகுதிகளில்
விரக்தியே மேலோங்கியிருப்பதாக
அவர்கள் கருதுவதாக அர்த்தமாகிறது.

பொதுமக்களின் சுதந்திரத்தையும்
அரசியல்-ஜனநாயக உரிமைகளையும்
நிம்மதியான வாழ்க்கையையும்
உத்தரவாதப்படுத்துவதே
அரசும்-புலிகளும் பேசுவதன்
நோக்கம் என்பதை
நடைமுறைகள் வெளிப்படுத்துவதாக
அமைவதே சாலச் சிறந்தது.

□□

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

## கண்மணியைப் போல் காக்கிறவர்

இடையனாக இருந்த தாவீதை கர்த்தர் தெரிந்துகொண்டார். சவுல் என்ற அரசனுடைய காலத்திலே கோலியாத்தை வென்றான். நாட்கள் சென்றன. இவனைப் பாராட்டிப் புகழ்ந்த சவுலே தாவீதுமீது பொறாமைகொள்ள ஆரம்பித்தான். தாவீதைக் கொல்ல தேடினான். தாவீது அவ்வேளையிலே 'கண்மணியைப் போல எனைக் காத்தருளும்' என வேண்டினான். சவுல் அனுதினம் தாவீதைக் கொல்ல தேடியும் அவன் கைகளுக்கு ஒப்புக்கொடாமல் தேவன் காப்பாற்றினார். (சாமு. 23:14)


நடைமுறை வாழ்விலே இத்தகைய பிரச்சனைகளில் சிக்கி கண்ணீரில் வாழும் உள்ளங்கள்தான் எத்தனை எத்தனை? உயிருக்குயிராய் பழகிய நண்பர்களே பகைவர்களாக பிரச்சனை தருகிறார்களே என கலங்கி நிற்கும் நெஞ்சங்கள்தான் எத்தனை எத்தனை? இதற்காக நாம் கலங்க வேண்டிய அவசியமில்லை. தாவீதை காத்திட்ட கர்த்தர் எம்மையும் காத்திட வல்லவராய் இருக்கிறார்.

"உன்னைத் தொடுகிறவன் அவருடைய கண்மணியைத் தொடுகிறான். (சகரியா 2:8) தம் ஜனத்தை தமது கண்மணியைப் போல் காக்கிறார் (உபா-32:10) என்று வேதம் கூறுகிறபடி தாவீதைக் காத்து, ஆசிர்வாதித்து, உயர்த்திய தேவன் நம்மையும் காப்பாற்ற வல்லமையுள்ளவராய் இருக்கிறார். எனவே நாம் கவலைப்படவேண்டியதில்லை.

கஷ்டங்கள், தொல்லைகள், துன்பங்கள் வருகையில் தேவன் எனைக் கைவிட்டுவிட்டாரோ என்று புலம்புகிறோம். 'கடவுளுடைய கரம்தான் என்னைத் தண்டித்துவிட்டது' என்று கவலையுறுகிறோம். 'உங்களைத் தொடுகிறவன் என் கண்மணியைத் தொடுகிறான்' என்றவர் தன் கண்ணை தாமே குத்திக்கொள்வாரா? சங்-94:9ல் கூறியுள்ளபடி கண்ணை உருவாக்கினவர் காணாரோ? தாங்க முடியாத பிரச்சனைகளில் சிக்கித் தவிக்கும்வேளை கடவுளுக்கு கண் இல்லையோ என்று புலம்பிடத் தேவையில்லை. கண்ணை உருவாக்கியவர், நிச்சயம் எம்மை கண்மணி போல் காத்திடுவார் என்ற நம்பிக்கையில் கர்த்தாவே கண்மணியைப்போல் காத்தருளும் என வேண்டுவோம்.

ஜேயுளோரன்ஸ்-கெங்கல்ல.

## ஆன்மீகம்



## நாவைப் பேணுதல்

மௌனத்தின் சிறப்பை பெருமானாரின் வாழ்க்கையில் நடந்த சம்பவத் துணுக்கு ஒன்று மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

"பெருமானார் அவர்களே! மற்றவர்களிடம் கேட்கவேண்டிய தேவை ஏற்படாதபடி எனக்கு நல்லுபதேசம் கூறுங்களேன்!" என்றார் ஒருவர்.

பெருமானாரின் தீர்ப்பு: "இறைவனை நீர் முழு மனத்துடன் நம்பும், பின்னர் அவன் வகுத்த சட்டப்படி நடந்து கொள்ளும்- இது போதும் உமக்கு!"

"தவிர்க்க வேண்டிய ஏதேனும் உண்டா?" என்று மீண்டும் கேட்கப்பட்டது.

பெருமானார் வாயால் பதில் சொல்லவில்லை. தம் நாவைத் தன் விரல்களால் பிடித்துக்காட்டினார்கள்-எச்சரிக்கை செய்வதுபோல்! இந்தச் செயலின் பொருள் இதுதான்- "தவிர்க்க வேண்டியவை ஏராளம் உள்ளன. அவற்றில் மிகக் கொடியது நாவு. அதை நீ அடக்கியாளவேண்டும். தன் விருப்பப்படி அதை நீ இயங்க விடக்கூடாது. நாவினால் ஏற்படும் விபரீதங்கள் வரம்பிட முடியாதவை. எச்சரிக்கிறேன், மௌனத்துக்கு மதிப்புக் கொடும். மௌனம் சாதித்தவன் வெற்றியடைந்துவிட்டான்..!"

"நாவை அடக்கியாளுங்கள், அதற்கு அதிகாரம் கொடுக்காதீர்கள். உங்கள் அதிகாரத்துக்குக் கீழே அது இயங்கட்டும், இதில்தான் வெற்றியுண்டு." எனப் பெருமானார் பிறிதோரிடத்தில் கூறியிருக்கிறார்கள்.

சிலர் பசியின் கொடுமையால் தவறு செய்கிறார்கள். வேறு சிலர் காமத்தின் விளைவால் குலத்தை அழிக்கிறார்கள். இன்னும் சிலர் தப்பும் தவறுமாகப் பேசுவதால் தமக்கிருக்கும் கண்ணியத்தைக் குலைத்துக்கொள்கிறார்கள். இம்மையில் (இவ்வுலகில்) தோன்றும் விபரீதங்களுக்கு இந்த மூன்றும்தான் அடிப்படைக் காரணங்கள். மக்களில் பெரும்பாலானோர் இவற்றின் தூண்டுதலால்தான் தவறு செய்கிறார்கள். இந்த மூன்றையும் அடக்கியாண்டவர்கள் உண்மையிலேயே சிறப்புள்ளவர்கள். குறிப்பாக நாவைக் கட்டுப்படுத்தியவர்கள் எதையும் கட்டுப்படுத்தும் அற்றல் உள்ளவர்கள்.

ஷியானி நளீர்-அக்குறணை.

## கவிதைப்போட்டி இல-69

**வந்து குவிந்தவற்றில் வாகை சூடியதும் வியக்கப்பட்டவற்றில் இடம் பிடித்தவையும்**

### பரிசுக்குரிய கவிதை

**நிலை**

ஆயுத முதலையின்
வாயினில்
அகப்பட்டதேசம்
அரைகுறையாக
காயப்பட்டுக்கிடக்கிறது.

ஆரையம்பதி-இதயம்.



**எழுதப்படுகிறது**

"இனவாதமும்-சமாதானமும்"
அதன் அட்டைக்கு
அழகான படமிது.

ச.நோபிராகவன்-அக்கரைப்பற்று-7.

**அழிப்பு**

நிலம் வாழ் முதலைகள்
நீரினில் மறைத்ததை
நீர்வாழ் முதலையது
நிர்மூல மாக்க நினைக்குதோ?

ச.மகாலிங்கம்-வெளிமடை.

### வியக்கப்பட்டவை

**பலியாகலாமோ?**

கோரப்பல்
உண்டென்றால்
கொள்கலனும்
இரையாமோ?
அதிகாரம்
உண்டென்றால்
அப்பாவிகள்
பலியாகலாமோ?

ஏ.அஹ்மது ஜுனைது-ஏறாவூர்-06.

**"லஞ்சம்"**

அவதியுற்று ஆற்றைக்
கடக்கும்போது
இதற்கும் லஞ்சம்
கொடுக்க வேண்டுமோ?

மாங்கேணி-செ.சுகுமார்.

**பணம் ரணம்**

துப்பிவிடு அதை
கற்கள் விழுங்கு உன்
வயிற்றுணவு
சீரணமாகும்.
பணத்தை விழுங்கு-பின்
நிம்மதி போய்
ரணகளமாகும்.

ஷர்மி-கண்டி.

மரம்,
செடி,
கொடியென்று
நினைத்தாயா?
இல்லை,
இது
எங்கள் இனத்தின்
சுதந்திரப் பேழை.

தேவா கனகசபை-கிளிவெட்டி-01.

**தொடரிது**

திருத்தமான
நிறுத்தம்
வரும்வரை
தொடரும்
வேட்டை.

மு.தயானந்தராசா
கொழும்பு-12.

**இருந்ததும் இல்லாததும்**

மனிதனைச் சுரண்டும்
மனித முதலை ஒன்றை
விழுங்கினேன்.
இது தான் இருந்தது
இதயம் இல்லையே......

எம்.ஏ.ஷானாஸ் அஹமட்
திக்குவலை.

**அழுங்குப் பிடி**

'முதலை'ப் பிடி
அன்றேல்-
'முதல்'ஐப் பிடி.

கே.எஸ்.சுதாகர்
வவுனியா.

**தட(ய)ங்கள்**

மனிதத்துவங்கள் மரணித்து
மிருகத்துவங்கள் ஜனனித்த
இவ்யுகத்தில்-இது
தடயங்கள் கிடைக்காமல்
தடங்களை அழிக்கும் முயற்சி!!

மஸீதா ஏ.காதர்-ஏறாவூர்-06.

**கவனம்**

கவனமாகத்தான்
வாய் பற்றவேண்டும்.
'இலஞ்ச ஒழிப்பு
சட்டம்'
நிறைவேற்றியாச்சாம்.

ஆர்.ஆர்.-கொழும்பு-06.

## கவிதைப் போட்டி இல-72

**அசத்துங்கள் பார்க்கலாம்**



என்னங்க சௌக்கியமா? ஜாலியாக யோசித்து சுருக்கமாக-சுவையாக தபாலட்டையில் உங்கள் கவிதையை பதிவுசெய்து அனுப்பிவையுங்கள். சிறந்த கவிதை ஒன்றுக்கு பரிசு ரூபா நூறு. ஏனைய சிறந்தவை இடமுள்ளவரை தடம் பதிக்கும். அனுப்பவேண்டிய கடைசித் திகதி 22.10.1994.

—முகவரி—
கவிதைப் போட்டி இல: 72
தினமுரசு வாரமலர்
த.பெ.இல-1772,
கொழும்பு.

## வாசகசாலை

அன்பின் முரசே!

பாராட்டவேண்டிய இடத்தில் பாராட்டி, சுட்டிக்காட்ட வேண்டிய இடத்தில் குறைகளை சுட்டிக்காட்டி... வாவ்! அரசியல் பற்றி அலசுவதில் இராஜதந்திரிக்கு நிகர் அவரேதான். எக்ஸ்ரே ரிப்போர்ட் சூப்பர். தொடரட்டும் உனது ப(ா)ணி.

து.சர்மிளாதேவி-கலஹா.

□□

அன்பின் முரசே!

உனக்கு 'ஐஸ்' வைக்கவில்லை. உண்மையிலே சுவை, சூடு, சுவாரஸ்யத்தோடு அரசியல் சாணக்கிய நிபுணனாகவும் திகழ்கிறாய். தனி இடத்தையே நீ பிடித்துவிட்டாய். உன் சேவை நமக்கு தேவை.

வா.சதாசிவம்-புவக்பிட்டிய பஜார்.

□□

தித்திக்கும் தீந்தமிழினிலே
எத்திக்கும் புகழ் மணக்கும்
முத்தான எம்முரசே!
வாழ்த்துகிறேன் வாழியவே நீ!!

ஜஸ்மின் முகைதீன்-மூதூர்-03.

□□

எம்மைக் கவர்ந்த தினமுரசே!

உன்னில் மனதைக் கவரும் மகாபாரதம், சிந்தையை வியக்கவைக்கும் மருத்துவ விந்தைகள், இளசுகளுக்கு விருந்தாக சினி விசிட், இதயம் கவரும் இலக்கிய நயம், நாவிற்கு சுவையாக தேன் கிண்ணம், தகவல் பெட்டியின் தனித்துவம், தெவிட்டாது எங்களுக்கு ஒரு நாளும். சிறக்கட்டும் உன் சிறப்பு பலகாலம்.

ரஜனி சுரேந்தர்-கொழும்பு-13.

□□

வானவில்லாய்த் தவழ்ந்து வரும் தினமுரசே!

நீ எம் கையில் பட்டதுமே தவிப்போடு பார்க்கும் கதையோ ரசிகன் தரும் கொலை விழும் நேரம். கொலை விழும் நேரமோ சூப்பர். மேலும் பாப்பா முரசு சுமந்துவரும் அம்சங்கள் எமக்கு அறிவைப் புகட்டுகின்றன. தின முரசுக்கு எமது வாழ்த்துக்கள்.

செல்வி.ரிஸ்லா நஸீம்-அக்குறணை-06.



பாலும் சுவைக்கும் செந்தமிழில் பன்னூல் செய்து பைந்தமிழில் நாலும் சுவைக்கச் செய்யும்-முரசே உன் சுவையான ரசனைகள் எம்மை மேலும் மேலும் கவரச் செய்கின்றன. உன்னை தந்தவர்களுக்கு எம் மொழியில் நன்றி கூறுவதம்மா? உன் சேவை மேலும் மேலும் வளர எம் நல்லாசிகள்.

ரொசீமா மீராஷாஹிப்-சிலாபம்.

ஆழ் கடல் வற்றினாலும் அன்புக் கடல் வற்றாத முரசே! என்றும் என்னை சோக மயத்தில் இருந்தும், இன்ப மயத்தில் இருந்தும் என்னை கவரும்கதைகள், கவிதைகள், பாப்பா முரசு என்பனவற்றை சுமந்து வருவதற்கு என் மகிழ்ச்சிகரமான நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

அ.செல்வன்-அக்கரைப்பற்று-07.

□□

உண்மைச் செய்திகளை உறங்க விடாது வெளி உலகுக்கு எடுத்துக் காட்டும் தினமுரசே! நீ சுமந்துவரும் அனைத்து அம்சங்களும் வெகு சுவை. அதிலும் நில், கவனி, முன்னேறு, அதிரடி அய்யாத்துரை, லேடிஸ் ஸ்பெஷல், ரசிகனின் இலக்கிய நயம் அத்தனையும் என் மனதை கொள்ளை அடித்துவிட்டன. உன்பணி மென்மேலும் பெருக எனது நல் வாழ்த்துக்கள்.

சுதாகரன் மஞ்சுளா-திருமலை.

□□

இதயம் என்னும் அழகிய பூங்காவினிலே
மலர்ந்து வந்த தினமுரசே!
வாரம் வாரம் உன்னைக் காண்பதால்
ஏற்பட்டது எனக்கு அன்பு-இந்த
அன்பு என்னும் வேதம்-என்றே
உன்னிடம் நான் கொண்ட பாசம்
நீ எங்கு மலர்ந்தாலும் என் உள்ளம்
என்றும் உன்னை வாழ்த்தும்...

எம்.சுமதி-பதுளை.

□□

அன்பின் முரசே!

அழகான வண்ணப் படங்களை மட்டுமல்ல, செய்திகளையும் வெகு நுட்பமாக வெளியிட்டு கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கிறாய். உன் சேவைக்கும் உன் வளர்ச்சிக்கும் என் இனிய வாழ்த்துக்கள்.

ஆறுமுகம் ரவிக்குமார்-டன்சினேன்.

□□

அறிவின் சின்னமாய் வாரம் ஒருமுறை மலரும் தினமுரசே!

உனது ஆக்கங்கள் அனைத்தும் சூப்பர். அதிலும் என்னைக் கவர்ந்தது உன் அரசியல் எனும் பகுதியே. அதுமட்டுமா? கொலை விழும் நேரம் ஆ..கா... உன் சேவைப் பணி தொடரட்டும். எங்கள் அறிவு எனும் மொட்டு மலரட்டும்.

க.அஜந்தா தேவி-கல்லடி.

□□

எனது அன்பின் இதய முரசே!

தினம் திகட்டாமல், வாரம் தவறாமல் வாசகர்களுக்கு வந்து சுவைக்க சுமந்து வரும் சுப செய்தி நன்று.

நா.புவனநாதன்-வந்தாறுமூலை.

□□

# "பெரும் யுத்தம் மூளலாம்—எதிர்கொள்ள நிதி தேவை"

## வெளிநாடுகளில் உள்ள புலிகளது கிளைகள் அவசர வேண்டுகோள்!

இலங்கையில் அரசும்-புலிகளும் பேச்சுவார்த்தைகளில் இறங்கும் சூழலில் வெளிநாடுகளில் உள்ள புலிகளது கிளைகள் 'தமிழீழ தேசிய பாதுகாப்பு நிதி' என்று அவசர நிதி திரட்டலில் ஈடுபட்டுள்ளன.

இவை ஒன்றும் இரகசியமாக நடக்கும் முயற்சிகளல்ல. பகிரங்கமாகவே வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

உலகில் எந்த மூலையில் உள்ள புலிகளது கிளையும் வே.பிரபாகரனின் சம்மதம் இன்றி நிதிதிரட்டலில் ஈடுபடமுடியாது என்பதும், அவ்வாறு ஈடுபடுவது மரண தண்டனைக்குரியது என்பதும் குறிப்பிடத்தக்கது. எனவே தலைமையின் அனுமதியுடனேயே இந்த நிதிதிரட்டல்கள் இடம்பெற்று வருவதாக கருத முடிகிறது.

விடுதலைப் புலிகளது வெளிநாட்டு பத்திரிகைகளில் வெளியாகியுள்ள அவசர நிதி திரட்டல் வேண்டுகோளில் பின்வருமாறு கூறப்படுட்டுள்ளது:

*அன்பான தமிழீழ மக்களே!*

*தமிழின ஒழிப்பு தமக்கு வெற்றியைத் தேடித் தரும் என்பதில் ஆட்சியாளர்கள் தொடர்ந்தும் நம்பிக்கை கொண்டிருப்பதனால் 'போர்' 'போர்' என வெறிகொண்டு நிற்கிறார்கள். இனி நடத்தும் யுத்தத்தினை இறுதி யுத்தமாக அரசு நடத்தும் என பலாலியில் படையினர் மத்தியில் உரையாற்றிய சிறீலங்கா பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.*

*ஆம், இதனால் தமிழீழத்தில் எந்நேரமும் பெரும் யுத்தம் மூளலாம்.*

*இந்த யுத்தத்தினை எதிர்கொள்ள மண்ணின் மைந்தர்கள் தயாராகிக் கொண்டுள்ளனர். சமாதானக் கதவுகளை அகலத் திறந்து விட்டபோதும் தென்னிலங்கையில் இருந்து நல்லெண்ணக் குழுக்களை வரவேற்றும், யுத்தக் கைதிகளை விடுவித்தும், விடுதலைப் புலிகள் சமாதான சமிக்ஞைகளை காட்டுகின்ற போதும் இனவெறியோடு வளர்ந்து இப்போதும் சமாதானம் என்ற பெயருடன் ஆட்சிபீடம் ஏறிய அரசும், அதன் இனவெறிப் படைகளும் போர் நிறுத்தத்தை அறிவித்து, முழுமையாக பொருளாதாரத் தடைகளை நீக்கி ஆக்க பூர்வமான செயற்பாடுகளில் இறங்குவதில் தயக்கம் காட்டி வருகின்றது.*

*எனவே எம் மண் மீதும், மக்கள் மீதும் ஏவி விடப்பட இருக்கும் இந்த யுத்தத்தினை எதிர்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. இரு கைகள் சேரும் போதுதான் ஒலி எழும்பும். சமாதான ஒலி எழும்பவேண்டுமானால் விடுதலைப் புலிகள் மட்டும் சமாதானத்திற்குத் தயாராக இருந்தால் போதாது. சிறீலங்கா அரசும் சமாதானத்திற்கு தயாராக இருப்பதுடன் அதற்கான சூழலை உருவாக்கி பேச்சு வார்த்தைகளைத் தொடங்க வேண்டும்.*

*சமாதானத்தில் எம்மவர் காட்டும் அக்கறை எதிரியிடம் இல்லை. அவர்களால் சமாதானத் தீர்வைக் காணவும் முடியாது. எமது உரிமைகளை வழங்கக்கூடிய நிலையில் அவர்கள் இல்லை. இதனால் அவர்கள் யுத்த மொழியினைத் தான் பேசுவார்கள்.*

*சமாதான வேடம் அணிந்து நிற்கும் சந்திரிகா அரசு ஒரு மாதத்திற்குள் தமிழ் மக்கள் மீதான படுகொலை ஒன்றை ஆகஸ்ட் 25 அன்று அச்சுவேலிப் பகுதியில் நடத்தி முடித்துள்ளது. இதனால் அவர்களுக்குத் தெரிந்த மொழியில் பதில் அளிப்பதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை. இதனால் தான் ஒரு பக்கத்தில் சமாதானக் கதவுகளைத் திறந்து வைத்துக்கொண்டு மறுபுறத்தில் யுத்தத்தினை எதிர்கொள்ளத் தயாராகின்றனர் விடுதலைப் புலிகள்!*

*அன்பான மக்களே!*

*இன்று பெரியதொரு தேசியக் கடமை எம் முன்னால் உள்ளது. எம்மை, எமது மண்ணை, எமது பாரம்பரியத்தை அழித்துவிடத் துடிக்கும் எதிரியின் கொடூர ஒடுக்குமுறையினை எதிர்த்து மக்களையும் மண்ணையும் பாதுகாத்து உறுதியுடன் நிற்கும் 'எம்மவர் கரங்களை எம்மால் பலப்படுத்த முடியும்'. நாம் பொருளாதார ரீதியாகச் செய்யும் பங்களிப்பு எம்மவர் இழப்பினைக் குறைக்கும். எமது வெற்றியினைத் துரிதப்படுத்தும்.*

*ஒரு பெரும் யுத்தத்தினை எதிர்கொள்ள பெருந்தொகையான நிதி தேவைப்படும் என்பது நீங்கள் அறியாத ஒன்றல்ல. ஆனால் இந்த நிதி மிகமிக அவசரமாகத் தேவைப்படுகின்றது என்பதனை உங்களின் கவனத்தில் கொண்டுவருகிறோம்.*

*நாம் எதிர்கொள்ளும் பல்வேறு செலவினங்களுடன் ஒப்புநோக்கும் போது இது ஒரு பெரிய தொகையல்ல. எனினும் 'சிறுதுளி பெரு வெள்ளம்'! எமது உணர்வு பூர்வமான பங்களிப்பு எம் இரத்த உறவுகளின் கரங்களைப் பலப்படுத்தும்.*

*இது நாம் அனைவருமே எமக்கிடையேயான கருத்து வேறுபாடுகளை மறந்து ஒன்று சேரவேண்டிய நேரம். எதிரிப் படைக்கு தமிழர்கள் அனைவரும் 'பயங்கரவாதிகளே'. இதனால் அவனது இன அழிப்பு தமிழ் மக்கள் அனைவரையும் நோக்கியதாகவே இருக்கும். இதனால் நாம் அனைவரும் இணைந்து இதனை எதிர்கொள்ளவேண்டிய தார்மீகக் கடமை எமக்கு உண்டு.*

*எம் அனைவருக்கும் தமிழீழமே தாயகம். எம் தமிழீழ தேசத்தைக் காத்திட, மக்களைக் காத்திட நாம் அனைவரும் ஓரணியில் திரள்வோம். பெரும் பகை வெல்வோம்.*

இவ்வாறு அந்த வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# "தாயகப் பிரதேசத்தை அங்கீகரிக்கும் தீர்வே பரிசீலிக்கப்படும்"

# "விடுதலைப் போரை இந்தியா அங்கீகரிக்க வேண்டும்"

## பேச்சுவார்த்தைக்கான புலிகளின் பிரதிநிதி தெரிவிப்பு

(நமது நிருபர்)

தமிழ் தாயகப் பிரதேசத்தை அங்கீகரிக்கும் தீர்வு திட்டத்தை பரிசீலிக்க தாம் தயார் என்று புலிகளின் முக்கியஸ்தர் கரிகாலன் தெரிவித்துள்ளார்.

கடந்த ஐந்தாம் திகதி யாழ்ப்பாணத்தில் உள்ள வடமாராட்சியில் தீருவில் திடலில் நினைவாஞ்சலிக் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

1987ம் ஆண்டு இந்திய அமைதிப்படையால் கடலில் வைத்து கைதான குமரப்பா-புலேந்திரன் உட்பட 12 புலிகள் பின்னர் இலங்கை படை முகாமில் தற்கொலை செய்துகொண்டனர்.

அவர்களது 7வது நினைவுதினத்தை முன்னிட்டே நினைவாஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது.

இலங்கை அரசுப் பிரதிநிதிகளோடு பேச்சு நடத்தும் புலிகளது பிரதிநிதிகள் குழுவுக்கு தலைமை தாங்கும் திரு.கரிகாலன் அங்கு உரையாற்றினார்.

**பலவீனமாகக் கருதக்கூடாது.**

அவர் தனது உரையில்,

"சமாதானத்திற்கான எமது விருப்பத்தை புலிகளின் பலவீனமாக யாரும் கருதக்கூடாது. அரசு அப்படிக் கருதுமானால் விபரீத விளைவுகள் ஏற்படும்.

"தமிழீழக் கோரிக்கைக்கு மாற்றீடாக எமது தாயக பிரதேசத்தையும், சுய நிர்ணய உரிமையையும் அங்கீகரிக்கும் தீர்வுத் திட்டம் ஒன்றை புதிய அரசு முன்வைத்தால் அதனை பரிசீலிக்க தயார் என்று தலைவர் பிரபாகரன் அறிவித்துள்ளார்.

"இதனை எமது பலவீனமாக அரசு கருதக்கூடாது. அப்படி அரசு கருதினால் அதனால் ஏற்படும் விளைவுகளுக்கு அரசே பொறுப்பாகும்" என்று கரிகாலன் கூறினார்.

சிறீலங்காவின் புதிய அரசு போர் நிறுத்தம் செய்ய தயங்குகின்றது. பேச்சும் போரும் ஒரே நேரத்தில் நடப்பது ஆபத்தாக முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

**இந்தியா அங்கீகரிக்க வேண்டும்**

மேலும் கரிகாலன் தனது உரையில்,

"இந்தியா தனது கொள்கையை மாற்றிக் கொள்ள வேண்டும்.

"நாங்கள் ஏன் போராடுகிறோம் என்ற உண்மை நிலையை இந்தியா அறிந்து கொள்ளவேண்டும்.

"அதன் மூலமாக எமது விடுதலைப் போராட்டத்தை இந்தியா அங்கீகரிக்க வேண்டும். அதனைத்தான் நாம் எதிர்பார்க்கின்றோம்" என்று தெரிவித்தார்.

**படைகள் ஏற்பதாயில்லை**

கடற்புலிகளின் விஷேட தளபதி சூசை கருத்துத் தெரிவிக்கையில்,

"அமைதி ஏற்படவேண்டும் என்பதே எமது விருப்பமாகும். ஆனால் அரசின் படைகள் அமைதி ஏற்படுவதை விரும்புவதாகத் தெரியவில்லை" என்று கூறினார். மேலும் அவர் தனதுரையில், "புதிய அரசின் செயற்பாடுகளுக்கு எமது தேசியத் தலைவர் நேசக்கரம் நீட்டியுள்ளார். ஆனால் படைகளுக்குள் கருத்து வேறுபாடு நிலவுகிறது" என்றார்.

# "ஆயுத விநியோக கப்பல் என்பதால் தாக்கினோம்"

## வெற்றிலைக்கேணி தாக்குதல் - புலிகள் கூறும் காரணம்

9.10.94 அன்று வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் நடைபெற்ற கப்பல் மீதான தாக்குதலுக்கு புலிகள் யாழ்ப்பாணத்தில் காரணம் கூறியுள்ளனர்.

சில தினங்களாக அக் கப்பல் மூலம் வெற்றிலைக் கேணி மற்றும் ஆனையிறவு முகாம்களுக்கு தேவையான வெடி மருந்துகள் ஆயுதங்கள் என்பவை அக் கப்பல் மூலம் விநியோகிக்கப்பட்டு வந்ததாகவும், கடற்புலிகளது விசேட படையணியால் கப்பல் தாக்கப்பட்டதாகவும் புலிகளது செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

300 அடி நீளமும் நவீன 4 ராடர்களும், தொலைத்தொடர்பு கருவிகளும் கொண்ட ஓஷன் டிரேடர் என்னும் அக்கப்பல் கடற்படைக்கு சொந்தமானது என்று புலிகளின் குரல் வானொலி 9.10.94 அன்று இரவு அறிவித்தது.

ஆனால் அக்கப்பல் தனியாருக்கு சொந்தமானதாகும். உணவுப் பொருட்கள் கொண்டு செல்லவே கப்பல் பயன்படுத்தப்பட்டது என்று அக்கப்பலின் முகவர் நிறுவனத்தை சேர்ந்த ஒருவர் தெரிவித்துள்ளார். அதேசமயம் இடம் உள்ள பட்சத்தில் படையினருக்கு தேவையான பொருட்களும் கொண்டு செல்லப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

கப்பல் தாக்கப்பட்ட 9ம் திகதி அன்று வடமாராட்சியில் வான் தாக்குதல் இடம் பெற்றதாகவும் ஒரு சிறுமி பலியானதாகவும் புலிகளின் செய்திக் குறிப்புக்கள் தெரிவித்துள்ளன.

# சென்ற லிங்கம் திரும்பிவராது

## திறைசேரி கணக்கு வழக்குகளில் சிக்கல்!

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா பிரதமராக இருந்த காலத்திலேயே பல உயர்ந்த பதவிகளை வகித்தவர் திரு.இராமலிங்கம் பாஸ்கரலிங்கம். பிரேமதாசா ஜனாதிபதியானதும் திறைசேரியின் செயலாளர் பொறுப்பினை ஏற்றார். இலங்கை அரசின் நிதியுடன் தொடர்புடைய விடயங்களுக்கு திரு.பாஸ்கரலிங்கமே பொறுப்பாக இருந்தார்.

சுகயீனம் காரணமாக லண்டனுக்கு இவர் சில மாதங்களுக்கு முன்னர் சென்றார். தனது உடல்நிலை தேறாதிருப்பதனால் நாடு திரும்ப முடியாதிருப்பதாக அவர் கடிதமூலம் தெரிவித்திருக்கிறார்.

இதற்கிடையில் புதிய அரசாங்கம் பதவிக்கு வந்ததும் திறைசேரியின் கணக்கு வழக்குகள் பரிசீலிக்கப்பட்டன. இதன்படி சுமார் 30 பில்லியன் ரூபாய்க்கு எந்தவிதமான கணக்குகளும் காட்டப்படாமல் அந்தப் பெருந்தொகை மாயமாக மறைந்துள்ளமை கண்டு பிடிக்கப்பட்டது.

இப்பணத்துக்கு திறைசேரி செயலாளரே பொறுப்பு என்பதனால் அவரே காரணம் காட்டவேண்டிய பொறுப்பிலுள்ளார். இவர் தற்போது நாடு திரும்பக்கூடிய நிலையில் இல்லாதிருப்பதனால் தற்போது இப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ள திரு.ஏ.எஸ்.ஜயவர்த்தனா கணக்கு வழக்குகளைச் சீர்செய்ய முடியாத நிலையிலுள்ளார். பண மோசடிகள்பற்றி சட்ட நடவடிக்கைகள் எடுப்பது தொடர்பாக திரு.ஜயவர்த்தனா சட்ட வல்லுநர்களுடன் ஆலோசித்து வருவதாகத் தெரிகிறது.

விசாரணைகளைத் தொடர்வதற்கு திரு. பாஸ்கரலிங்கம் லண்டனிலிருந்து தருவிக்கப்படுவாரா என்று வினவியதற்கு திரு. ஜயவர்த்தனா பதிலளிக்கவில்லை. அவரை லண்டனிலிருந்து இங்கு சட்ட ரீதியாகக் கொண்டுவரவும் முடியாது. இங்கிலாந்துக்கும் இலங்கைக்குமிடையில் நாடு கடத்தும் உடன்படிக்கை எதுவும் கைச்சாத்திடப்படவில்லை என்பதனால் திரு.பாஸ்கரலிங்கத்தை நாட்டுக்கு தருவிக்க முடியாது என்று அரசாங்க வட்டாரங்களிலிருந்து வந்த தகவல்கள் கூறுகின்றன.

# யாருக்காக இவர்கள் யாருக்காக?

*எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஏ.ஜே.ரணசிங்க, ஹட்சன் சமரசிங்க ஆகியோரும் போட்டியிடுகின்றனர்.*

*முன்னாள் அமைச்சர் ஏ.ஜே.ரணசிங்க பொதுஜன முன்னணிக்கு சார்பாகவே தேர்தலில் போட்டியிடுவதாக தெரிகிறது.*

*பிரேமதாசாவின் ஆதரவாளர்களது வாக்குகள் காமினி திசாநாயக்காவுக்கு செல்லாமல் தடுப்பதற்கே ஏ.ஜே.ரணசிங்க போட்டியிட பொதுஜன முன்னணி மறைமுக ஆதரவு வழங்குவதாக நம்பப்படுகிறது.*

*இதே வேளையில் இலங்கை லிபரல்க் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான திரு.ஹட்சன் சமரசிங்கா திரு.காமினி திசநாயக்காவின் ஆசிர்வாதத்துடன்தான் தேர்தலில் போட்டியிடுவதாகச் சொல்லப்படுகிறது.*

*பிரேமாவின் ஆதரவாளர்கள் மற்றும் தனக்கெதிரான ஐ.தே.கட்சி ஆதரவாளர்களது வாக்குகள் எதிர்தரப்புக்கு செல்லாதிருக்கவே திரு.காமினி திசாநாயக்கா திரு.ஹட்சன் சமரசிங்கவை போட்டியிட வைத்துள்ளார் என்று கூறப்படுகிறது.*

*திரு.ஹட்சன் சமரசிங்க ஐ.தே.கட்சியின் முன்னாள் செயலாளர் நாயகம் சிறிசேன கூரேக்கு எதிரானவர். தற்போது ஐ.தே.கட்சியின் புதிய தலைமையுடன் உடன்பாட்டோடு இருப்பவர் என்று அறியப்படுகிறது.*

# பொது விவாதத்திற்கு பிரதமருக்கு அழைப்பு

## வேட்பாளர் காமினி சார்பாக செயலாளர் காமினி சவால் கடிதம்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.கட்சி சார்பில் போட்டியிடும் திரு. காமினி திசாநாயக்காவுடன் பகிரங்க விவாதத்தில் கலந்து கொள்ளும்படி மக்கள் ஐக்கிய முன்னணி ஜனாதிபதி வேட்பாளரும் பிரதம மந்திரியுமான திருமதி சந்திரிக்கா குமாரதுங்காவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. ஐ.தே.கட்சியின் பொதுச் செயலாளர் காமினி விஜேசேகரா இந்த அழைப்பினை விடுத்துள்ளார்.

வானொலி அல்லது தொலைக்காட்சி போன்ற சாதனங்கள் மூலம் இந்த விவாதம் ஒலி-ஒளிபரப்பப்பட்டால் நாட்டிலுள்ள சகல மக்களும் அறியக்கூடியதாக இருக்கும் என்று கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

நாட்டின் பொதுப் பிரச்சனைகளான இனப்பிரச்சினை, பொருளாதாரம், அபிவிருத்தி, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, பொது நலத்துறை, கல்வி, சுகாதாரம், தேசிய அடிப்படைகள், மனித உரிமைகள், ஊழல், அதிகார துஷ்பிரயோகம் மற்றும் அரசியல் யாப்பு ஆகிய அம்சங்கள் தொடர்பாக பகிரங்க விவாதம் இடம்பெறலாம் என்றும், பொது ஜன முன்னணி விரும்பினால் இவற்றில் வேண்டிய மாற்றங்களைச் செய்யலாம் என்றும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கைத் தமிழ் அகதிகள் விவகாரம்

## 'சுவிஸ் அரசு தொடர்ந்து பிடிவாதம்

சுவிட்ஸர்லாந்திலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்பும் முடிவில் அந்த நாட்டு அரசாங்கம் பிடிவாதமாகவுள்ளது.

ஏற்கனவே சுவிஸிலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தியும் பயன் எதுவும் ஏற்படவில்லை.

சமீபத்தில் சுவிட்ஸர்லாந்திலுள்ள இடதுசாரி அமைப்பான சமூக ஜனநாயகக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஏஞ்சலின் பிரான்கோசர் தலைமையில் 70 பாராளுமன்ற உறுப்பினர்கள் சுவிஸ் நீதியமைச்சரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்திருந்தனர்.

அம் மகஜரில் இலங்கைத் தமிழ் அகதிகளை உடன் திருப்பி அனுப்பக்கூடிய சூழல் இலங்கையில் இல்லை என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

அந்த மகஜருக்கு சுவிஸ் நீதியமைச்சர் பதிலளிக்கும்போது, "இதுவரை காலமும் இலங்கை தமிழ் அகதிகளை திருப்பி அனுப்பாமல் இருந்தோம். ஆனால் இப்போது இலங்கையில் சுமுக நிலை காணப்படுவதால் திருப்பி அனுப்பும் முடிவை எடுத்துள்ளோம்" எனத் தெரிவித்திருந்தார்.

இதேவேளை எதிர்வரும் 22.10.94 அன்று இலங்கைத் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புவதை கண்டித்து கண்டன ஊர்வலம் ஒன்று நடைபெறவுள்ளது.

இனவாதத்திற்கு எதிரான சுவிஸ் அமைப்பு, சுவிஸ் தமிழ் சங்கம், அகதிகளுக்கான பேஸ் அமைப்பு ஆகியன ஊர்வல ஏற்பாடுகளை செய்து வருகின்றன.

சுவிஸிலுள்ள பேண் புகையிரத நிலையத்திலிருந்து ஊர்வலம் ஆரம்பமாகிறது.

அம்பாறை மாவட்ட றவுண்டப் செய்திகள் -நிந்தவூர் நிருபர்-

# கற்றுக்கொடுப்போர் 'கட்' அடிக்கலாமா?

# ஓடித்திரிய வைக்கும் தொலைபேசி இணைப்பு!

### அதிர்ச்சி!

**வ**டக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் மேலதிக கல்விப் பணிப்பாளர் அல்-ஹாஜ் எம்.எச். யாகூப் ஹஸன் கல்முனைப் பிரதேசத்திலுள்ள ஓர் உயர் பாடசாலைக்கு கடந்தவாரம் திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டபோது, அன்றைய தினம் குறித்த பாடசாலைக்கு 19 ஆசிரியர்கள் வருகை தராது 'கட்' அடித்திருந்ததைக் கண்டு அதிர்ச்சி அடைந்தார். ஆனால் இந்த 19 பேரிலும் ஆறு ஆசிரியர்கள் தாம் பாடசாலைக்கு வராமை பற்றி (லீவு எடுத்தமை பற்றி) எவ்வித அறிவித்தலும் செய்யவில்லை என்பதையும் அவர் அறிந்து விசனப்பட்டார். அறிவித்தல் எதுவுமின்றி 'கட்' அடித்த அந்த ஆசிரியர்களிடம் உடனடியாக விளக்கம் கோரப்பட்டுள்ளதுடன், அவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கையும் எடுக்கப்படவிருக்கின்றது.

### வலயம்

கல்முனை வலய கல்விப் பணிப்பாளராக, கல்முனை கோட்ட கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய ஜனாப்.ஐ.எம். இஸ்மாயீன் நியமிக்கப்பட்டுள்ளார். முன்னாள் 'வலயம்' மட்டக்களப்புக்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

### இப்படியும் ஒரு சங்கம்

1992ம் ஆண்டு அம்பாறை மாவட்டத்திலிருந்து கிராமசேவை உத்தியோகத்தர் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றி சித்தி அடைந்தவர்களில் நியமனம் கிடைக்காதோருக்கு நியமனம் பெற்றுக் கொடுக்கப் போராடவென கல்முனையில், "கிராம உத்தியோகத்தர் நியமனம் கோருவோர் ஒன்றியம்" எனும் பெயரில் அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

### 'மொபைல்' சேவை

திகாமடுள்ள மாவட்ட சி.ல.மு.கா. பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி ஜனாப். யூ.எல்.எம்.முகைடீன், பொதுமக்களின் குறைகளைக் கேட்டறிந்து, உடனுக்குடன் தீர்வுகளைக் காண்பதற்கென பிரதேச செயலாளர்கள் சகிதம் நடமாடும் சேவைகளை நடத்தவுள்ளார். ஒவ்வொரு கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவுகளிலும் அவ்வப் பிரிவு மக்களுக்கென தாமே நேரில் சென்று இந்த நடமாடும் சேவையை நடத்தவுள்ளார். பலே! பலே!!

### இப்படியும் ஒரு தொலைபேசி...?

சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் ஒரு தொலைபேசி பொருத்தப்பட்டுள்ளது. இதிலிருந்து இந்த செயலகத்தின் முக்கிய ஆறு பகுதிகளுக்கு இணைப்பும் (பரவல் கணெக்ஷன்) வழங்கப்பட்டுள்ளது. தொலைபேசி அழைப்பொன்று வந்தால் இந்த ஆறு பிரிவுகளிலும் றிசீவரைத் தூக்கவேண்டும், அல்லது ஓடித் திரிந்து உரியவருக்கு சொல்ல வேண்டும்! ஆனால் மத்தியாக ஒரு 'சுவிட்ஜ் போட்' பொருத்தப்பட்டால் இந்த அவலம் ஏற்படாது. 'சுவிட்ஜ்போட்' பொருத்த சுமார் மூன்று லட்சம் தேவையாம்! வழங்குவது யார்?

### போனஸ்

கல்முனை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஈட்டியுள்ள நிகர இலாபத்தில் ஏழு லட்சம் ரூபாவை சங்கப் பணியாளர்களுக்கு விரைவில் போனஸாக வழங்கவிருக்கின்றது. 63 பணியாளர்கள் இந்த போனஸைப் பெறவுள்ளனர் என சங்கத் தலைவர் ஜனாப் எம்.எம்.இஸ்மாயில் தெரிவித்தார்.

### நல்லுறவு இல்லையா?

ஆட்சியிலிருக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசிலுள்ள முஸ்லிம் 'தலைமை'களிடையே நல்லுறவுகள் இல்லையென்று இங்கு பேசிக் கொள்ளப்படுகின்றது. 'கொழும்பு முஸ்லிம்', 'கிழக்கு மாகாண முஸ்லிம்' என்ற பேதம் தலைகாட்டுவதாகக் கூறப்படுகின்றது.

### சிகிச்சை முகாம்

கல்முனை வைத்திய சங்கமும், தெஹிவளை லயன்ஸ் கழகமும் இணைந்து எதிர்வரும் 15.10.1994ம் திகதி கல்முனை ஆதார வைத்தியசாலையில் கண் சிகிச்சை முகாம் ஒன்றை நடத்துகின்றன. ●

# மருமகள் மீது பலாத்காரம்

## முன்னாள் பொலிஸ் அதிகாரி மீது குற்றச்சாட்டு

**மு**ன்னாள் ஜனாதிபதி ஒருவரின் பிரதம பாதுகாப்பு அதிகாரியாகக் கடமையாற்றிய பிரதி பொலிஸ் மா அதிபர் திரு. விமலநாத் குணதிலக்கா தனது சொந்த மருமகளான 17 வயது மாணவியை பலவந்தமாக பயமுறுத்தி கற்பழித்ததாக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டைக் கொண்ட இரு சத்தியக் கடிதங்களை திரு.குணதிலக்காவின் மனைவியின் உடன்பிறந்த சகோதரனான மாணவியின் தந்தை பொலிஸ் மா அதிபருக்கும் பிரதி பாதுகாப்பு அமைச்சரான திரு. அனுருத்த ரத்தவத்தவுக்கும் சமர்ப்பித்துள்ளார்.

இச் சம்பவம் அச்சத்தியப் பிரமாணக் கடிதத்தில் விபரிக்கப்பட்டுள்ளது. கற்பழிப்புக்கு ஆளாகியுள்ள தனது மகளை பாடசாலை விடுமுறையைக் கழிக்கும் பொருட்டு கொழும்பு கெப்பிட்டிப்பொல மாவத்தையில் அமைந்துள்ள பொலிஸ் அதிகாரிகள் விடுதியில் வசித்து வந்த தனது சகோதரியின் (திரு. குணதிலக்காவின் மனைவி) இல்லத்திற்கு அழைத்து வந்து நிறுத்தியதாகவும் அவ் வில்லத்தில் தனது மைத்துனரான திரு. குணதிலக்காவுடன் தனது சகோதரியும் பிள்ளைகளும் குடியிருந்து வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவ தினம், தனது சகோதரியும் பிள்ளைகளும் மாடியிலிருந்து கீழே இறங்கி வெளியே சென்றிருந்த சமயம் தனது மகள் தனியே இருந்த தருணம் திரு. குணதிலக்கா திடீரென அறையினுள் புகுந்து மகளைப் பயமுறுத்தி பலாத்காரமாக கற்பழித்ததோடு, வெளியே தாய் தந்தையினரிடையே கூறினால் தொலைத்துக் கட்டுவேன் என்று கூறியதோடு தான் நினைத்தால் எதையும் சாதிப்பேன் என்று பயமுறுத்தியிருக்கிறார். அதன் பின்பு தனது மகள் அங்கு இருக்கவிரும்பாது தனக்கு தொலைபேசி மூலம் அழைத்து செல்லும்படி அறிவித்ததன்பின்பு தான் கொழும்பு சென்று மகளை வீட்டிற்கு அழைத்து வந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

"எமது வீட்டிற்கு அழைத்து வந்த பின்பு மகள் மிகுந்த சுகவீன நிலையில் நீண்டகாலம் மருத்துவ சிகிச்சை பெற்றுக் கொண்ட பின்பு மீண்டும் தனது கல்வி தொடர்ந்தார். சமீபத்தில் இவரை திருமணம் பேசி உறவினர்கள் வந்த தருணம் தனது தாயாரிடம் (எனது மனைவியிடம்) தனக்கு மாமா குணதிலக்கா விழைத்திட்ட கொடுமையை விபரித்து திருமணத்திற்கு மறுத்து விட்டார். இவரிடம் இருந்து வந்த எனது மகன் ஒருவனும் மனநோய்க்கு ஆளாகி இலங்கையில் குணப்படுத்த முடியாத நிலையில் ரஷ்யாவில் வைத்திய சிகிச்சையை மேற்கொண்டிருந்த தருணம் அந்த நாட்டிலேயே இறக்க நேரிட்டதும் அந்த மகனின் மரணத்திற்கும் திரு. குணதிலக்காவே காரணமாக இருந்திருக்கலாமென தான் தற்போது சந்தேகம் கொண்டுள்ளேன்" இவ்வாறு மாணவியின் தந்தையின் முறையீட்டுக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது ■

# தமிழ் புறக்கணிப்பில் முன்நிற்கும் நகரசபை

(திருமலை நிருபர்)

'**த**மிழ் மொழி அமுலாக்கல் கோரிக்கை வெறும் அரசியல் கோஷந்தானா?' இவ்வாறு திருகோணமலை மக்கள் கேட்கிறார்கள்.

திருகோணமலை நகரசபை தனது நகர சுத்தித் தொழிலாளர்களுக்கு வழங்கிய நியமனக் கடிதம் ஆங்கிலத்திலேயே எழுதப்பட்டிருப்பதால் இந்த ஐயம் எழுந்துள்ளது.

தமிழர் தலைநகரில் தமிழர்களால் நடத்தப்படுகின்ற நிர்வாகத்தில் வேற்று மொழியெதனையும் அறியாத தமிழ்த் தொழிலாளர்களுக்கு ஆங்கிலத்திலேயே நியமனக் கடிதம் வழங்கப்பட்டுள்ளமை குறித்து யாரிடம் போய் சொல்வது எனத் தொழிலாளர்கள் அங்கலாய்க்கிறார்கள்.

தினமுரசு நிருபரிடம் கடிதத்துடன் வந்த ஒரு தொழிலாளி "அவர்கள் சொன்னதால் நியமனக் கடிதம் என்பது மாத்திரம் எனக்கு விளங்குகிறது. ஆனால் அதில் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்பது விளங்கவில்லை" என்றார் விரக்தியோடு. ●

# தற்காலிக சீரமைப்பால் தீராது தொல்லை!

(ஹேவாஹெட்ட நிருபர்)

**ஹே**வாஹெட்ட தொகுதியைச் சேர்ந்த ஒரு சில கிராமப்புறங்களின் பாதைகள் குன்றும் குழியுமாக- போக்குவரத்துக்கு தகுதியற்ற நிலையில் இருப்பதாக புகார் தெரிவிக்கப்படுகின்றது.

உடுதெனிய பழைய பள்ளிவாசல் வீதி, ரல்லிமங்கொட- தெல்தோட்டை வீதி ஆகிய பாதைகளே கடும் பாதிப்புக்குள்ளாகியிருக்கின்றன.

பாதைகளைச் சீர்செய்யும் முயற்சிகள் அடிக்கடி நடைபெற்றாலும் கூட அவை தற்காலிக சமாளிப்பு முயற்சியாக இடம்பெறுவதனாலேயே அடிக்கடி பாதைகள் சேதத்துக்குள்ளாகின்றன என்று பிரதேசவாசிகள் கூறுகின்றனர்.

தற்சமயம் இப்பகுதிகளில் பெய்யும் கடும் மழை காரணமாக இந்தப் பாதையூடாகச் செல்லும் வாகனங்கள் வேறு சுற்றுப் பாதைகளில் பல மைல் தூரங்களைக் கடந்து செல்ல வேண்டிய நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூடிய கரிசனை கொண்டு இப்பிரதேச பாதைகளை சீர்செய்ய நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச வாசிகள் 'தினமுரசு' மூலம் வேண்டுகோள் விடுக்கின்றனர். ■

# கிழக்கின் கிடுகிடுச் செய்திகள்

—மட்டூரான்—

### ஒழுக்கம் தவறலாமோ........?

**தே**னகத்தின் தாதிமார் பயிற்சிக் கல்லூரியின் அதிபரானவர் அங்கு வரும் ஏனையோரின் மடல்களை பிரித்து பார்ப்பதில் அசகாய சூரராம். அண்மையில் அவர் அலுவலகத்தில் வேலை செய்யும் ஊழியரொருவரின் மடல் உடைத்த விடயம் அம்பலமானதில் ஒரு திருமணமே தடைபட்டதாம். அதுமட்டுமல்ல பயிலும் தாதிமாணவர்களின் மடல்களையும் திருட்டுத்தனமாக உடைத்துப் பார்க்கிறாராம். ஒழுக்கம் போதிக்கும் அதிபர் ஒழுக்கம் தவறலாமோ?

### முதிர்ச்சியில்லாத வைத்தியர்

முனைப் பிரதேசத்து வைத்தியசாலையொன்றில் வைத்தியரொருவர் ஏனைய சக வைத்தியர்களை அடக்கி ஆள்வதில் பிரியம் கொண்டவராம். சமீபத்தில் தமது சக சிரேஷ்ட வைத்தியரொருவரின் செய்தி நாளாந்த இதழில் வந்துவிட்டதாம். உடனே சம்பந்தப்பட்ட நிருபரை தொலைபேசியில் வம்புக்கு இழுத்திருக்கிறார் அந்த பிரதம வைத்தியர். நிருபரோ வைத்தியர் என்றும் பாராமல் பேனாவுக்கு இருக்கும் சக்தியை நாசூக்காக அழகு தமிழில் வெழுத்து வாங்கியிருக்கிறார். பாவம், வைத்தியத்தில் பரிச்சயமான அவர் முதிர்ச்சி அடையாதது பரிதாபத்துக்குரியதே!

### குப்பை கிழறப்படுகின்றது

தேனகத்தின் எழுத்தறிவித்தவர்களை பயிற்றுவிக்கும் கலாசாலையின் சில மோசடிகள் வெளிவரத் தொடங்கியுள்ளனவாம். குறிப்பாக நிதி விடயத்தில் பாரிய 'அடி' கடந்தகாலத்தில் இடம்பெற்றுள்ளதை 'புதிய அரசு போல்' தற்போதைய புது நிர்வாகம் கண்டுபிடிக்கத் தொடங்கியுள்ளதாம். நல்லையா சிலைக்கென அறமிஞ்சிய காசு; வருடாந்த மலர் வெளியீட்டிற்கான பணம் இப்படி முறை கேடான முறையில் பணம் வசூலிக்கப்பட்டிருப்பது மாணவர் மத்தியில் மிகுந்த விசனத்தை கிளப்பியுள்ளதாம். எற்கனவே இங்கிருந்து சென்ற பிரதி அதிபரொருவருக்கு இன்னமும் கலாசாலையைவிட விருப்பமில்லையாம். ஆங்கிலக் கடிதம் எழுதுவதாக கூறும் சிரேஷ்ட கல்வி அதிகாரியான அவர் பழைய சுருட்டல் பணத்திற்கு அதிபதியாக உள்ளாராம். மேலும் குப்பை கிழறப்பட்டால்... நாற்றம்...யாருக்கு..?

### அதிபர்களின் ஆதங்கம்

முனைப் பிரதேசத்தில் பல அதிபர்களுக்கு இன்னும் பாடசாலை கிடைக்கவில்லையாம். அதிபர் தரம் பரீட்சை சித்தியெய்திய சில அதிபர்களை, தாம் பெரிய அதிபர் என நினைத்துக் கொண்டிருக்கும் ஒருசில அதிபர்கள் தள்ளி வைக்கின்றார்களாம். "நீங்கள் சோதனையில் வந்த அதிபர்தானே! உம்மட வேலையை நீர் பாரும்" என்று கூறுகிறார்களாம் சிலர். பாவம் பிரஸ்தாப அதிபர்கள் பாடசாலைக்கு எங்கு போவார்கள்? சோதனை பாஸ் பண்ணியும் சுயநல அதிபர்களின் பரீட்சையிலும் 'பாஸ்' பண்ண வேண்டுமா?

## நூறு பேருக்கு!

வீரமக்கள் தின கவிதைப் போட்டி மற்றும் கடிகாரப் போட்டி விபரங்கள் அடுத்தவார முரசில் வெளியாகவுள்ளன.

கவிதைப் போட்டியில் நூறு பேருக்கு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

போட்டி ஏற்பாட்டாளர்களான சுவிஸர்லாந்தில் உள்ள 'ஐக்கியத்தை விரும்புவோர்' பரிசுகளை அனுப்பி வைக்கவுள்ளனர்.

விபரங்கள் அடுத்தவார முரசில்.


விளம்பரப் பகுதி



மலையாள மாந்திரீகம்

27 வருடங்களாக மலையாள மாந்திரீக துறையில் நுணுக்கமாக நான் கற்றறிந்த வகையில் இக்காலங்களில் அவ்வப்போது அவரவர் குறைகளுக்கு என்ன பரிகாரம் என அச்சொட்டாக அவ்வேளைகளிலே மலையாள பகவதி வெளிச்ச வீடாக எனக்கு காட்டிக் கொடுக்கின்றது.

இதையொட்டியே வளர்ந்த எனது நிறுவனம் வரையறுக்கப்பட்ட கம்பனியாக மாறியது. அத்துடன் நவீன உலகத்துக்கு தகுந்தவாறு என்னிடம் மாந்திரீகம், ஜோதிடம், கைரேகை இவைகளுக்கான அதி அற்புத கம்பியூட்டர் உண்டு. உங்கள் குறை என்ன? காதல் தோல்வியா? கல்யாணம் நடக்கவில்லையா? நினைத்தது நினைத்தவாறு நடக்கவேண்டுமா? காதலுக்காக சாவா? வாழ்வா என நினைப்பதை விட்டு என்னை சந்திக்கலாமே.

இவ்வாண்டு மாந்திரீக சக்தியின் வெற்றி பெற்ற ஜபிதா இதோ?

இவ்வாண்டு மலையாள மாந்திரீக காந்த சக்தியும் வெற்றியும்:

நிறைவேறாத காதல் வசியம்- 100/97
கடல் கடந்து செயல் புரியும் காதல் வசியம்- 100/97
கணவன் மனைவி பிணக்கு- 100/45
பெற்றோர் விரும்பாத காதல்-100/87
குத்தகை குடியிருப்போர் பிரச்சனை-100/33
தீரா ஆஸ்துமா நோய்- 100/100
திருமணத் தங்குதடை நிவர்த்தி-100/97
குடிபோதை நிவர்த்தி- 100/97
கல்வி ஞான விருத்தி- 100/72
சகல வியாபார விருத்தி- 100/83
மீன்பிடி, பண்ணை, ஆடு,மாடு,கோழி வளர்ப்பு- 100/27
புத்திர பாக்கியம்-100/33
பிசாசு தோஷம், சூனிய நிவர்த்தி-100/97

கொழும்பில் மாதந்தோறும் மாதக் கடைசியில் 30,31 திகதிகளில் தான தர்மமும் துர்க்கை உச்சாட பூசை காலை 10 மணிமுதல் மாலை 6 மணிவரை நடைபெறும். அன்று நிச்சயம் உண்மை அறியலாம்.

தலைமைப்பீடம்
P.K.சாமி JDGAN
(மாந்திரீகச் சக்கரவர்த்தி)
சிறீ துர்க்காதேவி ஆலயம்
32, தினச்சந்தை காம்பிளக்ஸ்
நுவரெலியா.
தொலைபேசி: 052-2508, 052-3039

கொழும்பு இல்லம்-
இல: 162,
கொட்டாஞ்சேனை வீதி,
கொட்டாஞ்சேனை.
கொழும்பு-13.
தொலைபேசி: 342463, 342464



நேரடியாக முரசு கரம் சேர இதோ ஒரு வாய்ப்பு!

தினமுரசு உள்ளூர் சந்தா விபரம்:

| | | |
|---|---|---|
| ஒரு வருடத்திற்கு | ரூபா 440/= | (52 வாரங்கள்) |
| ஆறு மாதங்கள் | ரூபா 225/= | (26 வாரங்கள்) |
| மூன்று மாதங்கள் | ரூபா 115/= | (13 வாரங்கள்) |

சந்தாதாரராக விரும்புவோர் தங்களது சுயமுகவரியிட்ட கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். சந்தாப்படிவம் எம்மால் அனுப்பிவைக்கப்படும்.

தினமுரசு வாரமலர்
த.பெ.இல:1772
கொழும்பு

THINAMURASU VAARAMALAR
P.O.BOX: 1772
COLOMBO

என்ற முகவரிக்கு கடிதங்களை அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.



ரிஷி அஜமாமிச லேகியம்
(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 175/=,95/=
தங்க பஸ்பம் கலந்தது 975/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 875/=

ஞான சுந்தர வைத்தியசாலை
187, செட்டியார் தெரு,
கொழும்பு 11,
போன்: 421398



வீடியோ படப்பிடிப்பில் முன்னணி நிறு வனம்
VICTOP RECORDING STUDIO
356, GALLE ROAD, WELLAWATTE, COLOMBO-6

இல.358, J.T. Complex இல் வெகுவிரைவில் எமது நிறுவனத்தால் புதிய ஸ்ரூடியோ ஒன்று திறக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் எமது அன்பர்கள் வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகிறோம்.

அதுமட்டுமல்ல, மங்களகரமான நிகழ்ச்சிகளை சிறந்த வீடியோ கமராக்களில் பதிவுசெய்வதோடு, ஸ்டில் புகைப் படங்களையும் சிறந்த முறையில் எடுத்துத் தருவோம்.

மற்றும் மங்கள நிகழ்ச்சிகளுக்கு தேவையான அலங்காரப் பொருட்கள் (மேக்கப் செற்) வாடகைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.


* T.V.—டெக் வாடகைக்கு
* 24 மணி நேரம் குளிரூட்டப்பட்ட எயர்போட்டிற்கான வான் சேவீஸ்.

உங்கள் மின்சார உபகரணங்கள் பழுதடைந்துவிட்டதா? 592453, 078 69749 இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள். உங்கள் இல்லத்தில் உங்கள் கண்முன் திருத்தித் தரப்படும்.



விளம்பரம் செய்து வியாபாரத்தைப் பெருக்குங்கள்.
விளம்பர மேலாளர் Advertising Manager
இல.5, காவிந்த பிளேஸ், No.5, Kavinda Place,
கிருலப்பனை Phone Kirulapone
கொழும்பு-06. 852041 Colombo-06.

# எக்ஸ்ரே ரிப்போர்ட்



# போர் இடைநிறுத்தச் செய்தி பொய்யானது எப்படி?

## எதிர்த்தரப்பின் கேள்வியால் அரச தரப்பின் தடுமாற்றம்

## கண்டதே காட்சியென்று வெளியாகும் செய்திகள்! வடக்கே சென்றுவரும் செய்தியாளர்களது பார்வைகள்!!

**நாரதர்**

அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள வெகுஜன தொடர்பு சாதனங்கள் சுதந்திரமாக இயங்கவேண்டும் என்பதை எதிரணியில் உள்ள கட்சிகளே எப்போதும் வலியுறுத்துவது வழக்கம்.

பொதுஜன முன்னணியும் எதிரணியாக இருந்தபோது அரசின் வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் பயன்படும் முறைபற்றி விமர்சனங்களால் விளாசித் தள்ளியிருக்கிறது.

இப்போது பொதுஜன முன்னணி அதிகாரத்தில் இருக்கிறது.

கடந்தவாரம் ரூபவாஹினியும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமும் பிரதமர் பி.பி.சி வசந்தராஜாவுக்கு அளித்த பேட்டியை பவ்வியமாக ஒளி-ஒலிபரப்பியிருந்தன.

அதிலும் வானொலியில் காலையிலேயே பேட்டியை ஒலிபரப்பியது அப்பட்டமான அரசியல் பிரசாரமாகத் தெரிந்தது.

பேட்டியில்கூட, பிரதமர், விமர்சனங்களை தான் வரவேற்பதாகவும், அரசியல் கிண்டல்களை இரசிப்பதாகவும் கூறியிருந்தார்.

பேட்டி கண்ட திரு.வசந்தராஜாவும் தான் பி.பி.சி.போன்ற உயர்ந்த இடத்தில் இருந்து ரூபவாஹினியை சுத்தப்படுத்துவதற்காக வந்திருப்பவர் போன்ற தோரணையில் கொலரைத் தூக்கிவிட்டுக்கொண்டு கேள்விகள் கேட்டபோதும் அநேகமான கேள்விகள் சுலபமாக அடிக்கக்கூடிய பந்துக்கள் போலவே காணப்பட்டன. அதனால்தான் இது 'முகஸ்துதிக்கு அல்ல' என்று அவரே கூறவேண்டி இருந்தது போலும்.

அதிகாரத்தில் உள்ள எந்தவொரு கட்சியும் 'தனக்கெதிரான பொல்லை' அரச பிரசார சாதனங்களிடம் கொடுக்கப்போவதில்லை என்பது மட்டும் உறுதி.

ஜனாதிபதித் தேர்தல் நடக்கும் தற்போதைய சூழ்நிலையில் எதிர்க்கட்சித் தலைவர் திரு.காமினியை பேட்டி கண்டு அரசின் வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் வெளியிடமுடிந்தால் எல்லோரும் ஜோராகக் கைதட்டலாம்.

இன்னொரு விடயமும் உறுத்துகிறது. நாட்டின் ஜனாதிபதி-பிரதமர் ஆகியோரது பேட்டிகள், பேச்சுக்கள் என்பவற்றுக்கு வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் முக்கியத்துவம் கொடுப்பது இயல்புதான். ஆனால், காலையில் அலுவலகங்களுக்கும், வேலைத் தலத்திற்கும் புறப்படும் அவசரத்தில் பதட்டத்தை தணிக்கவும், நேரத்தை அறியவும் வானொலி கேட்பது ஒரு வழக்கம். அந்த நேரத்தில் போய் பேட்டியை ஒலிபரப்புவது சலிப்பையே தரும் என்பதை ஏனோ மறந்துவிட்டார்கள்.

பிரதமர் சொல்லி நடக்கும் காரியங்கள் அல்ல இவை. பிரதமரிடம் சொல்லிக்காட்டுவதற்கான சிலரின் முயற்சியாகவே தோன்றுகிறது. இதனால் சங்கடம் பிரதமருக்கும்தான். அமைச்சர்கள் திரு.தர்மசிறி சேனநாயக்கா, திரு.அலவி மௌலானா போன்றோர் இவற்றைக் கவனிக்கலாம் அல்லவா?

□□

சுயாதீன தொலைக்காட்சி தமிழில் அக்கறைகாட்ட மெல்ல ஆரம்பித்துள்ளது. சந்தோசம்தான். ஆனால் ரூபவாஹினி ஒட்டுமொத்தமாகவே தமிழ் நிகழ்ச்சிகளை ஓரம்கட்ட தீர்மானித்துவிட்டதோ என்று நினைக்கத் தோன்றுகிறது.

தொட்டுக்கொள்ள ஊறுகாய்போல காணப்பட்ட கொஞ்ச நஞ்ச தமிழ் நிகழ்ச்சிகளையும் தற்போது காண முடியாதவர்கள் 'ரூபவாஹினி' நிர்வாகத்தை நொந்துகொள்ள மாட்டார்கள். அரசாங்கத்தையே நொந்து கொள்வார்கள்.

கடந்த அரசாங்க காலத்தில் 'பவர்ஃபுல்' அமைச்சராக இருந்த திரு.தொண்டமான் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் தமிழுக்கும் முக்கியத்துவம் பற்றி பல தடவைகள் பேசியிருந்தார். பலன் மட்டும் பூச்சியம்.

தற்போது அரசாங்கத்தில் 'நான் பாதி நீ பாதி' என்று கூறக்கூடிய முஸ்லிம் காங்கிரஸ், பிரதியமைச்சர் திரு.சந்திரசேகரன், அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கும் ஈ.பி.டி.பி.கூட்டணி, புளொட் போன்ற தமிழ் கட்சிகள், மற்றும் பிரதியமைச்சர் அலவி மௌலானா போன்றோர் ஒன்று சேர்ந்து கவனம் செலுத்தினால் பலம் அதிகம்தான். ஆனால் பாராமுகமாக இருக்கிறார்களே என்று தமிழ் பேசும் நேயர்கள் தொடர்ந்து பெருமூச்சு விடாமல் பார்த்துக்கொள்வார்களா?

□□

'இந்தியா டுடே' தமிழ் பதிப்பின் ஆசிரியர் வாசந்தி, யாழ் சென்றும் புலிகளின் தலைவரைச் சந்திக்க முடியாமல் நாடு திரும்பினார்.

பி.பி.சி செய்தியாளர் ஆனந்தியை சந்தித்த பிரபாகரன் வாசந்தியை சந்திக்க மறுத்துவிட்டார்.

ராஜீவ் கொலைக்கு புலிகளே காரணம் என்று அடித்துச் சொன்ன சஞ்சிகைகளில் 'இந்தியா டுடே'யும் ஒன்று என்பது பிரபாவின் புறக்கணிப்புக்கு காரணமாக இருக்கலாம்.

ஆயினும் வாசந்தி புலிகள்மீது வெறுப்பை உமிழவில்லை.

நிறைய ஆச்சரியப்பட்டிருக்கிறார். அதிர்ச்சிப்பட்டிருக்கிறார் என்று தெரிகிறது.

ஆயுதம் ஏந்திய கெரில்லாக்கள்- அவர்கள் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகள். அங்கு மின்சாரமும் இல்லாமல், போக்குவரத்துக்கள் இல்லாமல் ஜீவிக்கும் மக்கள் என்றும் அனைத்துமே நெருக்கடியான போக்குவரத்து இயந்திரமயமான வாழ்க்கையுமுள்ள தமிழ்நாட்டின் தலைநகராம் சிங்காரச் சென்னையில் இருந்துவந்த வாசந்தியை பாதித்துவிட்டன.

வாசந்தி மட்டுமல்ல, விஞ்ஞான தொழில்நுட்பம் விரல் நுனிக்கு வந்துவிட்ட நாடுகளில் இருந்து யாழ் செல்லும் பத்திரிகையாளர்கள் யாவரும் வியப்பில் வாய் பிளக்கத்தான் செய்கிறார்கள்.

ஆதிவாசிகளை பார்ப்பது மாதிரியான ஆச்சரியத்தோடு பார்க்கப்படும் நிலையில்தான் யாழ்ப்பாண குடாநாட்டு மக்களது வாழ்நிலை, சூழல் என்பன காணப்படுகின்றன.

தென்னிலங்கையில் இருந்து யாழ் சென்றுவரும் பத்திரிகையாளர்கள்கூட 'அட கடவுளே' என்று ஆச்சரியப்படும் போது வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களது 'அட கடவுளே' எமக்கு ஆச்சரியமல்ல.

ஒரு பெண் பத்திரிகையாளர் என்ற வகையில் வடபகுதிக்கு சென்றுவந்த வாசந்தியின் துணிச்சலை முதலில் பாராட்ட வேண்டும்.

அதே சமயம் தவறான தகவல்கள் பலவற்றை வாசந்தி வெளியிட்டும் இருக்கிறார். கண்டதே காட்சி என்று மட்டும் தகவல்களை வெளி யிடுவது தவறாகிவிடும் என்பதற்கு வாசந்தி எழுதியுள்ள கட்டுரை நல்ல உதாரணம்.

நல்லூர் கந்தன் கோவிலில் தேரை தரிசிக்கும் மக்கள் என்று ஒரு படம் இந்தியா டுடேயில் வந்திருக்கிறது. ஆனால் படத்தில் இருப்பது தேர் அல்ல- சப்பறம்.

யாழ்ப்பாணத்தில் புகைத்தல் இல்லை. மதுபானம் இல்லை. திருட்டு இல்லை என்று வாசந்திக்கு யார் சொன்ன தகவலோ தெரியவில்லை.

சிகரெட் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் செல்லுகிறது. புலிகளுக்கு குறிப்பிட்ட வரியும் செலுத்தப்படுகிறது. சிகரெட் வரி மூலம் புலிகளுக்கு நல்ல வருமானமும் கிடைக்கிறது. இவ்வாறான பொருளுக்கு வரி விதித்து புலிகள் நிதி திரட்டுவது தவறு என்று சொல்லவும் இயலாது.

மதுபானம் கொழும்பிலிருந்து செல்ல புலிகள் தடை விதித்துள்ளார்கள். காரணம், உள்ளூரிலேயே புலிகளது கண்காணிப்பில் மதுபானம் தயாரிக்கப்படுகிறது. இதில் இரண்டு லாபம். ஒன்று உள்ளூர் தொழிலாளர்களுக்கு வேலை. இரண்டு, புலிகளுக்கு வருமானத்தில் ஒரு பங்கு சேருகிறது. இது தவிர கள்ளச் சாராயம் காய்ச்சுவதும் ஆங்காங்கே நடக்கிறது.

"திருடனாய்ப் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது"- இது யாழ்ப்பாணத்தில் உள்ள . திருடர்களுக்கும் பொருந்தும்.

மின்சாரம் அங்கு கிடையாது. இரவில் முகம் தெரியாத இருளில் திருடர்கள் தொல்லை தாங்காது. புலிகள் கோழி வளர்க்க கடனடிப்படையில் நிதி உதவி செய்கிறார்கள். திருடர்களோ இருளில் ஈரச் சாக்குடன் வந்து கோழிகளை அமுக்கிக்கொண்டு போகிறார்கள்.

சங்கிலித் திருட்டு, சைக்கிள் திருட்டு மற்றும் பெண்கள்மீது பலாத்காரம் என்று வழக்கமான குற்றச் செயல்கள் அங்கு இல்லாமல் இல்லை.

சமீபத்தில் புலிகள் வழங்கியுள்ள தண்டனைகளே அதற்கு சாட்சி. அதேசமயம் முகம் தெரியாத இருள் திருடர்களுக்கு வசதியாக இருப்பதால் புலிகளின் காவல் துறைக்குப் பாதிக்கப்பட்டவர்கள் அடையாளம் சொல்ல முடியாதிருக்கிறது.

எனினும் பட்டப்பகலில் நடக்கக்கூடிய குற்றச்செயல்கள் குறைந்துள்ளன என்பது மட்டும் உண்மை.

வெளிநாட்டு பத்திரிகையாளர்கள் தாம் அங்கு நிற்கும்போது ஏற்படும் பிரமைகளையும், அதன் விளைவான பிழையான கணிப்புக்களையும் பல தடவைகள் வெளியிட்டுள்ளார்கள்.

இதே சமயம், வடக்கே காடுகளுக்குள் புலிகளின் முகாம்கள் இருப்பது போலவும், அங்கு பிரபாகரன் சென்று பேச்சுவார்த்தைகள் பற்றி விளக்கிவருவதாகவும் செய்திகள் வெளியிடும் உள்ளூர் பத்திரிகையாளர்களது கற்பனை வளத்தையும் பாராட்டத்தான் வேண்டும்.

கிழக்கில் காடுகளுக்குள் முகாம் அமைக்கும் தேவை புலிகளுக்கு இருக்கிறது. வடக்கில் பெரியதொரு பகுதியே புலிகளது கட்டுப்பாட்டில் இருக்கும்போது இவர்கள் ஏன் பிரபாவை காட்டுக்கு துரத்திக் கொண்டிருக்கிறார்களோ தெரியவில்லை.

அடுத்து இன்னொரு முறை இருக்கிறது. வடக்கிலிருந்து வரும் பயணிகளது வாயைக் கிளறி செய்தி வெளியிடும் முறைதான் அது.

ஒரு பகுதியில் நடப்பதை இன்னொரு பகுதியில் உள்ளவர்கள் சரியாக அறியமுடியாத நிலைதான் யாழ்ப்பாணத்தில் நிலவுகிறது.

அதுவும் புலிகள் தொடர்பான விடயங்களை வெளிப்படையாக அலசிப் பேசும் நிலை அங்கில்லை.

இவ்வாறான நிலையில் வடபகுதியில் இருந்து வரும் ஒருவர் மூலம் புலிகளது நிலைப்பாடு பற்றியோ, அங்கு என்ன நடக்கிறது என்பது பற்றியோ, பெறும் தகவல்கள் நூறுவீதமான உண்மைகள் என்று எப்படி நம்பமுடியும்?

இப்படித்தான் சில வாரங்களுக்கு முன் யாழ்ப்பாணத்திலிருந்து வந்தவர்கள் மூலம் ஒரு செய்தி அடிபட்டது.

'கடற்புலி தளபதி சூசை, அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், காவல் துறைப் பொறுப்பாளர் நடேசன், தளபதி பால்ராஜ் போன்றோர் பிரபாகரன் உத்தரவுப் படி பொட்டம்மானால் கைது' என்பதுதான் அந்தச் செய்தி.

இது எப்படியோ இராணுவ வட்டாரங்களது காதிலும் விழுந்துவிட்டது. உடனே அவர்கள் 'அச்சுவேலி மோதலில் சூசை பலி' என்று அதிரடிச் செய்தியாக வெளியிட்டும் விட்டார்கள்.

செய்தியால் கொல்லப்பட்ட சூசை வடமாராட்சிக் கூட்டத்தில் தோன்றிப் பேசியிருக்கிறார்.

புலிகள் இயக்கத்தில் முக்கியமான சிலர் சில வாரங்களுக்கு முன் பிரபாகரனால் கைது செய்யப்பட்டது உண்மை. அது பற்றிய செய்திகள் சற்றுக் கசிந்தன. பூரண விபரங்கள் தெரியாத நிலையில் மக்களே ஊகித்து 'அவர்களாக இருக்குமோ' என்று யோசித்து பேசிக்கொண்ட செய்திகளே வவுனியாவை வந்தடைந்தன.

ஆனால் இதுவரை, பிரபாகரன் உத்தரவுப்படி உளவுத்துறைப் பொறுப்பாளர் பொட்டம்மானால் கைது செய்யப்பட்டவர்கள் பற்றிய விபரங்களை சரியாக அறிய முடியவில்லை!

உறுதிப்படுத்தாமல் முக்கியமான செய்திகள் வெளியாகும்போது உண்மையான செய்திகளும் 'புலி வருகுது' கதையாகிப் போய்விடும்.

□□

'வடக்கே போர் இடைநிறுத்தம்' என்று வெளியான செய்தி உண்மையில்லை என்றுவிட்டது அரச தரப்பு.

ஆனால் 'வடக்கே பாரிய இராணுவ நடவடிக்கைக்கு திட்டமிட்டிருந்தோம். பேச்சுவார்த்தை நடக்க இருப்பதால் நிறுத்தி விட்டோம்' என்று தெரிவித்துள்ளது பாதுகாப்புப்படைத் தலைமை.

பாதுகாப்புப்படை தலைமையின் கருத்துப்படி 'வடக்கே போர் நடவடிக்கை இடை நிறுத்தம்' என்பது உண்மைதான்.

எனவே- வெளியான செய்தியில் தவறில்லை.

ஆனால், கொழும்பின் ஆங்கிலத் தினசரி ஒன்று போர் நடவடிக்கை இடைநிறுத்தம் என்பதை 'போர் நிறுத்தம்' என்று கொட்டை எழுத்தில் போட்டுவிட்டது.

தொடர்ந்து பாராளுமன்றத்திலும் எதிர்தரப்பு கேள்வி எழுப்பியது.

மன்னார் சிலாவத்துறை கடலில் கரும் புலிகள் தாக்குதலும் நடந்திருக்கும் சூழ் நிலையில் போர் நிறுத்தம் என்று அறிவிப்பது தென்னிலங்கையில் அரசின் பலவீனம் என்றும் புலிகளுக்கு விட்டுக்கொடுத்தல் என்றும் கருதப்படும் என்று உஷாரான

(தொடர்ச்சி மறுபக்கம்)

---

# அதிரடி அய்யாத்துரை



யாழ்ப்பாணத்திலை 'கரண்ட்' இல்லை. ஆனாலும் வீட்டு முற்றத்திலை கூடியிருந்து இரவு பத்து பதினொரு மணிவரை கதைக்கிறவையாம். ஒரு கல்லிலை ரெண்டு மாங்காய் பாருங்கோ. பொழுதும் போகும். கள்ளரும் பேச்சுச் சத்தம் கேட்கிறதாலை எட்டிப்பார்க்க மாட்டினமல்லோ.

கொழும்பிலை இருந்து வவுனியாவுக்கு ரயில் மூலம் போற எங்கடை ஆட்கள் சீற் பிடிக்க பாயுற பாய்ச்சல் கிட்டத்தட்ட கொரில்லாப் பாய்ச்சல்தான். குறி தப்பி விழுந்து கால் முறியுற காட்சிகளும் இருக்குது பாருங்கோ. ஏறும்போது மட்டுமில்லை வவுனியாவிலை இறங்கும்போதும் இடிமாட்டு அவசரம்தான். இதாலை ஒரு ஆசிரியையின் உயிர் வவுனியாவிலை போனதுதான் பாருங்கோ சோகம். இடிபட்டு பாயுற ஆக்களுக்கு ஒரு படிப்பினையாய் இருக்குமோ அல்லது இடி தொடருமோ?

யாழ்ப்பாணம் குருநகரிலை மீனுக்கு வீசின வலையிலை ஏ.கே.47 சிக்கினதாம். கடலும் போர்க்களமானதாலை இனிமேல் வலை வீசேக்கை கவனம் தேவைதான்.

கிழக்கிலை முனைப்பகுதி தர்மாசுபத்திரியிலை இரத்தம் பரிசோதிக்கவும் அறுபது ரூபா தானம் கேட்கினமாம். கர்ப்பிணிப் பெண்களிடமும் கரிசனையே இல்லாமல் தானம் கேட்கிறதுதான் இன்னும் கொடுமை. உரியவை கவனிப்பினமோ?

இந்திய சஞ்சிகைகளுக்கு ரெண்டு எழுத்தார் யாழ்ப்பாணத்திலை விதித்த தடை கடுமையாக்கப்பட்டிருக்குதாம்.

தமிழ்நாட்டு சினிமா படங்கள் வீடியோவிலை பார்க்க விதித்த தடையை ரெண்டு எழுத்தார் தளர்த்தியிருந்தவை. இப்ப மீண்டும் தடை உத்தரவாம். ரெண்டு எழுத்தார் தயாரித்துள்ள படங்கள் மட்டும் பார்க்கப்படலாமாம். ஆனால் 'யூராசிக் பார்க்' போன்ற படங்கள் என்றால் ரெண்டு எழுத்தாரே தருவித்து திரையிடுவினமாம்.

ஜனாதிபதித் தேர்தலிலை போட்டியிடப் போவதாக ஒரு தமிழ் அமைப்பு பரபரப்பு காட்டினது வாபஸ் பெறுவதற்கு வாங்கும் பேரம் நடத்தவே எண்ட விசயம் இப்ப பளிச்சாகிப் போச்சுது. இதுக்காக பாவம் அமுதரின் பாரியார் பெயரையும் இழுத்ததுதான் தேவையில்லாத வேலை பாருங்கோ.

கொழும்பிலை நடந்த பச்சை அணி பிரசாரக் கூட்டத்திலை ரெண்டு எழுத்தை தாக்கிற மாதிரி இனவாதம் தெறிச்சதாம். அதிலை முன்னுக்கு நிண்டது முன்னாள் தலைநகர பிதாதானாம்.

தலை நகரில் அதிகார முன்னணிக்கூட்டம் ஒண்டு. தலைவி முதல் முக்கிய சிறியர் உட்பட எல்லோரும் தமிழ் மொழிபெயர்ப்போடை பேசினவையாம். ஆனால் கல்விக்கு பொறுப்பானவர் மட்டும் தமிழ் மொழி பெயர்ப்பு தேவையில்லை எண்டு போட்டு பேசினவர் எண்டு தகவல்.

ஏற்கனவே எடுத்த முடிவை. அந்த சபைக்கூட்டம் இந்தச் சபைக் கூட்டம் எண்டு இழுத்தடிச்சுப் போட்டு அறிவிக்க நினைச்சதாம் மலைப்பகுதி தனித்துவக் கட்சி. அப்படி அறிவிச்சாத்தானே அவசரமாய் முடிவு செய்யாமல் ஆற அமர யோசிச்சவை எண்டு அபிப்பிராயம் வரும்.

பதவி போனாலும் தங்கும் வாசஸ்தல சொகுசை விட்டுக் கொடுக்காமல் அங்கேயே தங்கியிருக்கினமாம் முன்னாள் தமிழ் வெகுஜனப் பிரதிநிதிகள். 'படையோடு சேர்ந்து நிக்கிற ஆட்களோடை சேரமாட்டம் எண்டு சொன்ன தமிழ் குழு, படை பாதுகாப்போடை இருக்கிற வாசஸ்தலத்தைவிட்டு வெளியே வர விரும்பேல்லையாம். 'அங்கையே இருக்க விடுங்கோ. உங்களுக்காக ஜனாதிபதித் தேர்தலிலை பிரசாரம் செய்வம்' எண்டு விண்ணப்பித்துள்ளார்களாம். பேச்சுக்கு ஒண்டும் குறைச்சல் இல்லை.

முந்தி யாழ்ப்பாணத்திலை ஒரு நகைச்சுவைப் பாட்டு உலாவினது.

"காணியை வித்து பூமியை வித்து
கட்டின பெண்டில் தாலியை வித்து
கொழும்பில்தானே சுருட்டுக்கடை போடுறார்
ஐயா கொழும்பில் தானே சுருட்டுக்கடை போடுறார்"

இப்ப கனடாவரையுமல்லோ எங்கடை ஆட்கள் கடை போடத் தொடங்கீட்டினம். பாட்டை மாத்திப் பாடவேண்டியதுதான்.

# ராஜீவ் கொலையும் – ஒரு கரும்புலியும்

## பலியான தானுவுக்கு மறைமுகமான புகழாரம்?!





மத்தியில் தானு, மாலையுடன்.

இயந்திரத்தின் மெல்லிய ஒலியைத் தவிர மற்றும்படி நிசப்தமே எங்கும் நிறைத்திருந்தது.

"நீண்ட பயணம்" போகப் புறப்பட்டுவிட்ட ஒரு கரும்புலியை வழியனுப்பச் சென்றுகொண்டிருந்த ஒரு பயணம்.

எல்லோரும் அமைதியாக இருந்தார்கள். ஆனால் சிந்தனைகள் ஓடிக் கொண்டிருந்தன.

அந்தக் கரும்புலியின் மனத்திரையில், கொடூரமான அந்தக் காலம்..

தெருத் தெருவாகப் பிணங்கள், யுத்த டாங்கிகளின் இரும்புச் சங்கிலிகளால் நெரிக்கப்பட்ட உடலங்கள், கற்பழிக்கப்பட்ட பெண்கள், சீர்குலைந்து போயிருந்த தமிழீழம், எல்லாமே வந்து போயின.

அவற்றை நினைக்க நினைக்க தனக்குரிய அந்தத் தாக்குதல் திட்டம் மனதுக்குள் விரிந்தது. செயல்முறையில் சொல்லித் தரப்பட்டதையே அந்தக் கரும்புலி திரும்பத் திரும்ப மனப்பாடம் செய்துகொண்டிருந்தது.

எந்தப் பிசகுமில்லாமல் அதனைச் செய்து முடிக்க வேண்டும் என்ற வேட்கையே அந்தக் கரும்புலியை ஆட்கொண்டது. அதனைச் சுற்றியே அந்தக் கரும்புலியினது நினைவுகள் வலம்வந்து கொண்டிருந்தன.

சிந்தனை வயப்பட்டிருந்த நீண்ட அமைதியினால் அருகில் யாருமற்றது போன்ற தனிமையுணர்வு எழ தானறியாமலேயே ஒரு பாடலை அந்தப் போராளி உரத்துப் பாடிவிட்டார்.

பின்னாலிருந்து சிரிப்பொலி பரவி வாகனத்தை நிரப்பியபோது சுதாகரித்துக் கொண்டு நிறுத்திக்கொண்ட அந்தப் பாடல்..

"பிரபாகரன் நினைத்தது நடக்கும் அவன் புலிப்படை நெருப்பாற்றை நீந்திக் கடக்கும்.."

அந்தப் பயணம் முடிந்து எல்லோரும் வழியனுப்பிவைக்க அடுத்த பயணம் தொடர்ந்து போய் அன்றொரு நாளில் அந்தக் கரும்புலி போயேவிட்டது.

**எங்கள் மண்ணுக்கு "இருண்ட நாட்களை"த்தந்த போராட்டத்தின் பெரியதொரு தடைக்கல்லை அந்த கரும்புலி கட்டி அணைத்துத் தகர்த்த போது–**

எங்கள் போராட்டத்தின் 'வரலாற்றுப் பெருமை' ஒன்றுக்கு அது உரித்துடையதாகியது.

அடுத்து வந்த நாட்களில்..

அந்த நடவடிக்கைக்குப் பொறுப்பாக இருந்த 'அந்த ஒரு' வீரன் அங்கிருந்தபடி செய்தி அனுப்பினான்.

கடைசி நாள்வரை அதே பாடல் தானாம் அந்தக் கரும்புலியின் வாயில்.

"பிரபாகரன் நினைத்தது நடக்கும் அவன் புலிப்படை நெருப்பாற்றை நீந்திக் கடக்கும்"

சில தாக்குதல் நடவடிக்கைகளுக்கு புலிகள் உரிமை கோருவதில்லை. ஆயினும் ஒரு காலகட்டத்தின் பின்னர் மறைமுகமான 'உரிமை கோரல்கள்' வெளியாகும்.

அமுதர் கொலையை உடனே மறுத்தபோதும் பின்னர் மறைமுகமாக ஒப்புக் கொண்டனர்.

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் கொலை விவகாரத்திலும் இந்திய அரசின் குற்றச்சாட்டுக்களை புலிகள் முற்றாக மறுத்தனர்.

பொட்டம்மான் என்று யாருமே தமது இயக்கத்தில் கிடையாது என்று புலிகளது பிரதித் தலைவராக இருந்த மாத்தையா மறுத்திருந்தார்.

பின்னர் அதே மாத்தையாவை கைது செய்த புலிகளது உளவுப் பிரிவுத் தலைவர் என்று பொட்டம்மானின் பெயர் பிரபலமானதோடு, புலிகளது பிரசார சாதனங்களிலும் பொட்டம்மான் முக்கியத்துவம் பெற்றார்.

அது மட்டுமல்ல, 'பொட்டு' என்ற பெயரில், உளவுத்துறை புலிகளது தியாகங்கள் பற்றியும் அவர் புலிகளது ஏடுகளில் எழுதியுள்ளார்.

இப்போது ராஜீவ் கொலை விவகாரத்தில் புலிகளிடமிருந்து மற்றொரு மறைமுக தகவல்:

'எழுத முடியாத காவியங்கள்' என்ற தலைப்பில் உரிமை கோரப்படாத தாக்குதல்கள் பற்றி புலிகளது யாழ்ப்பாண பத்திரிகையில் வெளியான கட்டுரை உலகத் தமிழர் பத்திரிகையில் 01.09.94 அன்று வெளியாகியுள்ளது.

கரும்புலிகளது தியாகங்களை போற்றுவதும், அர்ப்பணிப்புக்களை எடுத்துக் காட்டுவதும் அதன் நோக்கமாகும்.

எழுத முடியாத காவியங்கள் என்பது உரிமை கோரப்படாத தாக்குதல்களில் பலியான கரும்புலிகளின் நடவடிக்கைகளையே குறிக்கிறது.

பல தாக்குதல்கள் பற்றி அதில் மறைமுகமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

'இயந்திர ஒலி' என்பது கடலில் படகு செல்வதையும், 'இருண்ட நாட்கள்' என்பது இந்திய அமைதிப் படை வடக்கு- கிழக்கில் நிலை கொண்டிருந்த காலத்தையும் குறிப்பதாக கருதலாம்.

அந்த கட்டுரையில் ராஜீவ் கொலையை குறிப்பிடுவதாக கருதப்படும் பகுதி இங்கு தரப்படுகிறது.

# 'சந்திரிக்கா மீதான நம்பிக்கை அவநம்பிக்கையாகலாம்'

## புலிகளின் கனடா ஏடு தெரிவிப்பு

அரசு–புலிகள் பேச்சுவார்த்தை பற்றிய செய்திகள் தென்னிலங்கையில் அரசினாலும் அரசு சார்பு வெகுஜனத் தொடர்பு சாதனங்களாலும் முக்கியத்துவம் கொடுத்து பிரசுரிக்கப்படுகின்றன.

அதே சமயம் யாழ்ப்பாணத்திலும், வெளிநாடுகளிலும் உள்ள விடுதலைப் புலிகளது பிரசார சாதனங்களில் இருவித போக்குகள் காணப்படுகின்றன.

பிரதமர் சந்திரிக்காமீது தமிழ் மக்கள் நம்பிக்கை வைத்திருப்பதால் புலிகளும் சந்திரிக்காமீதான நேரடி விமர்சனங்களை தவிர்த்து படைகள் மீதான விமர்சனங்கள் மற்றும் தாக்குதல்கள்மூலம் அரசின்மீது முழு நம்பிக்கை வைப்பது சரியல்ல என்பதுபோன்ற கருத்தை ஏற்படுத்தும் வகையில் பிரசார உத்திகளை யாழ்ப்பாணத்தில் கையாளுகின்றனர்.

அதே சமயம் வெளிநாடுகளில் இருந்து வெளியாகும் புலிகளது பத்திரிகைகளில் தமிழீழக் கோரிக்கையை ஒருபோதும் விட்டுக்கொடுக்க மாட்டோம் என்பது வலியுறுத்தப்படுவதோடு, பிரதமர் சந்திரிக்காமீதும் சந்தேகம் எழுப்பப்படுகிறது.

15.09.94 அன்று கனடாவில் இருந்து வெளிவரும் புலிகளது உலகத் தமிழர் பத்திரிகையில் வெளியாகியுள்ள கண்ணோட்டம் இங்கே தரப்படுகிறது:

"அப்பா விதைத்தது, அம்மா வளர்த்தது, மகள் வெட்டுவாரா?" என்ற தலைப்பில் இதனை வெளியிட்டுள்ளார்கள்.

வெளிநாடுகளில் இருந்துவரும் புலிகளது பத்திரிகைகளில் 'உலகத் தமிழர்' மிக முக்கியமானதாகும். மாதத்தில் இரு தடவை தவறாது வெளிவருவதுமாகும்.



சிறிலங்காவின் பத்தாவது பாராளுமன்றத்துக்கான (நடந்துமுடிந்த) தேர்தல் தமிழ் ஈழத்துக்கு உள்ளேயும், வெளியேயும் அரசியல் மட்டத்தில் ஒரு புதிய நம்பிக்கையை உருவாக்கியுள்ளது.

கிட்டத்தட்ட ஒரு அரை நூற்றாண்டு காலமாகப் புரையோடிப் போய்விட்ட இனப் பிரச்சினைக்கு இத்தேர்தலில் வெற்றிவாகை சூடி பதவிக்கு வந்துள்ள சந்திரிகா குமாரணதுங்காவின் தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணி ஒரு அரசியல் தீர்வை முன்வைத்து தமிழ்–சிங்கள இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணப் போகிறது என்பதே அந்த நம்பிக்கையாகும்.

இலங்கையின் அரசியல் வரலாற்றை பின்நோக்கிப் பார்ப்போமேயானால், அதை இரைமீட்டு அசைபோட்டுப் பார்ப்போமேயானால், இவ்வித நம்பிக்கை காலத்துக்குக் காலம் குறிப்பாக ஆட்சி மாற்றங்களை அடுத்து, துளிர்விடுவதையும், பின் அது துளிரிலேயே கருகிவிடுவதையும் நாம் பார்க்க முடிகிறது.

1960, 1965, 1977- இந்த ஆண்டுகளில் நடந்த ஆட்சி மாற்றங்கள் அல்லது ஆள் மாற்றங்கள் ஏற்படுத்திய நம்பிக்கை ஊற்றுக்கள், அசுர வேகத்தில் வரண்டு போனதை நாம் கவனிக்கலாம்.

இப்பொழுது சந்திரிகா குமாரணதுங்காவின் தலைமையிலான பொதுசன ஐக்கிய மன்னணி இனப்பிரச்சினைக்கு, வடக்கு-கிழக்கு யுத்தத்திற்கு தீர்வு காணப்படும் என்ற முழக்கத்தோடு ஆட்சிக்கு வந்துள்ளது. மீண்டும் நம்பிக்கை துளிர்விட ஆரம்பித்துள்ளது. இதுகால பரியந்தம் நிறைவேறாத நம்பிக்கை இப்போது நிறைவேறிவிடுமா? அரசியல் தீர்வு உண்மையில் சாத்தியமா?

சந்திரிகா குமாரணதுங்கா ஒரு புதிய தலைமுறையைச் சார்ந்தவர் என்பது உண்மைதான் அவரது கணவனைப் போலவே அவரும் முற்போக்குச் சிந்தனையுடையவர் என்பதும் உண்மைதான். இனப் பிரச்சினையே இல்லை என்பதை மறுத்து, இனப்பிரச்சினை இருப்பதை ஒப்புக் கொண்டு அதற்கென ஒரு அமைச்சை உருவாக்கி அதனைத் தன்னோடு வைத்துக்கொண்டிருக்கிறார். இவை யாவும் உண்மைதான்.

ஆனால் பிரதமர் சந்திரிகாவின் எண்ணங்கள் நல்லவையாக இருந்தாலும், இனப் பிரச்சனைக்கு சுமுகமான தீர்வு காணக்கூடிய நடைமுறைச் சாத்தியங்கள், அரசியல் சூழ்நிலைகள் இருக்கின்றதா என்பதே கேள்வியாகும்.

சிறிலங்காவின் அரசியல் அமைப்பு ஒற்றையாட்சியை அடிப்படையாகக் கொண்டது. இதன் அர்த்தம் என்னவென்றால் ஆட்சி அதிகாரம் நிரந்தரப் பெரும்பான்மை சிங்களவர் கைகளிலேயே இருக்கிறது. இதனை மாற்றி தமிழர் பிரதேசத்திற்குரிய ஆட்சி அதிகாரம் தமிழீழர் கைகளிலும் இருக்கவேண்டுமென்றால் சிறிலங்காவின் அரசியல் யாப்பு திருத்தப் படவேண்டும். அதற்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை வேண்டும். இந்தப் பெரும்பான்மை இன்றைய எதிர்க்கட்சியான ஐ.தே. கட்சி கொடுத்து உதவும் சாத்தியமும் இல்லை.

இனப்பிரச்சினைக்கான தீர்வில் வட–கிழக்கு இணைப்பு உயிரானது.

பிரதமர் சந்திரிகா கிழக்கில் திட்டமிட்ட சிங்கள குடியேற்றத்தின்மூலம் விடுக்கப்பட்ட பிரதேசத்தை நீக்கி சிங்களப் பகுதிகளுடன் இணைத்துவிட்டு எஞ்சியதை வடக்குடன் இணைக்கப் போவதாகக் கூறியிருக்கிறார்.

பொதுசன ஐக்கிய முன்னணியில் 11 கட்சிகள் இருக்கின்றன. இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுக்காக சுதந்திரக் கட்சி உட்பட ஏனைய கட்சிகளின் ஆதரவு சந்திரிகாவுக்கு முழுமையாக இருக்கும் என்று கூறுவதற்கல்ல, இன்னும் சொல்லப்போனால் பொதுசன ஐக்கிய முன்னணிக்குள் இருக்கும் தீவிர பௌத்த–சிங்கள இனவாதிகள் இனப்பிரச்சினைக்கான தீர்வை எதிர்க்கக்கூடும். முடிந்தால் சந்திரிகாவின் கட்சித் தலைமையை மாற்றக்கூடும்.

பிரதமர் சந்திரிகாவின் எந்தவொரு அரசியல் தீர்வையும் ஐ.தே.கட்சி அரசியல் இலாபத்திற்காக எதிர்க்கக்கூடும். அந்த சாத்தியம் நிறைய இருக்கிறது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இதுவரை 6,000திற்கு மேற்பட்ட விடுதலைப் புலிகள் தங்கள் இன்னுயிரை அர்ப்பணம் செய்திருக்கிறார்கள். 20,000த்துக்கும் மேலான மக்கள், குழந்தைகள் இறந்திருக்கிறார்கள். 15,000த்துக்கும் மேலான மக்கள் தென் தமிழீழத்தில் காணாமல் போயிருக்கிறார்கள்.

பலகோடி பெறுமதியான சொத்துக்கள் நாசமாக்கப்பட்டிருக்கின்றன. இத்தகைய மகத்தான தியாகத்திற்குப் பின்பும்- இழப்புக்குப் பின்பும் சுதந்திர தமிழீழத்துக்குக் குறைவான அரைகுறைத் தீர்வை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்வார்களா என்பது கேள்வி.

எனவே சமாதான வழிகளில், சாத்வீகமான முறைகளில், பேச்சுவார்த்தைகள் மூலம் இனப்பிரச்சினைக்கு பிரதமர் சந்திரிகா குமாரணதுங்கா தீர்வு கண்டுவிடுவார் என்ற நம்பிக்கை, கடந்த காலங்களில் நடந்தவை போன்று, அவநம்பிக்கையாக மாறிவிடக்கூடிய சாத்தியக் கூறுகளே இன்று இருக்கின்றன.

இனப்பிரச்சினையை யதார்த்த பூர்வமாக வரலாற்றுப் பின்னணியில் ஆராய்ந்து சிந்தித்துப் பார்ப்பவர்களுக்கு இந்த உண்மை புரியும்.

இன்னும் சொல்லப்போனால் ஆயுத பலத்தால் அமுல் செய்ய முடியாமல் போன சிறிலங்காவின் மேலாதிக்கத்தை பேச்சு வார்த்தை என்ற போர்வையின் கீழ் பிரதமர் சந்திரிகா வடக்கிலும்- கிழக்கிலும் நிலை நாட்டலாம் என்ற நம்பிக்கையுடன் முயற்சிக்கிறாரா என்ற சந்தேகமும் எழுகிறது.

### எக்ஸ்ரே றிப்போர்ட் தொடர்ச்சி

அரச தரப்பினர் "சேச்சே அப்படி ஒன்றும் கிடையாது" என்று மறுக்கவேண்டி ஏற்பட்டு விட்டது.

நியாயமே என்று மக்கள் நம்புகின்ற வகையில் பிரசாரங்களை நடத்துவது வழக்கம்.

அதே சமயம், கடற்படையினரது

## புலிகளின் துல்லியமான நகர்வு– தர்மசங்கட நிலையில் அரசாங்கம்!

போர் நிறுத்தம், போர் நடவடிக்கை இடை நிறுத்தம் என்ற பதங்களின் வித்தியாசம் புரியாமல் குழம்புவதால் ஏற்படும் அரசியல் பாதிப்புக்களை உணர்த்த அரசாங்கம் ஜனாதிபதித் தேர்தல் நேரத்தில் 'ரிஸ்க்' எடுக்க விரும்பவில்லை.

அதனால் ஒரேயடியாக மறுப்புத் தெரிவித்தது.

ஆயினும், பாதுகாப்புப்படை பேச்சாளர் வடக்கே இராணுவ நடிவடிக்கை இடைநிறுத்தம் என்ற செய்தியை மீண்டும் உறுதிப்படுத்தினார்.

கடந்த வாரம் வடக்கே பாரதூரமான சம்பவங்கள் எதுவும் நடைபெறவில்லை என்றும் சுட்டிக்காட்டியிருந்தார்.

அவரது கருத்து வெளியிடப்பட்ட 9.10.94 அன்று வெற்றிலைக்கேணியில் கடற்படையினருக்கு உணவு கொண்டுசென்ற கப்பல் கடற்புலிகளால் மூழ்கடிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் நடந்த சனிக்கிழமை இரவு புலிகளின் குரல் வானொலி பின்வரும் செய்தியை வெளியிட்டது:

"கடந்த 9 மாதங்களில் வட தமிழீழத்தில் 43 மீனவர்கள் கடற்படையால் கொல்லப்பட்டுள்ளனர். அதிகமானோர் வடமாராட்சியில் கொல்லப்பட்டனர். பல மீனவர்களைக் காணவில்லை. பலர் படுகாயம்."

தமது நடவடிக்கைகள் பேச்சு முயற்சிகளை குழப்புவதாக பொது மக்கள் நினைக்கக் கூடாது என்பதற்கான சிறந்த உத்தியாகவே அந்தச் செய்தி நோக்கப்படவேண்டும்.

புலிகள் தாம் ஒரு நடவடிக்கையை செய்வதற்கு முன்னர் அந்த நடவடிக்கை நடவடிக்கைகள் பற்றிய புலிகளது குற்றச்சாட்டுக்கள் பொய்யல்ல என்பதுதான் புலிகளின் பிரசாரத்திற்கு பலமான விசயம்.

'போர் இடைநிறுத்தம் கிடையாது' என்ற மறுப்புக்கும் ஒரு அடிதான் வெற்றிலைக்கேணி தாக்குதல்.

அரசாங்கத்தின் பாடுதான் தர்மசங்கட நிலை.

ஜனாதிபதித் தேர்தலும் நெருங்கி வருவதால் பேச்சு முயற்சிகளை உடனே முறியவிடவும் முடியாது.


அதேசமயம் புலிகளுக்கு சாதகமாக அரசு நடப்பதாக ஒரு எண்ணம் ஏற்பட்டுவிட இடமளித்து விடவும் கூடாது.

அரசாங்கத்தின் இந்த இக்கட்டான நிலையை துல்லியமாகக் கணக்கிட்டு புலிகள் தமது நகர்வுகளை மேற்கொள்கின்றனர்.

எது நடந்தாலும் பேச்சுத் தொடரும் என்று அரச தரப்பில் சொல்லப்பட்டாலும்கூட புலிகள் இராணுவரீதியில் எது செய்தாலும் அரசாங்கம் தெற்கே திணறுவது மட்டும் உறுதி.

புலிகளை எதிர்த்தவர்களைவிட அணைத்தவர்களே அதிகம் பாதிக்கப்பட்டார்கள் என்று புலிகளுக்கு எதிராக கூறப்படும் கருத்து தம் விடயத்திலும் உண்மையாகி விடக்கூடாது என்பதிலும் புதிய அரசாங்கம் கவனமாக இருப்பதாகவே தெரிகிறது.

அரசாங்கத்தின் அடுத்த நகர்வு எப்படியிருக்கப் போகிறது என்பதை வைத்தே அதன் புத்திசாலித்தனத்தைக் கணிப்பிட முடியும்.



# போட்டியின்றி நிராகரிக்கப்படவேண்டிய ஜனாதிபதிப் பதவி!

அலசுவது – இராஜதந்திரி





ஜனாதிபதித் தேர்தலுக்காக பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஐக்கிய தேசியக் கட்சியும் தம்மை தயார்படுத்தியவையாக இருக்கின்றன.

1994ம் ஆண்டு ஒரு தேர்தல் ஆண்டாக இருக்குமென்று இந்த ஆண்டின் ஆரம்பத்திலேயே ஜனாதிபதி டிங்கிரிபண்டா விஜேதுங்க குறிப்பிட்டிருந்தார்.

அவ்வாறு அவர் குறிப்பிட்டதோடு மட்டுமல்லாமல் தாமே ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளரெனவும் திரு.டி.பி.விஜேதுங்க கூறியிருந்தார்.

ஆனால் இன்று நிலைமை மாறியுள்ளது. நடந்துமுடிந்த பொதுத் தேர்தல் ஐக்கிய தேசியக் கட்சியை தோல்வியடையச் செய்துள்ளதுடன், அக்கட்சியின் ஒவ்வொரு உறுப்பினரது செல்வாக்கையும் விளக்குவதாகவே பொதுத் தேர்தல் முடிவுகள் காணப்பட்டன.

பொதுத் தேர்தலின்போது ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க முதற்கொண்டு ஐக்கிய தேசியக் கட்சியினர் அனைவரும் மும்முரமான பிரசாரத்தில் குதித்திருந்தனர். ஆனால் கண்டி மாவட்டத்தில் ஜனாதிபதி விஜேதுங்காவின் தொகுதியில் தோல்வி கிட்டியிருந்தது.

ஜனாதிபதி டிங்கிரிபண்டா விஜேதுங்க ஜனாதிபதியாகப் பதவியேற்றது முதற்கொண்டு தமது கண்டிய மேலாதிக்க கருத்துக்களையே வலியுறுத்தி வந்தார். திணைக்களங்கள், மற்றும் தமது நேரடிக் கண்காணிப்பின்கீழ் வரும் நிர்வாக அலகுகள் என்பவற்றில் கண்டியச் சிங்களவர்களையே நியமித்து தமது குறுகிய எதிர்பார்ப்புக்களுக்கு அவர் முக்கியமளித்துவந்தார்.

ஜனாதிபதி விஜேதுங்கவின் இக்கண்டிய மேலாதிக்க கண்ணோட்டம் தென்னிலங்கையிலும் அவருக்கெதிராக கசப்புணர்வுகளை ஏற்படுத்தியிருந்தது.

இது தவிர பொதுத் தேர்தலுக்கு முன்னர் இடம்பெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தல் பிரசாரங்களின்போதுகூட இனரீதியிலான பிரசாரத்துக்கே திரு. விஜேதுங்க முக்கியமளித்திருந்தார்.

இந்த இன ரீதியிலான பிரசாரம் மூலம் திரு.விஜேதுங்க இலங்கையின் பெரும்பான்மை சிங்கள மக்களை தம்பால் கவர முடியுமென்று எதிர்பார்த்தார். ஆனால் அவரது இந்த எதிர்பார்ப்புக்கு பலத்த அடி கிடைப்பது போலவே நடந்து முடிந்த தேர்தல் முடிவுகள் காணப்படுகின்றன.

சிங்கள மக்களை இனரீதியான கருத்துக்களைக்கூறிக் கவர முடியாதென்பதனையே நடந்து முடிந்த தேர்தல்கள் புலப்படுத்தியுள்ளன. அத்துடன் இன்று சிறுபான்மை மக்களின் அனுசரணையின்றி எந்தவொரு தேசியக் கட்சியும் பெரும்பான்மை பலத்துடன் ஆட்சிக்கு வர முடியாதென்பதனையும் தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தியுள்ளன.

## தனிப்பட்ட பலத்தை பரீட்சிக்க தயாராகும் சந்திரிக்கா–காமினி

எனவே ஜனாதிபதி திரு.டி.பி.விஜேதுங்கவின் பிற்போக்கான குறுகிய பிரசாரங்களுக்கு பலத்த அடி விழுந்த நிலையில் அவரை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராக நிறுத்தும் பட்சத்தில் ஐ.தே.க. படு மோசமான தோல்வியையே தழுவும் என்பது தெட்டத் தெளிவாகப் புலனாகியிருந்தது.

இதன் காரணமாகவே திரு.காமினி திசாநாயக்கா ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராக ஐ.தே.கவினால் நிறுத்தப்பட்டுள்ளார்.

இந்நிலையில் திடீரென மிகவும் உயரச் சென்ற பலூன் ஒன்று காற்றுப்போன நிலையில் ஆடியசைந்து கீழிறங்கி வந்துகொண்டிருக்கும் நிலையிலேயே திரு.டி.பி.விஜேதுங்க காணப்படுகின்றார்.

திரு.காமினி திசாநாயக்காமீது நம்பிக்கை வைத்து அவரை ஐ.தே.கவின் ஜனாதிபதி வேட்பாளராக ஐ.தே.கவினர் நிறுத்தியுள்ளனர்.

ஐ.தே.கவைப் பொறுத்தவரை திரு.காமினி திசாநாயக்கா ஓர் 'ஆரோக்கியமான இளம் அரசியல்வாதி'யாகவே அரசியலில் காலடி எடுத்து வைத்திருந்தார். முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனாவினால் காமினி நன்கு தட்டிக்கொடுக்கப்பட்டிருந்தார்.

இலங்கையின் விவசாய, நீர்ப்பாசனத் துறைக்கு ஒரு சவாலாக இருந்த மகாவலி அபிவிருத்தித் திட்டத்தை திரு.காமினி திசாநாயக்காவின் பொறுப்பில் திரு.ஜயவர்த்தனா கையளித்திருந்தார்.

காமினியும் அத்திட்டத்தை மிகவும் குறுகிய காலப் பகுதியில் நிறைவு செய்து தமது திறமையை வெளிப்படுத்தியிருந்தார்.

ஆயினும் காலப்போக்கில் காமினி ஐ.தே.க.விற்குள் ஒரு சர்ச்சைக்குரிய நபராக மாறியிருந்தார். கூடவே வடக்கே யாழ் பொதுசன நூல் நிலையம் தீக்கிரையான சம்பவத்துடனும் திரு.காமினி திசாநாயக்கா சம்பந்தப்பட்டிருந்தார்.

மகாவலி அபிவிருத்தித் திட்டம் குறுகிய காலப்பகுதியில் நிறைவேறியிருந்தது. ஆயினும் மகாவலித் திட்டத்துக்கென ஒதுக்கப்பட்ட நிதியில் குறிப்பிட்ட தொகையை திரு.காமினி ஏப்பம் விட்டிருந்தார் எனவும் 'குற்றக் கணைகள்' ஏவப்பட்டிருந்தன.

மறைந்த ஜனாதிபதி ஆர்.பிரேமதாசாவின் ஆட்சிக் காலப் பகுதியே காமினியின் கடந்தகால அரசியல் வாழ்க்கையில் ஓர் இருள் சூழ்ந்த நிலையை ஏற்படுத்தியிருந்தது.

திரு.காமினி திசாநாயக்கா, மறைந்த ஜனாதிபதி ஆர்.பிரேமதாசாவுடன் மிகுந்த பகைமை கொண்டிருந்தார். திரு.பிரேமதாசாவும், காமினியை நன்கு ஓரங்கட்டியிருந்ததுடன் ஐ.தே.க.விலிருந்தும் அவரை மறைந்த லலித் அத்துலத்முதலி சகிதம் வெளியேற்றியிருந்தார்.

ஐ.தே.க.விலிருந்தும் வெளியேற்றப்பட்ட நிலையில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி என்ற பெயரில் லலித், காமினி ஆகியோர், ஏனைய பிரேமா அதிருப்தியாளர்கள் சகிதம் புதிய கட்சியை ஆரம்பித்திருந்தனர்.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியினர் பிரேமதாசா தலைமையிலான ஐக்கியதேசியக் கட்சிக்கு எதிராக ஏனைய அரசியல் கட்சிகளுடனும் கூட்டுச் சேர்ந்திருந்தனர்.

அப்போது பிரேமா அரசுக்கெதிரான கூட்டங்களில் காமினி, லலித் ஆகியோர் சந்திரிகா, சிறிமாவோ ஆகியோருடன் ஒரே மேடையில் வீற்றிருந்த காலமும் உண்டு.

ஆனால் தற்போது காமினி மீண்டும் தனது பழைய இடத்துக்குப் போயிருப்பதுடன் சந்திரிகாவுக்கு எதிராக ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராகவும் போட்டிக்கு நிற்கின்றார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் சார்பில் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராகப் போட்டியிடவிருக்கும் பிரதம மந்திரி சந்திரிகா, தமது பொதுத் தேர்தல் பிரசாரத்தில் இலங்கையில் உள்ள நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை அகற்றுவதே தமது பிரதான நோக்கமாகும் எனக் குறிப்பிட்டிருந்தார்.

இதே வேளை திரு.காமினி திசாநாயக்கா முன்பு ஐ.தே.கவிலிருந்து விலகி ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியை ஆரம்பித்த காலத்தில்கூட நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறை இலங்கைக்கு ஒத்துவராததொன்றெனத் தெரிவித்திருந்தார்.

அன்று காமினி, லலித் ஆகியோர் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைக்கெதிராக தீவிர பிரசாரங்களை மேற்கொண்டிருந்தனர். இதுதவிர ஜனாதிபதி பிரேமதாசாவை பதவியிலிருந்தும் அகற்றும் வகையில் அவருக்கெதிராக பாராளுமன்றத்தில் குற்றவியல் பிரேரணையொன்றையும் லலித், காமினி ஆகியோர் கொண்டு வந்திருந்தனர்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை அகற்ற வேண்டும் என்று கோஷமிட்ட சந்திரிகா, காமினி ஆகியோரே இன்று அப்பதவியைக் கைப்பற்றுவதற்கான போட்டியில் குதித்திருக்கக் காணப்படுகின்றனர்.

இன்று காணப்படும் அரசியல் அமைப்பின் பிரகாரம் ஜனாதிபதி ஆட்சியை அகற்றுவதற்கு பாராளுமன்றில் ஆளுங்கட்சி நல்ல உறுதியான பலத்துடன் இருக்கவேண்டியது மிகவும் இன்றியமையாததாகின்றது.

ஆனால் பொதுஜன ஐக்கிய முன்னணி பாராளுமன்றில் ஆளுங் கட்சியாக இருக்கின்றபோதிலும் பெரும்பான்மை பலத்தைக் கொண்டதாகக் காணப்படவில்லை.

அதேவேளை எதிர்க்கட்சியில் இருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் அனுசரணையுடனேயே தன்னைப் பலப்படுத்தியதாக இருக்கக் காணப்படுகின்றது.

இந்நிலையில் பாராளுமன்றத்தில் திருப்திகரமான பலத்தைக் கொண்டிராத நிலையில் இருக்கும் பிரதமர் சந்திரிகாவும், எதிர்க்கட்சித் தலைவர் காமினியும் ஜனாதிபதித் தேர்தலில் தமது பலத்தை எடைபோட்டுப் பார்க்க முன்வந்தவர்களாக இருக்கின்றனர்.

சந்திரிகாவும், காமினியும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை இந்த நாட்டுக்குப் பொருத்தமற்ற தென்றே குறிப்பிடுகின்றனர். அத்துடன் இந்த ஆட்சிமுறை தேவையற்றதொன்றெனவும் தெரிவிக்கின்றனர்.

எனவே பிரதமராகவும், எதிர்கட்சித் தலைவராகவும் இருக்கும் சந்திரிகா, காமினி ஆகியோர் உண்மையிலேயே மனப்பூர்வமாக ஜனாதிபதி ஆட்சி முறையை நிராகரிப்பவர்களாக இருந்தால் தற்போது ஜனாதிபதியாகவிருக்கும் திரு.டி.பி.விஜேதுங்க மூலமாக ஜனாதிபதி ஆட்சிமுறையை அகற்றும் சூழ்நிலைகளை உருவாக்கிக்கொள்ள முடியும்.

இது விடயத்தில் ஆளுங் கட்சியும், எதிர்க்கட்சியும் ஒற்றுமையை வெளிப்படுத்தி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் ஒத்துழைப்புடன் அரசியல் அமைப்பில் மாற்றங்களைக் கொண்டுவந்து நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை அகற்ற முடியும்.

ஆனால் சந்திரிகா, காமினி ஆகியோர் அப்படி எதனையும் செய்ய முன்வராது ஜனாதிபதிப் பதவிக்கான தேர்தலில் போட்டியிட மார்தட்டி நிற்பது, அப்பதவி மீது அவர்கள் கொண்டுள்ள மோகத்தையே புலப்படுத்துவதாக இருக்கின்றது. கூடவே இந்த இரு இளம் அரசியல்வாதிகளும் தமது தனிப்பட்ட பலத்தைப் பரீட்சிக்க முற்படுவதாகவும் ஜனாதிபதிப் பதவிக்கான அவர்களது போட்டி காணப்படுகின்றது.

இலங்கையைப் பொறுத்தவரை கடந்த 16 வருடகாலமாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறை அமுலில் இருந்து வருகின்றது.

பிரிட்டனின் வெஸ்ட் மின்ஸ்டர் (West Minstor) பாணியிலான ஆட்சி முறையைப் பெரிதும் தழுவியிருந்த இலங்கைப் பாராளுமன்ற ஆட்சி முறையை புறக்கணித்து ஒரு தனிநபரின் விருப்பு வெறுப்புக்களைப் பிரதிபலிப்பதாக நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை இருந்து வருகின்றது.

வடக்கு-கிழக்குப் பிரச்னை இன்று ஒரு தீரா நோயாக மாறியிருப்பதற்கும் ஐ.தே.க.வின் கடந்த 17 வருட கால நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையே முக்கிய காரணமாக இருக்கின்றது.

முன்னைய ஜனாதிபதிகளான ஜே.ஆர். ஜயவர்த்தனா, ஆர்.பிரேமதாசா ஆகியோரின் சொந்த நலன்களை முதன்மைப்படுத்தியதாகவே வடக்கு-கிழக்குப் பிரச்னை கடந்தகாலங்களில் அணுகப்பட்டிருந்தது.

நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதியே முப்படைகளினது நடவடிக்கைகளையும் தீர்மானிக்கும் அதிகாரத்தைக் கொண்டுள்ளனர்.

எனவே பாராளுமன்றத்தில் அரசியல் ரீதியாக கொண்டு வரப்படக்கூடிய தீர்வு முயற்சிகளுக்கு முட்டுக்கட்டைபோடும் ஒரு சக்தியாகவே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறை காணப்படுகின்றது.

இதன்காரணமாகவே கடந்த காலங்களில் இனப்பிரச்னை தீர்வு குறித்த நடவடிக்கைகளை பாராளுமன்றத்தைவிட தனி ஒரு நபரான ஜனாதிபதியே பெரிதும் தீர்மானிப்பவராக இருந்தார்.

எனவே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை என்பது நாட்டின் ஒட்டு மொத்தமான அரசியலைப் பொறுத்தவரைமட்டுமல்ல, வடக்கு-கிழக்குப் பிரச்னையைப் பொறுத்தவரைகூட ஓர் இடைஞ்சலான அம்சமாகவே இருக்கின்றது.

இந்நிலையில் புலிகளுடன் இன்றைய அரச பூர்வாங்கப் பேச்சுக்களை நடத்தலாம். பின்னர் படிப்படியாக நல்லெண்ணங்கள் தோன்றும் பட்சத்தில் அரசியல் விடயங்களையும் இருதரப்பினரும் விரிவாக ஆராயலாம்.

ஆயினும் வடக்கு-கிழக்கு பிரச்னை குறித்து நேர்த்தியான தீர்வொன்றைக் காணக்கூடிய சந்தர்ப்பங்கள் ஜனாதிபதித் தேர்தல் முடிவு, மற்றும் அதனையடுத்து வரும் அரசியல் சூழ்நிலைகள் என்பவற்றிலேயே பெரிதும் தாங்கியிருக்கின்றதெனக் கருதவேண்டியுள்ளது. ●

விசேஷ அழகுக் குறிப்புகள்

# நீங்களும் அழகிதான்!


## இதைப் படியுங்கள் முதலில்

லேடீஸ் ஸ்பெசல்



**பற்கள்:** உங்கள் உடலின் முக்கிய அம்சங்கள் பல. புன்னகை செய்யும் பற்கள் அழகாக இருந்தால் முகத்திற்கு அழகு. முடியுமானால் 3-4 சொட்டு எலுமிச்சச்சாறு, 4-5 சொட்டு கிழெண்ணெய், ஒரு டீ ஸ்பூன் கல் உப்பு, 3-4 சொட்டு, கராம்பு தைலம் இவற்றுடன் ஆரஞ்சு பழத்தோலை பொடி செய்து பற்பொடியாக நீங்களே தயாரிக்கலாம். பல் துலக்கப்பாவித்தால், பல் பளிச் சென்று வந்துவிடும்.

**கூந்தல்:** முடிதான் உங்கள் கூந்தலுக்கு அழகு. மாதம் ஒருமுறை தவறாமல்



மருதோன்றி இலை அரைத்து தலையில் தேய்த்து முழுகுங்கள். சூடான எண்ணெய் தேய்த்தால் தலைக்கு புத்துயிர் தரும். ஆறு மாதத்திற்கு ஒரு முறை முடியை ட்ரிம் செய்யவும். தலைமுடி நரைக்காமல் இருக்க மருதோன்றி நல்லது. மருதோன்றி இலை 1 கப் (அரைத்தது), கோப்பித் துள்- 1 ஸ்பூன், முட்டை-1 எலுமிச்சைசாறு-(1 பழம்) 1 எல்லாவற்றையும் கலந்து 1 மணி நேரம் ஊற வைத்து தலைமுடியில் தடவி 1 மணி நேரம் கழித்து அலச வேண்டும். தலைமுடி நரைக்காது. நன்றாக வளரும். கீரை வகைகளை சாப்பிடவும். விட்டமின் B முடிக்கு நல்லது.

**அழகுப் பராமரிப்பு:** உங்கள் புருவத்தைச் சீர்செய்யவும். நகங்களை அழகாக பேணவும். பயித்தமா ஓட்ஸ் மாவுடன் தயிர், எலுமிச்சசாறு, பிளீச்சிங் பவுடர் (Body bleaching powder) இவற்றை கலந்து உடல் முழுவதும் பூசி 1 மணித்தியாலத்திற்குப்பின் கழுவவும். பரு உள்ளவர்களுக்கு முகக்காப்புச் செய்யக்கூடாது. முகத்தில் கரும் புள்ளிகள் மறைய சிறிது ஓட்ஸ் தூளுடன் தயிர் கலந்து முகத்தில் தேய்த்து 10 நிமிடத்திற்குப் பின் கழுவவும்.

முகம் கறுத்துவிட்டால் உருளைக் கிழங்கு சாறு 1 ஸ்பூன், மோர் 1 ஸ்பூன் இரண்டையும் சேர்த்து தடவி 10 நிமிடம்வரை ஊற



வைத்து கழுவவும். கண்களை சுற்றியிருக்கும் கருவளை படம் போக தினமும் சிறிது விட்டமின் தடவி வர வேண்டும். 10 கிளாஸ் நீர் குடிக்க வேண்டும். கண்களை சுற்றி வெள்ளரிக்காய்த் துண்டுகளை வைக்க வேண்டும். பின் புன்னீர் கொண்டு கண்களை கழுவ வேண்டும்.

**உடையும்-தூக்கமும்:** ஆறு-ஏழு மணி நேரம் தூக்கம் உங்கள் அழகுக்கு அவசியமானது. நித்திரை விழிப்பது உடலுக்குக் கூடாது. பொருத்தமில்லாத உடைகளை அணிவதால் அழகியும் அவலட்சணமாகலாம். உங்கள் உடலுக்கு ஏற்ற ஆடைகளை தேர்ந்தெடுக்கவும். கண்ணுக்கு கூச்சம் தரும்படியான உடைகளை அணியக்கூடாது.

---

இருபாலருக்கும் இது போது

## கிட்டாதாயின் வெட்டென மறப்பது எப்படி?

இளவயதினரான ஆணும் பெண்ணும் ஒருவர் பால் மற்றொருவர் கவரப்பட்டு காதல் வயப்படுவது சர்வ சாதாரணம். இவ்வாறு காதலிப்பவர்கள் எல்லோருமே கலியாணம் செய்து குடியும் குடித்தனமுமாக வாழும் வாய்ப்பினைப் பெற்றுவிடுவதில்லை. பெரும்பாலான காதல் தோல்வியிலேயே முடிகின்றன.

காதலில் தோல்வி கண்ட இளமுள்ளங்கள் அனுபவிக்கும் துன்ப துயரங்கள் வர்ணனைக்கு அப்பாற்பட்டவை. நினைத்ததை முடிக்க முடியாத நிலை அடைந்தால் தங்கள் வாழ்கையினையே முடித்துவிடத்



தயங்கமாட்டார்கள். எவர் கூறும் உபதேசங்களையும் அவர்கள் கேட்கமாட்டார்கள்.

இத்தகைய காதல் தோல்வியாளர்கள் எத்தகயை வழிமுறைகளைக் கடைப்பிடித்து தங்களுடைய துயரத்தைப் போக்கலாம்...! எத்தகைய முறைகளைக் கையாளலாகாது... என்பதனை அனுபவ ரீதியான ஆய்வுகளை நடத்திய சமூகவியலாளர்கள் வகுத்துத் தந்துள்ளனர். இவை நம்மவர்களுக்கும் நல்வழிகாட்டிகளாக அமையும் என்பதனால் இங்கு அவற்றைத் தருகிறோம்:

**கடைப்பிடிக்க வேண்டிய முறைகள்:**

• மனதளவில் ஏற்பட்ட தாக்கம் உடனடியாகத் தீர்ந்துவிடப் போவதில்லை என்பதனால் சில காலம் அத்துயரில் அமிழ்ந்திருந்து விட்டு, மெல்ல மெல்ல விடுபட முயலுதல் வேண்டும்.

மனக்கசப்பு, கோபம், தன்னம்பிக்கையின்மை போன்ற உணர்வுகளில் சிறிது காலம் கழிவது தவிர்க்க முடியாது. இதற்கென ஒரு குறிப்பிட்ட காலத்தைக் கழிப்பதில் தவறில்லை.

• காதல் வயப்பட்டிருந்தபோது நீங்கள் இருவரும் எப்போதும் மகிழ்ச்சியாக இருந்தீர்கள் என்று சொல்ல முடியாது. அடிக்கடி பிணக்குகள் ஏற்பட்ட காலங்களை அடிக்கடி நினைத்துப் பாருங்கள்.

• உங்களிருவருக்குமிடையிலான உணர்வுகள் பற்றி உங்கள் முன்னாள் அன்புக்குரியவருக்கும் உங்களுக்கும் நீங்களாகவே கடிதங்களை எழுதுங்கள். ஆனால் இவை அடுத்தவருக்கு அனுப்பப்படுவதற்கல்ல... அவர்மீது கொண்டுள்ள வெறுப்பை உணர்த்துவதாக எழுதும் அக்கடிதங்களை பலதடவை வாசித்தபின் பிறர் கண்களில் படாமல் கிழித்தெறிந்துவிடுங்கள்.

• உங்கள் மனம் அப்பொழுது பட்ட காயத்திலிருந்து இப்பொழுது மெல்ல மெல்ல மாறிவருவதை உணர்வீர்கள். உங்கள் வழமையான பணிகளில் மெதுவாக ஈடுபட ஆரம்பிக்கலாம்.

• உள்ளம் உடைந்து போயிருக்கும் காலங்களில் வெளியில் நடமாடுவதில் அதிக கவனம் செலுத்துதல் அவசியம். முக்கியமாக கார், மோட்டார் சைக்கிள், சைக்கிள் போன்ற வாகனங்களைச் செலுத்துதல் நல்லதல்ல.

• உங்களைச் சூழ்ந்துள்ள பலருக்கு வெவ்வேறு பிரச்சனைகள் இருக்கலாம். அவர்களுடைய சுக துக்கங்களில் கலந்து கொள்வதன் மூலம் உங்கள் மனப் புண்ணை ஆற்றலாம். அவர்களுக்கும் உதவலாம்.

• போதுமான அளவு ஓய்வெடுங்கள். ஆனால் தனிமையைத் தவிர்ப்பது நல்லது.

• வெது வெதுப்பான நீரில் குளிக்கலாம். நல்ல உணவினை உண்ணவேண்டும். நடப்பதும் நல்ல பலனளிக்கும். முதிய அறிவாளிகளின் புத்திமதிகளைக் கேட்கலாம்.

**தவிர்க்கப்படவேண்டியவை:**

• துன்மார்க்கத்தில் வழிநடத்துவோரை அணுகுவது......................

• ஏற்கனவே உங்கள் முன்னாள் காதலரோடு ஒன்றாகத் திரிந்த இடங்கள்...

• உங்களையோ உங்கள் முன்னாள் காதலரையோ பிழை கூறுவது.... (குற்றம் குறை கூறுவதில் காலம் செலவிடுவது வீண்)

• உங்கள் இருவருக்குமிடையில் பிரிவு ஏற்படக் காரணமாகவிருந்தது எது என்பதனை உணர்வதற்கு முயலுதல்.. (உண்மையான காரணத்தை அறிவதற்கு வருடக் கணக்கில்கூட காலம் எடுக்கலாம்)


• உங்கள் முன்னாள் அன்புக்குரியவருடன் பழகுவதுபோன்ற நினைவு...

(இத்தகைய எண்ணம் நீடிக்குமானால் நீங்கள் துயரத்திலிருந்து விடபடும் காலமும் மேலும் அதிகரிக்கும்.)

---

வீட்டுக் குறிப்புக்கள்

## 'டூத் பிரஷ்' சில தகவல்கள்



காலையில் எழுந்ததும் ஒவ்வொருவரும் பற் சுத்தம் செய்கிறோம். இன்றைய நவீன வாழ்க்கையில் இதற்கு 'டூத் பிறஷ்'தான் பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றது. பற் சுத்தம் பேணப்படுவது தொடர்பாக இந்த டூத் பிறஷ்கள் எவ்வாறு பயன்படுத்தப்படவேண்டும் என்பதை பிரபல பல் வைத்தியர்கள் தந்துள்ளனர்.

• டூத் பிறஷ் இரண்டு வாரங்களுக்கொரு தடவை மாற்றப்பட வேண்டும்.

இதனால் பற் சிதைவு, முரசு கரைவது அல்லது அது தொடர்பான நோய்கள், தடிமன், குளிர் காய்ச்சல் மற்றும் மூக்குக் கும் மூளைக்கும் இடை யில் தொடரும் எலும்பளர்ச்சிக் கோளாறு (SINUSITIS) ஆகியவை ஏற்படாமல் தடுக்க முடியும்.

• பெரும்பாலானோர் டூத் பிறஷை குளியல் அறையிலேயே வைத்துவிடுகின்றனர். ஈரலிப்பான இடங்களில் எப்போதும் நுண் கிருமிகள் விரைவாகப் பரவும் அபாயம் இருப்பதனால் இவற்றை படுக்கை அறைகளில் வைப்பதே நல்லது.

• குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் தனித்தனி பிரஷ்கள் வைத்திருப்பர். இவற்றை ஒன்றுடன் ஒன்று உரசாமல், ஓரளவு தூரத்தில் வைத்திருத்தல் ஒருவருக்குள்ள பல் வியாதி ஏனையோருக்கும் பரவாமல் தடுப்பதற்கு உதவும்.



ஜீன்ஸ் போன்ற முரட்டுத் துணிகளை சலவை செய்ய முடியாமல் தவிக்கிறீர்களா? அத்தகைய முரட்டுத் துணிகளை சிறிது நேரம் பிரிட்ஜினுள் வைத்திருந்து பிறகு எடுத்து சலவை செய்யுங்கள்.



இரவு தூங்குவதற்கு முன், ஒரு டம்ளர் பாலில் ஒரு மேஜை கரண்டி தேன் கலந்து குடித்து விட்டு படுக்கைக்குச் செல்லுங்கள். எவ்வளவு களைப்பு இருந்தாலும் போய் விடும். தூக்கமும் நன்றாக வரும். காலையில் ஒரு புத்துணர்ச்சியுடன் எழுந்திருக்க முடியும்.

---

## நீங்களும் செய்துபாருங்கள் எஸ்-எஸ்

### கைவேலைப் பகுதி

### தாமரைப் பூ

**தேவையான பொருட்கள்:**

வெளிரிய நாவல்நிற ஸ்ரொக்கிநெற் 1
தங்கநிறக் கம்பி 1 டசின்
கட்டுக்கம்பி
நூல் கட்டுவதற்கு
கம்ரேப் ஒட்டுவதற்கு
கடதாசி அட்டை 1 1/2x1 1/2 அங்குல சதுரம்.

**எடுக்கப்படவேண்டிய அளவுகள்:**

7 அங்குல அளவில் 27 கம்பித் துண்டுகள்
10 அங்குல அளவில் 1 கம்பித்துண்டு
8 அங்குல அளவில் 3 கம்பித்துண்டுகள்

**செய்முறை:**

மேற்கூறப்பட்ட அளவின்படி கம்பிளை வெட்டி எடுத்து தனித்தனியாக இரு நுனிகளும் சேரும் வண்ணம் குறட்டினால் முறுக்கி படம் 1 வடிவத்தின்படி அமைத்துக் கொள்ளவும். இவ்வாறு 27 துண்டுகளையும் அமைக்கவும். அமைக்கப்பட்ட இதழ்களுக்கு வெளிரிய நாவல்நிற ஸ்ரொக்கிநெற் போட்டு கட்டவும்.

படம் 2ல் காட்டிய அளவின்படி 1 1/2x 1 1/2 அங்குல சதுர கடதாசி அட்டையை எடுத்து வட்டவடிவமாக வெட்டிக்கொள்ளவும். வெட்டி எடுக்கப் பட்ட கடதாசி அட்டைக்கு மஞ்சள் நிற துணியினால் அட்டையை மறைத்து கீழ்ப்பகுதிக்கு கட்டுக்கம்பியினால் இறுக்கமாகச் சுற்றிக் கட்டவும். கட்டிய கட்டுக் கம்பிதான் தண்டுப் பகுதியாகும்.


இவ்வாறு அமைத்த தண்டுப் பகுதியில் 7 அங்குல அளவிலான (படம் 1 வடிவ) இதழை வைத்து நூலினால் சுற்றி கட்டி அடுத்து அதே இதழ்களை அருகருகே வைத்து கட்டவும். கட்டும்போது அவதானிக்கவேண்டியது V வடிவ இடைவெளிகளைப் பார்த்து இதழ்களை கட்டுதல் வேண்டும். இவ்வாறு 27 இதழ்களும் கட்டப்பட்ட பின்னர் கம்ரேப் சுற்றவும்,

• குறிப்பு: கட்டும் நூல்கள் யாவும் ஒரே இடமாக அமைதல் வேண்டும். நூல்கள் தெரியாமல் கம்ரேப்பினால் சுற்றவும்.

இவ்வாறு அமைத்த தாமரைப் பூவின் இதழ்களை சிறிது கீழ்நோக்கி விரிக்கவும்.

**இலை:**

மேற்குறிப்பிட்ட அளவிலான இலைகளை படம் 2ல் வடிவமாக அமைத்து பச்சை நிற ஸ்ரொக்கிநெற் போட்டுக் கட்டி கட்டுக்கம்பியினால் தண்டுப் பகுதியை அமைத்து கம்ரேப் சுற்றிக் கொள்ளவும்.




இவ்வாறு மற்றைய இலைகளையும் அமைத்து தாமரைப் பூவுடன் இலைகளை இணைத்துக் கொள்ளவும். இவ்வாறு அமைத்த தாமரைப் பூவினை சிறிய பிளாஸ்ரிக் வாய் அகன்ற மலர்சாடியில் வைத்துக்கொண்டால் தடாகத்தில் மலரும் தாமரைப்பூ தண்ணீரின்றி தனியாக ஒரு அழகாக இல்லத்தில் மலர்ந்துள்ளது அல்லவா? செயற்கையான பூவினையும் இயற்கை யைப்போல் எம் மங்கையரால் ஏற்படுத்த முடிந்தாகிவிட்டது தானே?

---

## சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது—சுகந்தினி

### கோவா சட்னி

**தேவையான பொருட்கள்:**

கோவா-1/4 கிலோ
எண்ணெய்- 4 மேசைக்கரண்டி
வெந்தயம்- 2 மேசைக்கரண்டி
கடுகு- ஒரு மேசைக்கரண்டி
புளி (கரைசல்)-1/2 கப்
பெரிய வெங்காயம்-2
பெருங்காயம்-1/4 தேக்கரண்டி
மஞ்சள்-1/2 தேக்கரண்டி
பூண்டு-3 பல்லு
கொத்தமல்லி-சிறிதளவு
உப்புத்தூள்-தேவையான அளவு

**செய்முறை:**

வாணலியில் சிறிதளவு எண்ணெய் விட்டுக் கொதித்ததும், கோவாவை பொடியாக நறுக்கி, வதக்கி எடுக்கவும். அடுத்து, மீதியுள்ள எண்ணெயை விட்டுக் கொதித்தவுடன் பொடியாக நறுக்கிய வெங்காயம், கடுகு, வெந்தயம், பெருங்காயம், பூண்டு சேர்த்து நன்கு வதக்கவும். இவற்றை உப்பு சேர்த்து விழுதாக அரைத்துக்கொள்ள வும். பின்னர் கோவா, புளிக்கரைசல் (சற்றுக் கெட்டியாக இருக்கட்டும்.) சேர்த்து நன்கு கலக்கி மேலே கொத்தமல்லியைத் தூவி பரிமாறவும். இதை தோசையுடன் சாப்பிட சுவையாக இருக்கும்.

---

யார் அந்த 50 அதிஷ்டசாலிகள்?

## முரசின் பரிசு

தினமுரசு நடத்தும் பரிசுப் போட்டி.

* 50 பேர் அதிஷ்டசாலிகளாகத் தெரிவு செய்யப்படுவார்கள்.

முரசின் பரிசு
கூப்பன் இல 11
உண்மை—நேர்மை—
வெளிப்படைத்தன்மை

* பெண்கள் மட்டுமே பங்கு கொள்ள முடியும்.
* பரிசுக் கூப்பன்களை 1-25 வரை பத்திரமாக சேர்த்து வைக்க வேண்டும்.
* நாம் அனுப்பச் சொல்லும் போது 25 கூப்பன்களையும் அனுப்பி வைக்கலாம்.
* மிக்ஸி- ரைஸ் குக்கர்கள்-இட்லி குக்கர்கள், கைக் கடிகாரங்கள், நவீன ரக இல்லப் பொருட்கள் என்பன பரிசுகளாக வழங்கப்படவுள்ளன.
* இன்றுமுதல் கூப்பன்களை சேகரிக்க ஆரம்பியுங்கள். உங்கள் அதிஷ்டத்தைப் பரிசீலிக்கலாமே.





# பார் வியக்கும் அதிஷ்டசாலி

## கார் குவித்து மகிழும் காட்சி!

தகவல் பெட்டி



பதினொரு வயதான ரிரோன் கிறிசம் என்ற சிறுவன் நவீனமான புதிய 6 மோட்டார் வாகனங்களுக்கு உரிமையாளனாகிவிட்டான். ஆனால் அவ் வண்டிகளில் ஏறி அமர்ந்து அவற்றை ஓட்டுவதுபோல பாவனை செய்கிறானே தவிர அவனால் அவ்வண்டிகளைச் செலுத்த முடியாது. அவனுடைய தந்தையான வேர்ணன் கிறிசம் அல்லது தாயார் ஜுன் ஆகியோரும்கூட அவ்வண்டிகளில் வைத்து ரிரோனை அழைத்தும் செல்வதில்லை.

ரிரோன்-தொலைக்காட்சி, பத்திரிகைகள், சஞ்சிகைகள் ஆகியவற்றில் வரும் விளம்பரங்களை ஒன்றுவிடாமல் அவதானிப்பான். இவற்றில் மோட்டார் காரினைப் பரிசாகத் தரும் போட்டிகளில் தவறாமல் பங்கெடுப்பான்.

ஆரம்பத்தில் ரிரோனின் செய்கை பெற்றோருக்கு பைத்தியகாரத்தனமாகவே பட்டது. ஆனால் முதன் முதலில்- 1993 ஜனவரியில் முதல் மோட்டார்கார் பரிசினை ரிரோன் வென்றெடுத்திருப்பதாக அறிவித்தபோது அவர்களால் நம்பமுடியவில்லை. கடந்த வருட முடிவுக்குள் மொத்தம் 6 கார்களை ரிரோன் வென்றெடுத்துவிட்டான்.

தென் கரோலினா மாநிலத்தைச் சேர்ந்த கிறீன் வில்லி நகரைச் சேர்ந்த ஒரு சாதாரண வர்த்தகரான வேர்ணனின் ஒரே மகன் ரிரோன்.

இவனுக்கு 15 வயது முடிந்தபின்னர் தான் மோட்டார் கார் ஓட்டும் அனுமதி கிடைக்கும். சட்டத்துக்குக் கட்டுப்பட்ட ரிரோனின் பெற்றோர், அவனை வண்டிகளில் அமர்ந்து விளையாட மட்டுமே அனுமதிப்பர். தங்கள் மகனுடைய சொத்தான அவ்வண்டிகளை தாங்கள் ஒரு போதும் பயன்படுத்தப் போவதில்லை என்றும் திட சித்தம் பூண்டுள்ளனர். ரிரோனின் கால்களும் சாரதியின் இருக்கையில் இருந்தாலும் கீழேயுள்ள சாதனங்களைத் தொடுவதற்கும் முடிவதில்லை.

மஸ்ராங், டொயோட்டா காம்ரி, டொயோட்டா MX-3, ஜீப் ராங்லர், டொயோட்டா பிரெவியாவான், டொஜ் ஷாடோ ஆகிய வண்டிகளுக்கே ரிரோன் சொந்தக் காரனாகவுள்ளான். இவை அனைத்தும் 12 மாதங்களுள் வெல்லப்பட்டுள்ளன. இவற்றின் மின் கலங்களின் சக்தி குறைந்துவிடாமலிருக்க இவற்றை அடிக்கடி முடுக்கி இயந்திரத்தை சில நிமிடங்கள் ஓடவிடுகிறனர்.

## இடுகாட்டின் மத்தியில் ஒரு வீடு



1933ல் நெருப்புக் காய்ச்சலுக்குப் பலியான நடின் ஏர்ள்ஸ்

லேனெற் பட்டினத்திலுள்ள அந்த இடுகாட்டின் மத்தியில் ஒரு சின்னஞ்சிறு அழகிய வீடு தென்படுகிறது. இதனைப் பார்ப்பதற்கு அயல் மாநிலங்கள் பலவற்றிலிருந்தெல்லாம் நூற்றுக்கணக்கில் உல்லாசப் பயணிகள் வந்து செல்லுகின்றனர்.

இந்தச் சிறு வீடு 1933ம் ஆண்டு காலமான நடின் ஏர்ள்ஸ் என்ற 5 வயதுச் சிறுமிக்காகக் கட்டப்பட்டது. இந்தச் சிறு வீட்டினுள் அச்சிறுமி தனது 5வது வயதுவரை விளையாடிய அத்தனை பொருட்களும் வைக்கப்பட்டுள்ளன. இதனைச் செம்மையாகப் பராமரிக்கும் பொறுப்பினை லேனெற் பட்டின சபையே ஏற்று கடந்த 61 ஆண்டுகளாகப் பராமரித்து வருகிறது. நடின் ஏர்ள்ஸ் 1933ம் ஆண்டு கிறிஸ்மஸ் தினத்துக்கு சில நாட்களின்முன் நெருப்புக் காய்ச்சல் கண்டு இறந்து போனாள். இவள் இறப்பதற்குமுன்னர்- எல்லாக் குழந்தைகளையும்போல, கிறிஸ்மஸ் தினத்தன்று நத்தார் தாத்தா தனக்கு விளையாடுவதற்கு ஒரு சிறு வீடு தரவேண்டும் என்று பிரார்த்தனை செய்தாள். அவள் உயிரோடிருக்கும் போது விரும்பிய ஒரு



நினைவுச் சின்னமாகத் திகழும் வீட்டில் ஏர்ள்ஸ் பயன்படுத்திய விளையாட்டுப் பொருட்கள்


பொருளை உயிர்பிரிந்த பின்பும் நிறைவேற்றிவைக்கவே அவளுடைய பெற்றோர் விரும்பியுள்ளனர். அதன்படியே இச்சிறு வீட்டையும் ஏர்ள்ஸின் கல்லறை மீது கட்டி எழுப்பியுள்ளனர். காலம் கடந்தும் அச்சிறுமியின் நினைவு அழியாமல் இன்றும் இருக்கிறது.



ஏர்ள்ஸ் கல்லறை மீது கட்டப்பட்டுள்ள சின்ன வீடு.

## எந்த முயலிலும் இல்லாத ஒன்று

## குண்டோதர முயல்



முயல்களில் எல்லா ரகங்களுமே-ஓரடி உயரத்துக்கு மேல் வளர்வதே அபூர்வம். ஆனால் 4 அடி உயரமான -125 இறாத்தல் வரை எடையுள்ள முயல் ரகங்களை பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த ஃபிரான்ஸ் மெலாயெற் என்ற விவசாயி உற்பத்தி செய்திருக்கிறார். இதற்காக இவர் இரகசியமான ஹோர்மோன் ஊசி மருந்தினைப் பாவிக்கிறார். இதனை வேறு எவருக்கும் வெளியிட மறுக்கிறார்.

மெலாயெற் ஒரு மிருக வைத்திய நிபுணர். 51 வயதான இவர் முயல்களை பிரமாண்டமான அளவில் வளர்த்தெடுக்கவும் பண்ணைப் பாதுகாப்புக்கான பயிற்சி அளிக்கவும் எடுத்த முயற்சி நல்ல பலனளித்துள்ளது. இவருடைய பண்ணையில் இதேபோன்ற இராட்சத முயல்கள் பலவற்றை இவர் உற்பத்தி செய்துள்ளார்.

சிறு குட்டியாக இருக்கும் போதே ஹோர்மோன் ஊசி மருந்துகளை வாரத்துக்கொரு தடவை முயல்களுக்கு ஏற்றுகிறார். இதனால் இம் முயல்களுக்கு அடக்க முடியாத பசி ஏற்படுகிறது. ஒரு சாதாரண முயல் ஒரு மாதத்துக்கு ஆக 40 இறாத்தல் தீனியை மட்டுமே உண்ணும். ஆனால் மெலாயெற் உற்பத்தி செய்யும் முயல்களுக்கு இதுபோல் 40 மடங்கு அதிகமான உணவு தேவைப்படுகிறது என்கிறார் அவர்.

இத்தகைய முயல்களை நாய்களைப்போன்று வீடு மற்றும் பண்ணைக் காவலுக்குப் பயன்படுத்த முடியும் என்கிறார் மெலாயெற். இவற்றுடன் மிக எச்சரிக்கையாகப் பழக வேண்டும் என்கிறார். சற்றுக் கவனக் குறைவாக இருந்தால் வளர்ப்பவனையே கடித்துக் குதறி விடுமாம்.

## அரசியல்வாதி சீசன்

சத்யராஜ் அரசியல்வாதியாக நடித்த 'அமைதிப்படை' நன்றாக ஓடியது. இப்போது 'தாய்மாமன்' படமும் சக்கைபோடு போடுகிறது. அதனால் அரசியல்வாதியை பிரதானமாக வைத்து கதைபண்ணத் தொடங்கிவிட்டார்கள். சரத்குமார் நடித்த தெலுங்கு படமான 'விஷ்ணு' வருவில் தூள் கிளப்பியதால் அதனை 'மிஸ்டர் சரத்' என்ற பெயரில் தமிழில் மொழிமாற்றி வருகிறார்கள். அரசியல்வாதியாக சரத்குமார் நடித்துள்ளார். விரைவில் திரைக்கு வருகிறது.

## மருதுமீது உரசல்

"வீட்டை புள்ள தேசத்துக்கு செலுத்த பொண்ணு பாசத்துக்கு ... மருது மருது உன்னை ... மருகி மருகி உருகி நிக்கிறேன்." இது பெரிய மருது படத்தில் வரும் ஒரு பாடலின் வரிகள். உருகியது ரஞ்சிதா. உரசப்பட்டது விஜயகாந்த். வேகமாக ... பெரியமருது ... பிடிப்புக்கள் முடிந்தவுடன் ... நெருங்கிவிட்டன.

## கொடுத்தார் விருந்து

கிசு-கிசு-நியூஸ்

பெயரில் மீன் இருக்கும் நடிகைக்கு பிறந்தநாள். வழக்கம்போல் எத்தனையாவது என்பது மட்டும் மூச். பிறந்தநாளை முன்னிட்டு நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் தனக்குப் பிடித்தமான சில நட்சத்திரங்களை அழைத்து கொடுத்துள்ளார் விருந்து. செமத்தியான விருந்து. பணம் தாராளமாய் செலவு பண்ணினாராம்.

## இளம் நடிகர்களுக்கு சிபாரிசு

பெயரில் சாந்தத்தை கொண்ட நடிகை பிரபல ஹீரோக்களுடன் ஜோடி சேருவதை விரும்புவதில்லையாம். இளம் புது நடிகர்களையே ஜோடியாகப் போடுமாறு சிபாரிசு செய்கிறாராம். அப்படி சிபாரிசு செய்யப்படும் இளம் நடிகர்களில் ஆனந்தத்தை பெயராக கொண்ட நடிகருக்கும் அதிஷ்டம் அடித்துள்ளதாம்.

## துரத்தல்

பெயரில் சத்வத்தைக்கொண்ட நடிகருடன் பூவின் பெயர் கொண்ட நடிகை புதிய படம் ஒன்றில் ஜோடியாக நடிக்கிறார். வெளிப்புறப் படப்பிடிப்புக்களில் நடிகை அந்த நடிகரை துரத்தித் துரத்தி தொல்லை கொடுக்கிறாராம். நம்பர் வன் போட்டியில் வெல்ல இப்படியான உத்திகள் சிபாரிசுக்காக நடப்பது வழக்கம்தானாம்.






அஜித்குமார்
படம்-பவித்ரா

## பாவம் கவிஞர் மேத்தா

புதுக்கவிதையில் முத்திரை பதித்துவிட்டு திரைப்படத்திற்கு பாட்டு எழுதவந்தவர் மு.மேத்தா. அவரது 'கண்ணீர் பூக்கள்' புதுக்கவிதை பேசப்பட்டது போல அவரது திரைப்படங்கள் பெரியளவில் பிரபலமாகவில்லை.

பார்த்தார் மேத்தா, தனது திறமைகளை வெளிப்படுத்தி திரையுலகை மெச்ச வைக்க 'தென்றல் வரும் தெரு' என்னும் படத்தை எடுக்க நினைத்தார். கதை-திரைக்கதை-வசனம், பாடல்கள் அனைத்தையும் தானே எழுதினார். என்ன காரணத்தினாலோ ஏறக்குறைய மூன்று வருடங்களாக பட வேலைகள் இழுபட்டன. இப்போது ஒரு வழியாக திரைக்கு கொண்டுவந்திருக்கிறார். ஆனால் சென்னை மாநகரில் ஒரே ஒரு திரையரங்கில் மட்டுமே படத்தை திரையிட முடிந்துள்ளது. ரமேஷ் அரவிந்த்-கஸ்தூரி ஆகியோர் ஜோடியாக நடித்துள்ளனர். கவிதை எழுதும் பாத்திரமே படத்தின் கதாநாயகனுக்கு.

இசை-இளையராஜா. இயக்கம் கௌரி சங்கர். படத்தை குறைசொல்ல முடியாது. ஆனால் விளம்பரம் போதாத நிலையில் நன்றாக ஓடுமா என்பதுதான் கேள்விக்குறி.

## ராம்கியோடு நடிக்க மறுப்பா?

### மீனா சொன்ன பதில்!

மீனாவைப் பற்றி பல தகவல்கள் வெளியாகிக்கொண்டிருக்கின்றன. அதில் ஒன்று வனஜா-கிரிஜா படத்தில் மீனா நடிக்க சம்மதம் சொன்னார். படத்தின் ஹீரோக்களில் ராம்கியும் ஒருவர் என்று அறிந்தவுடன் நடிக்க மறுத்துவிட்டார். இதுபற்றி மீனாவிடம் நிருபர்கள் கேட்டனர். செய்தியை மறுத்த மீனா தனது தரப்பு நியாயத்தை விளக்கினார், அந்தப் படத்தில் நான் நடிக்க ஒப்புக்கொள்ளும்போதே விதித்த நிபந்தனை, நேரம் இருக்கும் போதுதான் 'கால்ஷீட்' தருவேன் என்பதுதான். தயாரிப்பாளர் தரப்பிலும் அதை ஏற்றுக்கொண்டார்கள். பின்னால் அவர்கள் கேட்ட தேதியில் நான் வேறு படங்களில் நடிக்க வேண்டி இருந்தது. அதனால் அந்தப் படத்தில் இருந்து விலகவேண்டியதாகிவிட்டது. முன்னணி நடிகரான ராம்கியுடன் நடிக்க நான் ஏன் மறுக்கவேண்டும்." என்று கேட்டார் மீனா.

## நழுவியது வாய்ப்பு

தமிழில் கதாநாயகனாக உயர்ந்துள்ள நெப்போலியனுக்கு இந்திபட வாய்ப்பு தேடி வந்தது. அதுவும் இந்தியில் பிரபல நடிகர் அனில் கபூருடன் சேர்ந்து நடிக்கும் வாய்ப்பு. என்ன செய்வது தமிழில் பிஸியாக இருப்பதால் வாய்ப்பை ஏற்க முடியவில்லை. அதனால் நெப்போலியனுக்கு வருத்தம்தான்.

## தீபாவளிக்கு ரெடியாகும் படங்கள்

இம்முறை தீபாவளி கொண்டாட தயாராகிவரும் படங்களில் சில, 'மணி-ரத்னம்' (ஆனந்த பாபு-நெப்போலியன்), 'பவித்ரா' (நாசர்-ராதிகா), 'வள்ளி வரப் போறா' (பாண்டியராஜன்-மோகனா) போன்ற படங்கள் திரைக்கு வரவுள்ளன.

## மீண்டும் வாய்ப்பு

நடிகர் ராஜீவ் 'சாது' படத்தில் நன்றாக நடித்ததை அறிந்து இயக்குநர்கள் பலர் அழைக்கத் தொடங்கியுள்ளனர். மீண்டும் கிடைத்துள்ள வாய்ப்பை சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதில் குறியாக இருக்கிறார் ராஜீவ்.

## இனி ரஜினியோடு

வில்லனாக நடித்து கதாநாயகனாக மாறி மீண்டும் வில்லனாக நடிக்கத் தொடங்கியுள்ள ஆனந்தராஜ் ரொம்ப மகிழ்ச்சியாக இருக்கிறார். ரஜினிகாந்த் படமான 'பாட்சா'வில் வில்லனாக நடிப்பதுதான் மகிழ்ச்சிக்கு காரணம்.

'பாட்சா' படத்தின் ஆரம்ப விளம்பரங்களில் ஆனந்தராஜ் பெயர் இல்லை. முதலில் ரஜினிதான் இரட்டை வேடத்தில் நடிப்பதாக இருந்ததாம். ஆனந்தராஜ் நடித்தால் நன்றாக இருக்கும் என்று ரஜினியே விரும்பியதால் ஆனந்தராஜிக்கு அடித்தது சான்ஸ்.

"சில காலமா ஹீரோவா நடிச்சதால ரஜினிசார் படங்களில் நடிக்க முடியல்லே. இப்போ வில்லன் வேடத்திலும் நடிப்பதால் இனி ரஜினி படங்களில் தொடர்ந்து நடிப்பேன்" என்று நினைக்கிறேன் என்று சொல்கிறார் ஆனந்தராஜ்.

## பாலாவின் வெளியீடு

"ரொம்ப ஜாலியான படம் என்பதால்தான் தமிழில் மொழிமாற்றி வெளியிட முன்வந்தேன்" என்கிறார் என்.பி.பாலசுப்பிரமணியம். அவர் சொல்லியிருப்பது நாகார்ஜுன் இரட்டை வேடத்தில் நடிக்க, அவருக்கு ஜோடியாக ரம்யா கிருஷ்ணன், சௌந்தர்யா ஆகியோர் நடித்துள்ள 'ஹலோ பிரதர்' படம் பற்றித்தான்.

ஒருவன் ரௌடி, மற்றவன் நாகரிக கனவான். இந்த இரட்டையருக்குள் ஆள் மாறாட்டம் நடப்பதுதான் கதை. ஆனால் அதை ஜாலியாகச் சொல்லியிருக்கிறார்கள். அதுதான் வித்தியாசம்.

## பிரசாந்த் 21

பிரசாந்த்துக்கு இப்போது வயது 21 வயது. ஆணழகன் படத்தில் 21 விதமான கெட்டப்களில் தோன்றுகிறார் பிரசாந்த். அப்பா தியாகராஜன் இயக்கும் படமென்பதால் மகனை தூள் கிளப்ப வைக்க ஆயத்தப்படுத்துகிறார்.



## "இப்போதுதான் முகவரி ...

இந்தி திரையுலகில் மற்றொரு ... ஆடையில் மாதிரியே பெயரிலும் ... தப்போது தபு காட்டில் மழை. அதுபற்றி ... "ரொம்ப நாட்களாகவே என்னை ... ஆனால் இப்போதுதான் என்னை ... பார்க்கிறார்கள். சந்தோசமான ... எழுதவே ... இப்போதுதான் என் முகவரி தெரி...

## வள்ளி நாயகன் ...

'வள்ளி' படத்தில் ... சஞ்சய். இப்போது ... என்னும் படத்... நடிக்கிறார் ... டெல்லி ... விசித்ரா ...

... ஆட்டம் ... விருப்பமு... பட... திருப்ப...

## ..........மி...

* 'தளபதி'யில் ரஜினிக்கு ஜோடியாக ... சரிப்பட்டு வராததால் நடிக்க ... ஒரு படத்திலாவது நடிப்பேன் ... மலையாளம், கன்னடம், இந்தி ...
* 'செந்தமிழ்ப்பாட்டு', 'சின்னமாப்பிள்ளை' போன்ற ... ஜோடி, புதிய படமொன்றின் மூலம் மீண்டும் ... மனோஜ் தயாரிப்பாளர் என்று தெரிகிறது.
* தீபாவளிக்கு வெளிவரவுள்ள 'பெரிய மருது' படத்... நிலா', ஆர்.கே.செல்வமணி இயக்கும் 'மாஸ்டர் தேதா...' படங்களில் விஜயகாந்த் நடிக்கவுள்ளார்.
* ராதாரவி தயாரித்து நடித்துள்ள 'இளைஞர் அணி' ... நடித்துக் கொடுத்துள்ளார் கார்த்திக்.
* 'பாட்சா' படத்தின் படப்பிடிப்பிற்கு பார்வையாளர்... படப்பிடிப்புத் தளத்திற்குச் சென்று படப்பிடிப்புக்களை ... சென்றார் முன்னாள் நடிகை அம்பிகா.
* தெலுங்கிலிருந்து ... வெளியாகவுள்ள ... தெலுங்கில் இசை...
* நடிகர் திலகத்துடன் ... இரட்டை வேடத்தில் ... என்பவர் முதன் ... படத்தில் இரட்டை ...
* 'சிவப்பிமோ பாண்... மீல...' பாடலில் ...



பிரபு-ஹேமா
படம்-கட்டுமரக்காரன்

## கவுதமிக்கு காதல் திருமணம்?

கவுதமிக்கு கால்கள் நிலத்தில் இல்லை. உச்சமான சந்தோசம். அதற்கு காரணம் அமிதாப்பச்சன். கவுதமி இந்தியில் நடித்த படம் ஒன்றைப் பார்த்துவிட்டு "கவுதமி நீ நன்றாக நடித்திருக்கிறாய்" என்று பாராட்டிவிட்டாராம்.

தமிழில் கமலுடன் 'நம்மவர்' படத்திலும், இந்தியிலும் நடித்துவரும் கவுதமியின் கல்யாணம் காதல் திருமணமாகவே இருக்குமாம். அது ஜாதி மதத்துக்கு அப்பாற்பட்டதாகவும் இருக்கலாமாம்.

இன்னொரு விஷயம், கவுதமிக்கு வெறிகொண்ட இரசிகர்கள் இருக்கிறார்களாம். நம்பாவிட்டால் கவுதமி வீட்டு தபால்காரரைக் கேளுங்கள். இரத்த கையெழுத்துபோட்ட கடிதங்களை மூட்டை மூட்டையாக கொண்டுவந்து கொடுப்பது அவர்தான்.

## கமலுக்கு விருது

கலாசாகர் என்ற அமைப்பு ஆண்டுக்கு ஒருமுறை தமிழ், தெலுங்கு, மலையாளம் கன்னடம் ஆகிய மொழிகளில் வெளிவந்த படங்கள் மற்றும் தொலைக்காட்சி தொடர்களில் சிறந்தவற்றை தேர்ந்தெடுத்து பரிசளிக்கிறது.

இந்த ஆண்டு தமிழில் கலாசாகர் விருது பெற்றுள்ளவர்கள், சிறந்த நடிகர்-கமல் (மகாநதி) சிறந்த இயக்குநர்-பாரதிராஜா (கிழக்கு சீமையிலே) சிறந்த நடிகை-ராதிகா (கிழக்கு சீமையிலே) சிறந்த இசையமைப்பாளர்-ஏ.ஆர்.ரகுமான் (ஜென்டில்மேன்) சிறந்த படம்-மகாநதி.


## பிரபு சிவாஜியாக முடியுமா?

நடிகர் ராதாரவியிடம் ஒரு கேள்வி, "உங்கள் அப்பாவின் இடத்தை ஏன் பிடிக்கமுடியவில்லை?" அதற்கு ராதாரவி கடக்கடச் சொன்ன பதில்;

"பிரபு சிவாஜியாக முடியுமா? கார்த்திக் முத்துராமனாக முடியுமா? அதுபோலத்தான் ராதாரவி எம்.ஆர்.ராதாவாக முடியாது. அவர் பாதை வேறு. என் பாதை வேறு" ரொம்பச்சரி.

சி ...கிறது"
...சல் நடிகை
...லும்போது.
...த் தெரியும்.
...தியாசமாகப்
...க்கும் கடிதம்
...ரசிகர்களுக்கு
...என்கிறார் நடி.

...போறார்
...ாக நடித்தவர்
... தெஞ்சங்கள்
...தாநாயகனாக
... கீர்த்தனா,
... குமரிமுத்து.
... ஆகியோரும்
...ார்கள். கதை-
...கதை வசனம்
...எழுதி இயக்கும்
... முக்கிய
...டம் ஒன்றில்
நடிக்கவும்
...கிறார். தைப்
... வெளியீடாக
...திட்டமிட்டு
...ப்பிடிப்புக்கள்
...கிவுள்ளன.
... துறைகளில்
... சஞ்சய் இந்தப்
... தனக்கொரு
...யிருக்கிறார்.



## ...சினி-

...க்க வேண்டியவர் மோகினி. தேதிகள் ...லை. எப்படியும் ரஜினிக்கு ஜோடியாக ... கூறும் மோகினி, தமிழ், தெலுங்கு, ... படங்களில் நடித்துள்ளார்.

... படங்களில் நடித்த பிரபு-கஸ்யா ...ள்ளனர். இப்படத்தை கமலஹாசனின்

...த்து. அரவிந்தராஜ் இயக்கும் 'கருப்பு ...வித்திரன் இயக்கும் 'திருமூர்த்தி' ஆகிய

...த்தில் பாடல் காட்சி ஒன்றில் தோன்றி

...ரும் அனுமதிக்கப்படவில்லை. ஆனால் ...ார்த்து ரஜினிகாந்தை சந்தித்து விட்டு

...க்கு மொழிமாற்றப்பட்டு விரைவில் ...ூப்பர் போலீஸ்'. இப்படத்தின் மூலம்தான் ...ராக அறிமுகமானார் ஏ.ஆர்.ரகுமான்.

...ந்து 'பரீட்சைக்கு நேரமாச்சு' படத்தில் ...த்துள்ள வை.தி. மகேந்திரன், கே.திலகர் ...க இயக்கும் 'எங்கள் தங்க மகன்' ...த்தில் நடித்து வருகிறார்.

...த்தில் இடம்பெற்ற 'செழுங்கு செவ்வை ... அறிமுகமானவர் கோவைராஜகோபால். ...ந்தப் பாடல் பிரபலமானதைத் தொடர்ந்து ...நுமுகம், மஞ்சவிரட்டு', 'நாட்டாமை' ஆகிய படங்களில் பாடியுள்ளார்.

...மிழில் சிவரஞ்சனிக்கு படவாய்ப்புக்கள் ...இல்லாததைத் தொடர்ந்து, தற்போது ...அவர் தெலுங்குப் படங்களில் நடிக்கத் தொடங்கியுள்ளார்.

நாசர் இயக்கி, நடித்து வரும் 'அவதாரம்' படத்தில் கதாநாயகியாக ரேவதி நடிக்கிறார். இப்படத்தில் பாலாசிங் என்பவரை வில்லனாக அறிமுகப்படுத்துகிறார் நாசர்.


## பம்பாயில் பாடல் பதிவு

'தளபதி' படத்திற்கு பம்பாய் சென்று பாடல்களை ஒலிப்பதிவு செய்தார் இளையராஜா. அதன்பின்னர் இளையராஜா பம்பாய் சென்று பாடல்களை ஒலிப்பதிவு செய்துள்ள படம் 'ராசய்யா'. பிரபுதேவா-ரோஜா நடித்துவரும் 'ராசய்யா' படத்திற்காகவே பாடல்களை இளையராஜா பம்பாயில் பதிவு செய்திருக்கிறார். இளையராஜாவின் இயற்பெயரும் ராசய்யா என்பது குறிப்பிடத்தக்கது. அதுதான் விசேஷ அக்கறையோ?

# சினிவிசிட்

முகப்பில்
சரத்குமார்-வினிதா
படம்
மகாபிரபு

★★★★★★



## நாசரின் பயம்

நாசர் ஒரு சிறந்த நடிகர் என்பது எல்லோராலும் ஏற்கப்பட்ட விஷயம். இப்போது நாசர் ஒரு சிறந்த இயக்குநர் என்ற பெயரும் கிடைக்கப் போகிறது. அதற்கு காரணமான படமாக அமையப் போவது 'அவதாரம்'.

ரேவதியோடு நாசர் இணைந்து நடித்தும் வருகிறார். "அவதாரம் 'ஆர்ட் பிலிமா?" என்று சிலர் கேட்டது நாசரின் வயிற்றில் புளியைக் கரைத்திருக்கிறது. 'ஆர்ட் பிலிம்' என்றால் தியேட்டர் நிரம்பாது. எனவே 'அவதாரம்' ஜனரஞ்சகமான படமேதான் என்று விளம்பரம் செய்து நம்பவைப்பதிலும் ஈடுபட்டிருக்கிறார் நாசர்.

## சூப்பர் போலிஸ்

வி.சி. குகநாதன் கதை எழுதி தெலுங்கில் வெற்றிக்கொடி நாட்டிய 'சூப்பர் போலீஸ்' எனும் படம் தமிழில் மொழிமாற்றப்படுகிறது. பெயர் மட்டும் மாற்றப்படமாட்டாது. வெங்கடேஷ் கதாநாயகனாக நடித்துள்ளார். நக்மா, சௌந்தர்யா ஜோடிகள். ஆடல், பாடல், கவர்ச்சி அடிதடி கலந்த சூப்பர் மசாலாப் படம்.

'சூப்பர் போலீஸ்' படத்தை தமிழில் பிரபலமான கதாநாயகனை வைத்து எடுக்க சிலர் விரும்பியபோதும் குகநாதன் அதற்கு ஒப்புக் கொள்ளவில்லை. மொழிமாற்றினாலே போதும் என்று விட்டார்.

## அதிக ஊதியம் வாங்கும் நடிகை

நடிகைகளின் மார்க்கெட் எப்போதும் ஒரே மாதிரி இருக்காது. ஏறும், இறங்கும். இப்போது ராதிகாவின் பக்கம் அதிர்ஷ்டக்காற்று வீசுகிறது.

அதனால் அவர் ஊதியத்தை உயர்த்திவிட்டார். தற்போது அதிக ஊதியம் வாங்கும் நடிகை அவர்தான்.



-குஷ்பு-
படம்-என் பொண்டாட்டி நல்லவ

## "நகை மீது பிரியமில்லை"

### ரஞ்சிதா சொன்னவை

சினிமா சஞ்சிகை ஒன்றுக்கு ரஞ்சிதா அளித்துள்ள பேட்டியில் கூறியுள்ள சமாச்சாரங்களின் சுருக்கம் பின்வருமாறு:

* பள்ளி வாழ்க்கையை ஜாலியாக அனுபவிக்கவில்லை. அரட்டை அடிப்பது கிடையாது. சினிமாவிற்கு வந்த பிறகு நிறைய மாறவேண்டி இருந்தது. அரட்டையிலும் இறங்கிவிடுவேன்.
* நான் விஜயசாந்தி ரசிகை. அவரை சந்தித்து இருக்கிறேன். அவர் மாதிரி சகாப்தம் ஏற்படுத்த என்னால் முடியாது.
* புத்தகங்கள் என்றால் உயிர். சமீபத்தில் படித்த ஆங்கில நாவல்... ஷிட்னி ஷெல்டன் எழுதிய 'வாண்ட் ஃபார் எவர்'.
* சாதாரணமாக வெளியே செல்லும் போது மேக்கப் போடுவது கிடையாது.
* நகைகளின் மீது விருப்பமில்லை.
* பிரச்சனை இல்லாத நடிகை என்று பெயர் எடுக்க ஆசை



ரீது
படம்-குயில் தோப்பு

# லக்கிமேன்

நகைச்சுவை கலந்த பாத்திரங்களில் வெளுத்து வாங்கக்கூடிய கதாநாயகர்கள் வரிசையில் கார்த்திக்குக்கும் இடம் உண்டு.

'நந்தவன தேரு' படத்தில் நடித்துவரும் கார்த்திக் அடுத்து நடிக்கப்போகும் புதிய படத்தின் பெயர் 'லக்கிமேன்'.

தெலுங்கில் பல வெற்றிப்படங்களை தயாரித்த பிரசாத் என்பவர் தயாரிக்கிறார். பசையுள்ள தயாரிப்பாளர் என்பதால் பிரமாண்டம் இருக்கும்.

கார்த்திக் ஜோடியாக யாரை நடிக்கவைக்கலாம் என்று யோசித்து வருகிறார்கள். கவுண்டமணிக்கு பிரதான பாத்திரம். அவரோடு செந்திலும் இருக்கிறார். ஐந்து பாடல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

'லக்கி மேன்' படத்தை இயக்கப் போவது பிரதாப் போத்தன். ஏற்கனவே பிரதாப் போத்தன் இயக்கிய 'சீவலப்பேரி பாண்டி' பிரமாதமாக ஓடியதால் 'லக்கிமேன்' படமும் நல்ல விலைக்கு போகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## இமயம் பிறந்த நாள் இனி நடிகர் தினமாகும்

நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் பிறந்தநாளை நடிகர் தினமாக ஆண்டு தோறும் கொண்டாட தென்னிந்திய நடிகர் சங்கம் தீர்மானித்துள்ளது.

1.10.94 அன்று சிவாஜியின் பிறந்தநாள் நடிகர் சங்கத்தால் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

நடிகர் தினமாக கொண்டாடப்பட்ட பிறந்தநாள் விழாவில் நடிகர் சங்கத் தலைவர் ராதாரவி உட்பட பிரபல நடிகர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

விழாவில் எம்.ஜி.ஆர். ஜோதி தொடர் ஓட்டமாக எடுத்து வரப்பட்டு விஜயகாந்திடம் கொடுக்கப்பட்டது.

தலைசிறந்த நடிகரான சிவாஜிக்கு நடிகர் சங்கம் வழங்கியுள்ள கௌரவம்தான் 'நடிகர் தின' அறிவிப்பாகும்.

## சென்சார்மீது பாய்ச்சல் விஜயகாந்த்

தணிக்கைக்குழு (சென்சார்) சமீபத்தில் கத்தரியைத் தூக்கி வெட்டிவெறியும் காட்சிகள் படத்தின் தொடர்ச்சியைப் பாதிப்பதாக கூறும் விஜயகாந்த் மேலும் கூறும்போது "சோப்பு விளம்பரத்துக்கே கிளாமர் தேவைப்படும்போது பல லட்சங்கள் முதலீடு செய்து எடுக்கப்படும் திரைப்படத்திற்கு அவசியம் இல்லையா? நாங்கள் அதைத்தான் செய்கிறோம். அவர்கள் இஷ்டத்திற்கு காட்சிகளை வெட்டினால் எப்படி?" என்று கேட்கிறார் விஜயகாந்த்.

தமிழ் திரையுலகுக்கும் சென்சாருக்கும் இடையே மோதல் தொடர்கிறது இடையைக் காட்டினால்கூட கத்தரியை காட்டுகிறார்கள் என்று வருத்தப்பட்டார் ஒரு பிரபல தயாரிப்பாளர்.

## போனஸ் புன்னகை

இந்தியில் அதிக கவர்ச்சியில் நடிக்கவே மதுபாலா விரும்புகிறாராம். புடவையை எல்லாம் அவிழ்த்து எறிந்துவிட்டு நடிப்பதையே (தவறாக நினைக்கவேண்டாம் அதாவது மாடர்ன் உடைகளில் நடிப்பதையே மதுபாலா விரும்புகிறாராம். அதே உடைகளில் போஸ் கொடுத்தும் அசத்தும் மதுபாலா நீச்சல் உடைகளில் நடிக்க ரெடி என்று கூறியிருக்கிறார். மதுபாலாவுக்கு பிடிக்காத விசயம் மதுபாலா என்று பெயர் சொல்லி அழைப்பது. அப்படி யாராவது அழைத்தால் முறைக்கிறாராம். பின்னர் எப்படி அழைப்பது? மதுஜி அல்லது மேடம் என்று அழைத்தால் உடனே மந்தகாச புன்னகையை போனஸாகத் தருவார்.


## சின்னப்பெண் என்பதால்...

நடிகை மோகினிக்கு கமலஹாசன், ரஜினிகாந்த், சரத்குமார் ஆகியோரோடு நடிக்க விருப்பமாம். ஆனால் இயக்குநர்கள் விடுகிறார்கள் இல்லையாம். ஏனாம் "நீ சின்னப் பெண். அவர்களோடு ஜோடியாக நடிக்கும் வயது காணாது. பொருத்தம் இல்லை. சற்று வளர்ந்துவா" என்கிறார்களாம். மோகினி நடிக்க வந்தது 13 1/2 வயதிலாம். இப்போது 17 தானாம். "அடுத்த ஆண்டு 18. முன்னணி கதாநாயகியாகிவிடுவேன்" என்கிறார் மோகினி. மோகினியின் பேட்டி ஏனைய இளம் நடிகைகளை முகம் சுளிக்கவைத்தே தீரும்.



"காற்றை யடைப்பது மனதாலே-இந்தக்
காயத்தைக் காப்பது செய்கையிலே,
சோற்றைப் புசிப்பது வாயாலே-உயிர்
துணி வுறுவது தாயாலே."

-சுப்பிரமணிய பாரதியார்-



## கண்ணியம் காத்திடு தம்பி

பாளைச் சிரிப்பது மின்ன-நாட்டுப்
பற்றும் அதனிடை உன்ன
நாளை உலகொன்று நன்றாய்
நாமே சமைப்போம் ஒன்றாய்

நூறு பிழவுகள் ஏனோ-இங்கு
நொடிந்து மாழ்வதும் வீணோ
வேறு எனும் கருத் தின்றி
வேற்றுமை போக்கிடு நன்றி.

சாதித் துயரினைப் போக்கி-உயர்
சமத்துவக் கொள்கைகள் ஆக்கி
நீதி நெறிமுறை நின்று
நேர்மையாய் வாழ்ந்திடு நன்று.

வேளையும் வந்தது தம்பி-இன்றே
வெல்ல எழு தங்கத் தம்பி
காளைகள் நாமடா தம்பி
கண்ணியம் காத்திடு தம்பி

*இறால்குழி-சிவகுரு நாதன்.*

## பாப்பா முரசு சிறுகதை

# பாட்டின் விலை

நந்தனபுரி என்பது பெரிய நாடு. அந்த நாட்டை நாராயணன் என்பவன் ஆட்சி செய்து வந்தான். அவன் மக்களின் வாழ்க்கை நிலை எப்படி இருக்கிறது என்பதை அறிவதற்காக மாறுவேடம் அணிந்து தெருத்தெருவாகச் சுற்றி வருவான்.

ஒருநாள் மாலை மன்னன், கிழவன் போல் மாறுவேடம் அணிந்தான். தனது நாட்டில் உள்ள ஒரு கிராமத்திற்குப் போனான். தெருத்தெருவாகச் சுற்றி வந்துகொண்டிருந்தான். ஒரு வீட்டிற்குள் இருந்து ஒரு பாட்டு கேட்டது. மன்னன் அந்தப் பாடலை நின்று கவனித்தான். மிகவும் இனிமையான அந்தப் பாடலை அவன் இரசித்து மகிழ்ந்தான்.

பாடலில் சொக்கிப்போன மன்னன், அந்தப் பாடலைப் பாடியவள் ஒரு சிறுமி என்பதை அறிந்தான். உடனே அந்த வீட்டிற்குள் போனான். சிறுமியை மிகவும் பாராட்டினான். மேலும் இசைத்திறமையை வளர்த்துக்கொள் என்று கூறியபடி அன்புப் பரிசாக ஒரு தங்க நாணயத்தைக் கொடுத்தான். சிறுமியைத் தட்டிக்கொடுத்தான். சிறுமி மிகவும் மகிழ்ச்சி அடைந்தாள்.

சிறுமியின் தந்தை வாணன் இதைப் பார்த்துக்கொண்டிருந்தான். தன் மகள் பாடிய பாட்டிற்கு ஒரு தங்க நாணயம் கிடைத்துள்ளதே என்று மகிழ்ந்தான். ஆனாலும் அவன் பொறாமைக்குணம் கொண்டவன். எனவே சிறுமியின் கையில் இருந்த தங்க நாணயத்தை வாங்கித் தான் வைத்துக்கொண்டான். அப்போது கிழவன் வேடத்தில் இருந்த மன்னன் புறப்பட அயத்தமானான். வாணன் அவனைத் தடுத்து நிறுத்தி, "என் மகளின் பாட்டிற்கு ஒரு தங்க நாணயம் விலையல்ல. பத்து தங்க நாணயம் வேண்டும். எனவே மிகுதியைக் கொடுத்துவிட்டுப் போ", என்றான்.

கிழவனுக்கு இதைக் கண்டு ஆச்சரியமாக இருந்தது. அவன் வாணனைப் பார்த்துச் சிரித்தபடியே, "ஐயா,நான் பாட்டிற்கு விலை கொடுக்கவில்லை. பரிசுதான் கொடுத்தேன். கலைக்கு விலை கிடையாதே," என்றான்.



வாணனோ கோபம் கொண்டவன்போல், "விலையாவது, இலையாவது. நீ முதலில் மிகுதி ஒன்பது நாணயங்களையும் தந்துவிட்டுப் போ", என்றான்.

வாணன் சரியான ஏமாற்றுப் பேர்வழி என்பதை அறிந்துகொள்ள மன்னனுக்கு அதிக நேரமாகவில்லை. ஆனாலும் அப்பாவி போல் நடித்தான் மன்னன். "ஐயா, பெரியவரே, உமது மகள் அழகாகப் பாடினாள். ஆனால் அதற்குப் பத்து தங்க நாணயங்கள் தர என்னிடம் இப்போது பணம் இல்லை. எனவே வருந்துகிறேன்," என்றான் மன்னன்.

உடனே வாணன், "அதற்கென்ன உன்னுடைய கழுத்தில் உள்ள தங்கச் சங்கிலியைத் தந்துவிட்டுப்போ," என்றான். மன்னன் சிரித்துக்கொண்டே, "புத்திசாலித்தனம் நிறைந்த உன் கழுத்திற்கு தங்க நகை தேவைதான். ஆனால் என்னிடம் உள்ள தங்கச் சங்கிலி மிகவும் பழையது. எனவே இதன் விலையும் குறைவு. நீ என் வீட்டிற்கு வந்தால் உனக்கு மதிப்பு மிக்க 100 தங்க நாணயங்கள் தருவேன்," என்றான்.

இதைக் கேட்ட வாணனுக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. "ஆ...நூறு தங்க நாணயங்களா? உன் வீடு எங்கே உள்ளது? நான் உன்னுடன் வருகிறேன். நூறு நாணயங்களுக்காக நான் எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் நடப்பேன்," என்றான்.

"அவ்வளவு தூரம் அல்ல. இதோ... மூன்று கல் தொலைவில் தான் என் வீடு உள்ளது. வா போகலாம்." என்று அழைத்துச் சென்றான் மன்னன். மகிழ்ச்சிக் கடலில் நீந்திக்கொண்டிருந்த வாணன் வழியெல்லாம் பிதற்றிக்கொண்டே சென்றான். சந்தோஷம் தாங்காமல் அவன் வெடித்து விடுவான் போல் இருந்தது.

"நான் நூறு தங்க நாணயங்களை வைத்துக்கொண்டு என்னவெல்லாம் செய்வேன் தெரியுமா?" என்று கேட்டான் வாணன். அதற்கு மன்னன்,"எனக்கு எப்படித் தெரியும்?" என்று திரும்பக் கேட்டான்.

உடனே வாணன், "ராஜாவின் அரண்மனையை விட மிக அழகான ஒரு அரண்மனை கட்டுவேன்," என்றான்.

"அப்படியா?" என்றான் மன்னன்.

"பிறகு மன்னரின் மகளை எனக்குத் திருமணம் செய்து தரும்படி கேட்பேன்," என்றான் வாணன்.

"உனக்குத்தான் திருமணம் ஆகிவிட்டதே. ஒரு குழந்தைவேறு இருக்கிறதே," என்றான் மன்னன்.

"அதனால் என்ன? திரும்பவும் கல்யாணம் செய்வேன். இந்த முறை இளவரசியைக் கல்யாணம் செய்து கொள்வேன்," என்றான் வாணன்.

"ஓஹோ அப்படியா? மிகவும் நல்லது" என்றான் மன்னன்.


இவ்வாறு அவர்கள் பேசிக்கொண்டே நகரத்தை அடைந்துவிட்டனர். இருவரும் அரண்மனைக்கு எதிரில் நின்று கொண்டிருந்தனர். மன்னன் அரண்மனை வாசலை நோக்கிப் போனான். இதைப் பார்த்த வாணன், "நீ ஏன் அங்கே போகிறாய்?" என்று கேட்டான்.

உடனே கிழவனாக இருந்த மன்னன், "அதுதான் என் வீடு," என்று கூறினான். திடுக்கிட்ட வாணன் கிழவனைக் கூர்ந்து பார்த்தான். அவன் மன்னன் என்பதைப் புரிந்துகொண்டான். வாணன் வாயடைத்து என்ன செய்வதென்று தெரியாமல் நின்று கொண்டிருந்தான்.

மன்னன் மிக மரியாதையுடன் வாணனைப் பார்த்து, "உன் மகள் தன் பாட்டால் ஐந்து நிமிடம் என்னை மகிழ்ச்சிப்படுத்தினாள். அதற்கு ஒரு தங்க நாணயம் தந்தேன். நீயோ பத்து கேட்டாய். நான் நூறு தருவதாகச் சொன்னேன். அதனால் நீ ஒரு மணிநேரம் சந்தோச மடைந்தாய். உன் பேராசையால் ஏமாற்றம் அடைந்தாய். இனிமேல் இப்படிச் செய்யாதே" என்று கூறினான்.

வாணனும் ஏமாற்றத்துடன் வீடுநோக்கி நடக்க ஆரம்பித்தான். அன்றிலிருந்து பிறரை ஏமாற்றிக்காசு பறிக்க நினைப்பதைக் கை விட்டான். ●

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 22.10.1994.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 61
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல. 59

**பரிசுக்குரியவர்**

ரா.றினோஸா-அல்-நகார் ம.வித்தியாலயம்-மூதூர்.

**பாராட்டுக்குரியவர்கள்**

எம்.சி. நசீபா
மீரா பாலிக்கா மகா வித்தியாலயம்-காத்தான்குடி-06.

ஏ.கொட்வின் பெர்னாந்து- புனித பேதுரு கல்லூரி-கொழும்பு.

வி.சிறீகணன்- புனித பீற்றஸ் பாடசாலை-பம்பலப்பிட்டி.

டி.சதீஷ்குமார்-சிலாபம்.

பா.டினேஸ்- பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி.

செல்வி. பாத்திமா ஹஸ்னா செர்பின்- கல்முனை.

செல்வி.ச.சரத்குமாரி- இ/ஹோட்டன் த.வி-கலவானை.

## விடுகதைளும் விடைகளும்

01. உணவை எடுப்பான். ஆனால் உண்ணமாட்டான். அது என்ன?
02. காற்றே வாகனம். காணுமிடமெல்லாம் இருப்பிடம். அவன் யார்?
03. ஒற்றைக் காலில் நிற்பான். முனிவனும் அல்ல. ஓரக் கண்ணால் பார்ப்பான், குருடனும் அல்ல. தனியாக நிற்பான் அனாதையும் அல்ல. அவன் யார்?
04. எழுதுவதற்கு உதவும். பேனா அல்ல, பார்ப்பதற்கு பயன்படும் புத்தகமும் அல்ல. அது என்ன?

**விடைகள்**

01. அகப்பை 02. தூசி 03. கொக்கு 04. கரும்பலகை.

செல்வராஜ் மகேந்திரன்
நு/வ/இராகலை தமிழ் மகா வித்தியாலயம்-ஹல்கரனோயா.

01. ஒரு பிள்ளை பெற்றவுடன் உயிரை விடுவாள். அவள் யார்?
02. வெண்ணிறப் பீங்கானுக்குள் கருமை நிற திராட்சைப் பழம் அது என்ன?
03. தூக்கி வரப்பட்டு தூக்கில் தொங்க விட்டு தோல் உரிக்கப்பட்டு கிணற்றுக்குள் தள்ளப்பட்டான். அவன் யார்?
04. வாழ வைக்கும் செல்வம், வாரி வழங்கும் செல்வம், அழியாச் செல்வம். அது என்ன?

**விடைகள்**

01. வாழை 02. கண் 03. வாழைப்பழம் 04. கல்வி

வ.சுபத்திரா -இராமகிருஷ்ணாக் கல்லூரி, அக்கரைப்பற்று-07.

01. துடிப்பிருக்கும் இதயமுமல்ல, முள்ளிருக்கும் செடியுமல்ல. அது என்ன?
02. உள்ளே எடுக்கும் வெளியே விடாது. அது என்ன?
03. ஆயிரம்பேர் தடுத்தாலும் ஆரம்ப ஆட்டத்தை நிறுத்தாது. அது என்ன?
04. பிடியில்லாக் குடையை தொட முடியாது. அது என்ன?
05. முகம் பார்த்து வளரும். முடிவில்லாமல் தொடரும். அது என்ன?
06. அம்மா சப்பாணி. அவள் மகள் இருப்பாணி. அவர்கள் யார்?
07. மூடிய பாத்திரத்திற்குள் மூன்று சகோதரர்கள். காலை மாலை எல்லாம் கால்கடுக்க ஓடுவார்கள். யார் அவர்கள்?
08. உருவம் உண்டு, உயிர் இல்லை. அது என்ன?
09. காலையில் பிறப்பான். மாலையில் இறப்பான். அவன் யார்?

**விடைகள்**

01. கடிகாரம் 02. காது 03. கடல் அலை
04. ஆகாயம் 05. உறவு 06. அம்மி-குழவி
07. கடிகாரமுள் 08. சட்டை 09. மலர்(பூ)


நியூடன் ஸ்டன்லி ஜேக்கப்-வாழைச்சேனை.

## படித்துப் பதிந்தவை

- விதி மனிதன்- **நெப்போலியன்**
- கம்பியூட்டரை கண்டுபிடித்தவர்- **எம்டூரிவ்**
- உலக விண்வெளி தினம்- **ஏப்ரல் 12**
- சந்திரனில் முதன் முதல் இறங்கிய கலம்- **லூனா**
- நவீன விண்வெளியின் தந்தை- **சியோல் கோவஸ்க்கி**
- பணக்காரர் மட்டும் பாவிக்கும் நாடு- **லாவோஸ்**
- வோல்கா எனும் வால்வெள்ளியை கண்டுபிடித்தவர்- **எட்மன்ட் ஹேல்**
- அன்னை தெரேசாவின் இயற் பெயர்- **ஆக்னஸ் கோன்க்ஸ்கா போஜாக்சியு**

பிரியதர்ஷினி துரைசாமி-தமிழ் மகளிர் மகா வித்தியாலயம், பதுளை.

## அறிவோம் மனதில் பதிவோம்




*உலகிலேயே மிகச் சிறந்த குதிரைப் பந்தய வீரர் (ஜக்கி) அமெரிக்காவைச் சேர்ந்த வில்லியம் ஷூமேக்கர். இவர் குதிரைப் பந்தயங்களில் விரைவாக குதிரையைச் செலுத்தி எண்ணாயிரத்து 833 வெற்றிகளை பெற்றிருக்கிறார். 1949ம் ஆண்டு மார்ச் 19ம் திகதி முதல் 1990ம் ஆண்டு பெப்ரவரி 3ம் திகதிவரை அவர் குதிரைப் பந்தய வீரராக இருந்திருக்கிறார்.*

*இங்கிலாந்தைச் சேர்ந்த 'அலிஸ்பொலக்' தனது 102ம் வயதில் 'போர்ட் ரெய்ட் ஒவ் மை விக்டரியன யூத்' என்ற புத்தகத்தை எழுதி வெளியிட்டார்.*



*உலகிலேயே மிகப் பெரிய பறவை 'எம்பரா பென்குயின். அன்டாட்டிக்கா பகுதியில் இவை அதிகம் காணப்படும். இதன் உயரம் ஒரு மீற்றர். எடை 43 கிலோ. இவை கடுங்குளிர் பகுதிகளிலேயே வாழ்ந்து பழக்கப்பட்டவை. அதனால் மற்றப் பகுதிகளில் இவை வாழ்வது கடினம்.*

## பெரிய விலங்குகள்



- **எடை அதிகம் உள்ள பூச்சி எது?**
  *ஆபிரிக்க கோலியத் வண்டு. 10 சென்ரி மீற்றர் நீளமும் 10 கிராம் எடையும் உடையது.*
- **மிகப் பெரிய மீன் எது?**
  *திமிங்கல சுறாமீன். இதன் நீளம் 15 மீற்றர்.*
- **நீரிலும், நிலத்திலும் வாழும் பிராணிகளில் மிகப் பெரியது எது?**
  *ராட்சத சாலமாண்டர் என்ற பிராணி மிகப் பெரியது. இது 1.5 மீற்றர் நீளம் வளரும்.*
- **மிகப் பெரிய பறவை எது?**
  *வட ஆபிரிக்காவில் உள்ள ஆண் நெருப்புக் கோழிகள். இவை 2.74 மீற்றர் உயரம்வளரும். இதன் எடை 156.5 கிலோ.*
- **குட்டி போட்டுப் பாலூட்டும் 'மம்மல்' இனப் பிராணிகளில் மிகப் பெரியது எது?**
  *நீலத் திமிங்கலம். இது கடலில் வாழ்வதால் இதனை மீன் இனம் என நினைக்கின்றனர். ஆனால் இது 'மம்மல்ஸ்' இனத்தைச் சேர்ந்தது. இதன் நீளம் 30.5 மீற்றர். கர்ப்பமாக உள்ள நீலத் திமிங்கலத்தின் எடை 203 தொன்னாக இருக்கும் (ஒரு தொன்= ஆயிரம் கிலோ)*

# தேன் கிண்ணம்

'செந்தமிழ் நாட்டு தமிழச்சியே..' என்று தொடங்கும் கவிஞர் வைரமுத்துவின் பாடலை கேட்டிருப்பீர்கள்.
இது அதற்கு ஒரு பதிலாக நம்நாட்டுக் கவிஞர் செ.கு.எழுதியது.

## செந்தமிழ்நாட்டுத் தமிழ் மகனே!

செ.குணரத்தினம்

செந்தமிழ் நாட்டுத் தமிழ் மகனே–நீ
சால்வை வேட்டியை வெறுக்கிறியே!
செந்தமிழ் ஏங்க வீட்டினிலும்–தினம்
சீமை மொழியில்...அறுக்கிறியே!

காளையை அடக்கிய மறத்தமிழா–உன்
கட்டிய மனைவியை அடக்குவதேன்?
மாலையில் 'ஜம்பர்' காலையிலே–நீ
மண்தொடும் 'பெல்ஸை' உடுப்பது ஏன்?

மனைவியின் கற்பைச் சோதிக்கிறாய்–பின்
மற்றவள் கற்பை யாசிக்கிறாய்!
மனைவிக்கு மட்டுமா கற்பு நெறி?–அட
மடையனே உனக்கேன் விலக்குவிதி?

காதலி என்று நேசிக்கிறாய்–அவள்
கற்பினைப் பறித்தபின் யோசிக்கிறாய்
"சா!" என அவளைத் தவிக்கவிட்டு–நீ
சட்டென வேறொன்றைத் தேடிக்கிறாய்!

கடலோடித் திரவியம் சேர்த்தவனே!–இன்று
கடல்தாண்டி அகதியாய் உழைக்கிறியே!
உலகெலாம் ஆண்டவன் பரம்பரையே!–ஐயோ
உனக்கொரு நாடின்றிக் கிடக்கிறியே!

## விடிவைத் தேடி

விலாசம் தொலைந்துபோன
வெண் புறாக்களைத் தேடுவதால்
கறையான் குடிகொண்ட
கடுதாசியாய்
வாலிபம் கரைவதுதான்
மிச்சம்!

காலந் தவறி கூவும்
சேவலைப் பார்த்து சிலர்
விடிந்துவிட்ட தென
வேஷம் போடுவதால்
விடிவெள்ளியும்
வெட்கிக்கொள்கிறது!

மூச்சடக்கத் தெரியாதவர்கள்
முத்துக்குளிக்கச் செல்வதால்
கூழாங்கற்களே
குமிகின்றன!

கீரி பிடித்த கோழிகளாய்
உயிர்கள் மன்றாட
கூற்றுவன் ஆட்சியில்
பிண புஷ்பங்கள்
பூத்துக் குலுங்குகின்றன!

தில்லையடிச் செல்வன்.



## உயிர்

மாமிச
அறைக்குள்
எலும்புக்
கருவிகளை
இயக்கும்
மின் சக்தி.

ஏட்டி.றைஸ்தின்
சிலாவத்துறை.

## ஓர் அகதியின் பாடல்

போகிறேன்
புலம் பெயர்ந்து போகிறேன்.....
அறிமுகங்களும்
அந்நியமானதால்
அகதியாகிப் போகிறேன்.

நான் பிறந்த நாடு
'எனக்குரிமையில்லை'
வெளியேற்றப்பட்டு நான்
வெளியேறிப் போகிறேன்!

நான் சுமந்து செல்வது
என் உடமையை அல்ல,
என்னுயிரையும்
என்னுயிர் காக்கப் பயந்தோடும்
சோகத்தையும் மாத்திரம்தான்.

என் தாயைப் பிரிவது
எனக்கு அது சோகமல்ல,
என் தந்தையை இழப்பது
எனக்கு அதுவும் சோகமல்ல
என் காதலியின் மரணமும்
எனக்கு அதுவும் சோகமல்ல.

பூகம்பம் நிகழ்ந்து
புதைந்து போவதும்கூட
எனக்குப் பெரும் சோகமல்ல;
என் சொந்த ஊரைப் பிரிந்த
துயரத்தைச் சுமந்து போவதுதான்
எனக்கு மிகப் பெரிய சோகம்!

உலக வரை படத்தில்
என் தேசப்படம் மாத்திரம்
உருக்குலைந்து கிடப்பது மாதிரி
என் தேசத்தோடு
வைத்திருந்த
நேசத்தையும்
வதைத்துச் சிதைத்து
என்னிதயத்தையும்
கிழித்துவிட்டார்கள்!

எவருக்கும் சொந்தமில்லாத
சூரியனும்
சந்திரனும் உதயமாகிற
ஒரே வானத்தின் கீழேயே

எங்கேயாவது வாழ்ந்து
சமாதியாகவும்
சம்மதித்துப் போகிறேன்.

போகிறேன்
புலம் பெயர்ந்து போகிறேன்
அறிமுகங்களும்
அந்நியமானதால்
அகதியாகிப் போகிறேன்!

இசார்தீன்–அட்டாளைச்சேனை.

## ஒரு விண்ணப்பம்

உன்
முகச்சூரியன்
சிரிக்கும்போது–நான்
சிந்திக்கவில்லை
நீ...?
சுட்டெரிப்பாய் என்று!

உன் வதனப் பார்வைக்கும்
கணநேர(ப்)
புன்னகைக்கும்
துடுப்பிழந்து
கிடக்கிறது...
என்
இதயக் கப்பல்
ஒரு காதலியின்
கடிதம்போல்

பத்திரமாய்
நேசிக்கப்பட்டவள்...
அன்று நீ...
இப்பொழுது
தவறிவிட்ட
கைக்குட்டையாய்
குப்பைத் தொட்டியில்....

வி.சுதாகர்
அக்கரைப்பற்று–08.

## எனக்கொரு காதலி!

அவள்
கண் பார்த்தேன்
காதலில்லை!

•

அவள்
மடல் கண்டேன்
காதலில்லை!

•

அவள்
மொழி கேட்டேன்
காதலில்லை!

•

அவள்
இடைதொட்டேன்
காதலில்லை.

•

அவள்
இதழ் கடித்தேன்
காதலில்லை!

•

அவள்
உடல் உரசினேன்
காதலில்லை!

•

அவள்
பிரிந்து சென்றாள்
இப்போது
காதலிக்கிறேன்!

•

நிலவு சுடுகிறது
சூரியன் குளிருது
இரவு நீளுது
அவளை காதலிக்கிறேன்!

•

எனக்காக
ஓட்சிசன் வேலை
நிறுத்தும் வரை
காதலிப்பேன்!

•

என் கல்லறையில்
அவளுக்கொரு
காதல் கடிதம்
எழுதச் சொல்வேன்!

•



மு.த.தஸ்ரிப்
அக்கரைப்பற்று.

# கத்தரித்த கடி ஜோக்ஸ்






"சே...மானம், போகுது... மாமியாரும் மருமகளும் இப்படி டைம்டேபிள் போட்டா அடிச்சுப்பீங்க?

### ஏன் குப்தா?



"திடீரென்று ஏன் யாழ்ப் பாணத்திலிருந்து வருவோர் எண்ணிக்கை குறைந்து விட்டது சித்ரகுப்தா?"

"அங்கு போர் இடைநிறுத்தம் நடக்கிறதாம் பிரபு"



"வெடி விபத்தில் தலைவர் படுகாயம்'னு போஸ்டர் அடிக்கட்டுமா தலைவா?"

"வேணாய்யா...! 'கண்ணி' வெடி விபத்தில் தலைவர் காயம்'னு போடு.. அப்பத்தான் ஒரு கவர்ச்சி இருக்கும்!"

"அந்த ஓட்டப் பந்தய வீரர் அடிக்கடி தலையை சொறிஞ்சுக்கிட்டே ஓட றாரே.. அவர் பேரென்ன?"
"பேன் ஜோன்சன்."

•••

"வில்லனுக்கு பிடிக்காத டூ விலர் எது?"
"ஹீரோ ஹோண்டா"

•••

"தலைவர் தினமும் இருமிக் கொண்டே இருக்கி றாரே ஏன்?"
"உட்கட்சி புகைச்சல் அதிகமாயிட்டுதாம்."

•••

"செடி-கொடி எல்லாம் ஏன் பச்சையா இருக்கு?"
"அதற்கு பச்சை தண்ணீர் ஊத்தறதால்!"

•••

## நெத்தியடி



"மனம்விட்டு பேசணும்னு அழைத்து வந்து ஏன் மவுனமா இருக்கிறீங்க?"
"மனதை இன்னொரு பெண்கிட்டே விட்டுட்டேன். என்னை மன்னிச்சிடு."

# இந்த வாரம் உங்கள் பலன்

(16.10.94 முதல் 22.10.94 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

## நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| கன்னி | - சூரியன், புதன் |
| துலாம் | - வியாழன், வெள்ளி, இராகு |
| கும்பம்- | - சனி |
| மேடம் | - கேது |
| கர்க்கடகம் | - செவ்வாய் |

சந்திரன்–கும்பம், மீனம், மேடம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்
(18.10.94 இல் துலா சூரியன்)

### மீனம்:

(பூரட்டாதி, நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பொருள் நஷ்டம், மனக்கவலை. | பி.ப 1 மணி |
| திங்கள்- தொழில் மந்தம், பணச்செலவு. | காலை 7 மணி |
| செவ்வாய்- உயர்ந்த எண்ணம், வெளியிட பயணம். | பகல் 12 மணி |
| புதன்- துயர் அதிகம், செலவு மிகுதி. | பி.ப 1 மணி |
| வியாழன்- காரியானுகூலம், மனமகிழ்ச்சி. | காலை 8 மணி |
| வெள்ளி- அந்நியர் சகவாசம், தொழில் சிறப்பு. | பி.ப 2 மணி |
| சனி- தொழில் சிறப்பு, காரிய நன்மை. | பி.ப 1 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்- 4

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் மாற்றம், மனக்கவலை. | பகல் 12 மணி |
| திங்கள்- பணக்கஷ்டம், கடன்படல். | காலை 7 மணி |
| செவ்வாய்- துயர் அதிகம், முயற்சி தாமதம். | பி.ப 1 மணி |
| புதன்- வீண் மனஸ்தாபம், உறவினர் பகை. | காலை 9 மணி |
| வியாழன்- செய்தொழில் விருத்தி, மனக்குறை நீங்கும். | காலை 10 மணி |
| வெள்ளி- அந்நியர் உதவி, பணவரவு | பி.ப 2 மணி |
| சனி- தெய்வானுகூலம், மனமகிழ்ச்சி. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-1

### இடபம்:

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், வீண் பிரயாசம். | காலை 8 மணி |
| திங்கள்- பெரியோர் நட்பு, கௌரவம். | பி.ப 2 மணி |
| செவ்வாய்- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| புதன்- உறவினர் உதவி, பணவரவு. | பகல் 12 மணி |
| வியாழன்- புதிய முயற்சி, கடன்தொல்லை நீங்கும். | காலை 6 மணி |
| வெள்ளி- வெளியிடப் பயணம், தனலாபம். | பகல் 11 மணி |
| சனி- துயர் நீங்கும், பூமியால் இலாபம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, பணவரவு. | காலை 6 மணி |
| திங்கள்- அந்நியர் உதவி, பொருள்லாபம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- கடன்தொல்லை நீங்கும், மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| புதன்- குடும்ப சுகம், மனக்கலக்கம். | பி.ப 2 மணி |
| வியாழன்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | காலை 6 மணி |
| வெள்ளி- பெரியோர் நட்பு, மன நிம்மதி. | பகல் 12 மணி |
| சனி- துயர் நீங்கும், பணவரவு. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### கும்பம்:

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- குடும்ப சுகம், பொருள் பேறு. | பகல் 12 மணி |
| திங்கள்- பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி. | காலை 6 மணி |
| செவ்வாய்- மனக்குறை நீங்கும், முயற்சி பலிதம். | பி.ப 1 மணி |
| புதன்- தனலாபம், உறவினர் உதவி. | காலை 7 மணி |
| வியாழன்- அரச விரோதம், மனக்கலக்கம். | பகல் 12 மணி |
| வெள்ளி- துயர் அதிகம், செலவு மிகுதி. | காலை 9 மணி |
| சனி- பயனற்ற செயல், வெளியிடப் பயணம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 3

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பொருள் லாபம், இல்லச்சிறப்பு. | காலை 8 மணி |
| திங்கள- திடீர் பயணம், உயர்ந்த நட்பு. | காலை 7 மணி |
| செவ்வாய்- பயனற்ற செயல், தொழில் மந்தம். | பகல் 12 மணி |
| புதன்- செய்தொழில் விருத்தி, பணவரவு. | காலை 9 மணி |
| வியாழன்- வெளியிடப் பயணம், கௌரவம். | பி.ப 1 மணி |
| வெள்ளி- குடும்ப நன்மை, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| சனி- அந்நியர் உதவி, அரச விரோதம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்- 4

### மகரம்:

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- புதிய முயற்சி, பணவரவு. | பி.ப 2 மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | காலை 7 மணி |
| செவ்வாய்- குடும்ப நன்மை, சுபகாரிய மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| புதன்- அந்நியர் சகவாசம், பணக்கஷ்டம். | காலை 8 மணி |
| வியாழன்- தெய்வானுகூலம், காரியசித்தி. | பி.ப 1 மணி |
| வெள்ளி- உறவினர் பகை, மனக் கலக்கம். | காலை 6 மணி |
| சனி- பொருள் வரவு, காரியசித்தி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம் -5

### சிம்மம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் பேறு, பணவரவு. | பி.ப 2 மணி |
| திங்கள்- மனமகிழ்ச்சி, அந்நியர் உதவி. | காலை 8 மணி |
| செவ்வாய்-புதிய முயற்சி, பணக்கஷ்டம். | பகல் 12 மணி |
| புதன்- உறவினர் பகை, மனக்கலக்கம். | காலை 6 மணி |
| வியாழன்- செய்தொழில் நஷ்டம், பொருள் விரயம். | பகல் 12 மணி |
| வெள்ளி- மனக்குறை நீங்கும், உயர்ந்த நிலை. | காலை 7 மணி |
| சனி- தனலாபம், செலவு மிகுதி. | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 2

### தனு:

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, காரியானுகூலம். | பகல் 12 மணி |
| திங்கள்- மனக்குறை நீங்கும், பணவரவு. | காலை 6 மணி |
| செவ்வாய்- தொழில் விருத்தி, வெளியிட பயணம். | பி.ப 1 மணி |
| புதன்- தனலாபம், குடும்ப சுகம். | காலை 8 மணி |
| வியாழன்- மனக்கலக்கம், வீண் பழி கேட்டல். | காலை 7 மணி |
| வெள்ளி- எதிர்பார்த்த நன்மை, தேகசுகம். | பகல் 12 மணி |
| சனி- துயர் நீங்கும், மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம் -6

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் விருத்தி, பூமியால் இலாபம். | காலை 10 மணி |
| திங்கள்- பொருள் வரவு, முயற்சி பலிதம். | பி.ப 1 மணி |
| செவ்வாய்- துயர் நீங்கும், மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| புதன்- வீண் குறை கேட்டல், மனப்பயம். | பகல் 12 மணி |
| வியாழன்- எடுத்தகாரியம் வெற்றி, செலவு மிகுதி. | காலை 7 மணி |
| வெள்ளி- மனமகிழ்ச்சி, பொருள் வரவு. | காலை 8 மணி |
| சனி- செய்தொழில் விருத்தி, பணக்கஷ்டம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-9

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- உயர்ந்த நிலை, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| திங்கள்- பெரியோர் நட்பு, பணத்தடை. | காலை 6 மணி |
| செவ்வாய்- உறவினர் உதவி, தொழில் சிறப்பு. | பி.ப 1 மணி |
| புதன்- கடன் பயம், குடும்ப கலகம். | காலை 7 மணி |
| வியாழன்- துயர் நீங்கும், பயனற்ற செயல். | காலை 9 மணி |
| வெள்ளி- இனசனக் கொண்டாட்டம், மனமகிழ்ச்சி. | காலை 6 மணி |
| சனி- செலவு மிகுதி, உறவினர் பகை. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 6

### கன்னி:

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- மனமகிழ்ச்சி, ஆடம்பரச் செலவு. | காலை 6 மணி |
| திங்கள்- பொருள் வரவு, கடன் சுமை குறையும். | பி.ப 1 மணி |
| செவ்வாய்- மனக்கலக்கம், துயர் அதிகம். | காலை 8 மணி |
| புதன்- அந்நியர் சகவாசம், கௌரவம். | பகல் 12 மணி |
| வியாழன்- பயனற்ற செயல், உயர்ந்த எண்ணம். | காலை 7 மணி |
| வெள்ளி- மனக்குறை நீங்கும், தொழில் விருத்தி. | பி.ப 1 மணி |
| சனி- தொழில் சிறப்பு, பொருள் இலாபம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 3




# மலக்குழியில் பிறந்த குழந்தை

இங்கிலாந்திலுள்ள லங்காஷயர் நகரில் வசிக்கும் மார்க்கிரட் முறே என்ற 26 வயதுப் பெண்மணி கருவுற்றிருந்தாள். ஏழு மாத கர்ப்பிணியான இப்பெண் வழக்கம்போல் மருத்துவப் பரிசோதனைக்குச் சென்றிருந்தார். மலம் கழிக்கவேண்டும்போல் தோன்றவே அங்கே இருந்த மலசல கூடத்துக்குள் சென்றார்.

எதிர்பாராத விதமாக குழந்தை வெளியேறி மலக்குழிக்குள் தலைகீழாக விழுந்துவிட்டது. செய்வதறியாது மார்கிரட் கத்தினாள். இவளுடன் துணைக்கு வந்த பேணடேற் மேயர் என்ற 24 வயதுப் பெண் உதவிக்கு ஓடினார். குழந்தையின் தலை மலக்குழியுள் பொறுத்துக் கிடந்தது. அவசர அவசரமாக தனது சாதுரியத் தன்மையைப் பயன்படுத்தி குழந்தையை உயிருடன் வெளியே எடுத்து விட்டாள்.

குழந்தையின் உடல் நீலம் பாய்ந்திருந்தது. முதலுதவிகளைச் செய்து கொண்டிருக்கும்போதே தகுந்த மருத்துவ உதவிகளும் கிடைத்தன. குறைப் பிரசவம் என்பதனால் உயிர் காக்கும் கருவியில் குழந்தை வைக்கப்பட்டது. இதன் எடை 5 இறாத்தல் 8 அவுன்சாகும்.

குழந்தையின் தாய் மார்கிரட்டும் தந்தை மேக்கேலும் தங்கள் குழந்தையைக் காப்பற்றித் தந்த பேணடேற்ருக்கு என்றும் நன்றியுள்ளவர்களாக இருப்பார்கள்.

# செவி எப்படி–குணம் அப்படி

'சாமுத்திரிகா லெட்சணம்' என்று ஒரு நூல் இருக்கிறது. மிகப் புராதனமான காலத்தில் இந்தியாவில் உருவான கருத்துக்களைக்கொண்டுள்ள இந்நூல் மனிதனின் ஒவ்வொரு அங்கத்தையும் விபரித்து அதன் அமைப்பு-அளவுப் பரிமாணங்களைக் கொண்டு மனிதர்களின் குண நலன்களைக் கூறுகிறது. இந்நூலில் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் நூற்றுக்கு நூறு உண்மை என்றே அறிஞர்கள் கூறுகின்றனர்.

'சாமுத்திரிகா லெட்சணம்' நூலின் கருத்துக்கள் உலகின் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. ஜேர்மனியர்களும் ஃபிரெஞ்சுக்காரர்களும் இந்நூலினை நன்றாகக் கற்றறிந்துள்ளார்கள்.

காதுகளின் அமைப்பு-வடிவங்களைக்கொண்டு ஒரு நபருடைய சுபாவத்தை அறிய முடியும் என்று ஃபிரான்ஸ் நாட்டில் போர்டேயோக்ஸ் எனும் இடத்தைச் சேர்ந்த டாக்டர் லூயிஸ் மார்க்சண்ட் கூறுகிறார். மனிதர்களுடைய காதுகள் 4 வகைப்பட்டன என்று கூறும் டாக்டர் மார்க்சண்ட், சிங்கக் காது, மாட்டுக்காது, குரங்குக்காது மற்றும் ஓநாய்க்காது என்று அவற்றுக்குப் பெயருமிட்டு அக்காதுகளுக்குரியவர்களின் குணாதிசயங்களையும் விரித்திருக்கிறார்.



**சிங்கக் காது:** இக்காதுக்கு உள் மடிப்புகள் எதுவும் இருக்காது. எலும்பும் குறைவு. விளிம்புவரை ஒரே சமமாக பரந்திருக்கும்.

இத்தகைய காதுகளை உடையவர்கள் எப்போதும் தலைமை தாங்கும் நிலையிலிருப்பார்கள். எதிலும் முடிவெடுப்பதில் தயக்கம் காட்டமாட்டார்கள். அதேபோல் எடுத்த முடிவினை எக்காரணம் கொண்டும் மாற்ற நினைக்கமாட்டார்கள். உடலாலும் உள்ளத்தாலும் எதையும் தாங்கும் இதயமுடைய இவர்கள் விளையாட்டுகளிலும் முன்னணி வகிப்பார்கள். தங்கள் முடிவுகளில் திடமாக இருப்பார்கள். விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை குறைவு.

நெப்போலியன், ஜூலியஸ் சீசர், மற்றும் ஜோ ஆன் ஒஃப் ஆர்க் போன்றவர்கள் சிங்கக் காதுடையவர்களே.



**மாட்டுக்காது:** இத்தகைய காதுகளின் மேற் புறமும் கீழ்ப்புறமும் அகன்று வளைந்திருக்கும். விளிம்பு சுருண்டிருக்கும். தலையுடன் ஒட்டியே காதிருக்கும்.

மாட்டுக்காதுடையவர்கள் அமைதியுடன் காணப்படுவர். சிந்தனை ஆற்றலுள்ளவர்கள். வேதாந்தப் போக்குடையவர்களாகவும் சிலர் காணப்படுவர். எத்தகைய முடிவினையும் ஆர அமர யோசித்துத்தான் எடுப்பார்கள். அறிவியல் திடீரென உணர்ச்சிவசப்பட மாட்டார்கள். கணக்கியல், போன்ற துறைகளில் ஈடுபாடுடைய இவர்கள் பெரும்பாலும் எழுத்தாற்றலுள்ளவர்களாகவும் காணப்படுவர்.

நகைச்சுவைக்கு அதிக இடம் தரமாட்டார்கள். எட்கா அலன் போ, தோமாஸ் எடிசன் மற்றும் ஃபுளோரன்ஸ் நைட்டிங்கேல் ஆகியோர் மாட்டுக்காதுடையவர்களே.



**குரங்குக் காது:** பல கோணங்களைக் கொண்ட சதைப் பிடிப்புள்ளதாக இக்காது அமைந்திருக்கும். காது மடல் மென்மையாக இருக்கும்.

இக்காதுகளையுடையவர்கள் சுறுசுறுப்புடன் இயங்குவார்கள். வாயாடிகள்; ஒரே தடவையில் பல காரியங்களைச் செய்யும் எண்ணம் கொண்டு அவதிப்படுவார்கள். கற்பனை வளம் மிக்கவர்கள். மறதியும் அதிகம் இருக்கும். எக்காரியத்திலும் பொறுப்பற்றவர்களாகவும் இருப்பார்கள்.

அல்பேர்ட் இயன்ஸ்ரீன், பேப் றூத், நீரோ மற்றும் காத்தறின் போன்றவர்கள் குரங்குக் காதுடையவர்களே.



**ஓநாய்க்காது:** மேற்புறம் ஒடுங்கியிருக்கும். உட்பகுதி வெளியே புடைத்திருக்கும். காது மடல் சதைப் பிடிப்பாகச் சிறுத்துக் காணப்படும்.

ஓநாய்கள் எப்போதும் எதிர்த்துத் தாக்கும் போர்க்குணம் கொண்டிருப்பதைப்போன்று இக்காதுடையவர்களின் சுபாவமும் இருக்கும். சிற்சில அம்சங்களில் சிங்கத்தின் குணங்களும் இவர்களுக்கு இருக்கும். தங்களுக்கு வேண்டிய காரியங்களை வெறும் உணர்ச்சிகளுக்கு இடம் கொடுக்காமல் செய்து முடித்துவிடுவார்கள். சிங்கத்தைப்போன்று தலைமை தாங்கும் தன்மை இவர்களிடம் கிடையாது. சாதுரியத்தினால் காரியங்களைச் சாதித்து விடுவார்கள். தங்கள் தந்திரோபாயங்கள் பலிக்கவில்லையானால் நேரடியாகவே மோதிக்காரியமாற்ற முற்பட்டுவிடுவார்கள். பிறர் என்ன எண்ணுவார்கள் என்று சிந்திக்கமாட்டார்கள். தயங்காமல் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்துவார்கள். தங்களை எதிர்ப்போரை சும்மா விடமாட்டார்கள். இவர்களுக்கு நண்பர்களும் குறைவு.

பெனடிக்ற் அர்னோல்ட், ஜெங்கிஸ்கான் மற்றும் மாதா ஹரி போன்றவர்கள் ஓநாய்க் காதுடையவர்களே.

பி.கு: இவை நூறுவீதமான உண்மைகளாக இருக்கும் என்று நம்ப வேண்டாம்.

□□□□

இது ஆடவர் ஸ்பெஷல்

# கனவுக் கன்னியை அடைவது எப்படி?



## ஆண்கள் ஜமாய்க்க அற்புதமான உத்திகள்

"உன்னாலே தூங்கலை மம்மா யம்மா" என்று தங்கள் கனவுக் கன்னியை நினைத்து கலங்கும் ஆண்கள் இனிக் கவலைப்படத் தேவையில்லை.

உளவியல் நிபுணர் டாக்டர் ஆண்ட்று ஸ்ரேன்ஷொப் ஆண்களுக்காக சிந்தித்து பெண்களை ஆராய்ந்து– மன்னிக்கவும்... பெண்களைப் பற்றி ஆராய்ந்து அட்டகாசமான உத்திகள் சிலவற்றை தந்திருக்கிறார்.

புகழப்படுவதை பெண் விரும்புகிறாள் என்பதுதான் இந்த உத்திகளின் அடிப்படை சமாச்சாரம்.

'எந்தப் பெண்ணிலும் இல்லாத ஒன்று', 'இஞ்சி இடுப்பழகி' என்பது மாதிரியான புகழ்ச்சிகளும் ஓ.கே. பெறுகின்றன.

இனி டாக்டர் ஆண்ட்று கூறும் உத்திகளை உங்கள் புத்திக்கு ஏற்ப உபயோகிக்கலாம். இசகு பிசகாக பாவித்து வாங்கிக்கட்டிக்கொண்டால் நாம் பாத்திரவாளிகளல்ல' என்ற முக்கிய குறிப்போடு இதோ அந்த உத்திகளை தருகிறோம்.

பெண்களின் அன்பினைப் பெறுவதற்கு எத்தகைய உபாயங்களைக் கையாளலாம் என்று டாக்டர் ஆண்ட்று சில மார்க்கங்களைத் தருகிறார்.

- **தோற்றம்:** அவளுடைய கவர்ச்சியான தோற்றத்தினை நீங்கள் பெரிதும் விரும்புவதாக வெளிப்படையாகக் கூறுங்கள். அவளை அடைவதற்கு நீங்கள் பெருமைப்படுவதாக சொல்லுங்கள். அவளுடைய மெருதுவான கைகள், சிகை அலங்காரம், அழகான-அளவான கால்கள் பற்றியெல்லாம் வர்ணியுங்கள்.
- **புலனுணர்வின்பம்:** உங்களுடைய உணர்வுகளைத் தூண்டிவிடும் சக்தியனைத்தும் கொண்டிருப்பதனாலேயே அவளை நீங்கள் தேர்ந்தெடுத்ததாகக் கூறுங்கள். வேறு எத்தனையோ பெண்களை அடையும் வாய்ப்பிருந்தும் இவளிடம் ஏதோவொரு சிறப்பம்சம் இருப்பதனாலேயே நீங்கள் இவளை விரும்பியதாகக் கூறுங்கள். இவளுடைய அளவான அலங்காரம் முதலியவற்றாலேயே நீங்கள் கவரப்பட்டதாக எடுத்துக்கூறுங்கள்.
- **தொழிலும் பணியும்:** ஒரு மனைவியோ தாயோஅவள் தன் வீட்டில்– தான் செய்யும் பணிவிடைகளுக்கு தகுந்த சன்மானத்தை எதிர்பார்க்கிறாள். இது பொன்னாலும் பொருளாலும் பூரணமாவதில்லை. கணவனாலும் குடும்பத்திலுள்ள ஏனையோராலும் பாராட்டப்படுவதன்மூலம்தான் இச்சன்மானம் பெண்ணுக்குக் கிடைக்கிறது. தாயாகவும் தாரமாகவும் அவள் இருந்து ஆற்றும் பணிகளுக்கு ஈடோ இணையோ இல்லை என்பதனை அவ்வப்போது எடுத்துக் கூறும்போது பெண்மை பெருமை அடைகிறது.

ஒரு அலுவலகத்தில் ஒரு பெண் புரியும் வேலைக்கு உரிய பாராட்டினையும் இந்த ரீதியிலேயே அவள் எதிர்பார்க்கிறாள்.

வீட்டிலோ அலுவலகத்திலோ உரிய பாராட்டைப் பெண் பெறும்போது பாராட்டுபவர்மீது இயல்பாகவே அவளுக்குப் பற்றுதல் ஏற்பட்டுவிடுகிறது.

- **பெண்மை:** ஒரு பெண் தான் பெண்மைக்குரிய சகல லெட்சணங்களுடனும் இருப்பதாக– ஆணால் மெச்சப்படுவதை விரும்புகிறாள். அவளுடைய அங்கங்கள் அத்தனையும் பெண்மையின் பிரதிபலிப்பாக இருக்கிறதையே அவள் விரும்புகிறாள். "உன்னில் பெண்மை பொலிந்திருப்பதனாலேயே என்னிடம் ஆண்மை துளிப்பதனை உணர்கிறேன்" என்று பாராட்டலாம். அவள் பிறருடன் நடந்துகொள்ளும் முறையினையும் பாராட்டுதலை அவள் பெருமையுடன் ஏற்கிறாள்.
- **உடை அலங்காரம்:** பெண்கள் தங்களுக்கேற்ற உடைகளைத் தாங்களே தேர்ந்தெடுத்துக்கொள்வார்கள். எந்த உடையாக இருந்தாலும் அதனைப் பாராட்டுவதுதான் முக்கியம். உங்களுக்குப் பிடித்தமில்லாத உடையாக இருந்தாலும் அதனை உடனடியாக விமர்சிக்க முந்தி விடாமல் முதலில் பாராட்டிவிட்டு பின்னர் 'இது வேறு விதமாக இருந்தால் இன்னும் சிறப்பாக இருக்கும்' என்று கூறலாம்.

இவ்வாறெல்லாம் கூறும் டாக்டர் ஆண்ட்று, "வின்னாரியை வைத்து ஈக்களைப் பிடிப்பதைவிட தேனை வைத்து ஈ பிடிப்பது மிகவும் சுலபம்" என்று ஒரு புதுமொழியையும் கூறியிருக்கிறார். என்ன, டாக்டர் ஆண்ட்றுவுக்கு கைகொடுக்கலாம் என்று தோன்றுகிறதா?

# ஏன் இந்தக் குறை?

வயது முதிர்ந்த ஆண்கள் மத்தியில் நிலவிவந்த பாலியல் வீரியமின்மை தற்போது நடுத்தர வயதைக்கொண்ட ஆண்களையும் அதிகமாக பாதித்து வருவதை ஆய்வுகள் புலப்படுத்தியுள்ளன.

பாலியல் வீரியம் தொடர்பாக சமீபத்தில் அமெரிக்காவில் நடத்தப்பட்ட ஆய்வுகளில் நடுத்தர வயதைக்கொண்ட 1300 அண்கள் பங்குபற்றியிருந்தனர். இவர்களில் 68%மானவர்களுக்கு வீரியக் குறைவு ஏற்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இவர்களைக் கொண்டு மேலும் நடத்தப்பட்ட ஆய்வுகளின்படி கீழ்காணும் காரணத்தை கொண்டோரே இக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டிருந்தமையை உணரக்கூடியதாக இருந்தது:

1. புகைபிடித்தோர்,
2. சில மருந்து வகைகளை தொடர்ச்சியாக பாவித்து வந்தோர்,
3. மனக் குழப்பத்தோடு வாழ்ந்து வருபவர்கள்.



எனவே கீழ்காணும் சுகவீனம், பழக்கம், குணாம்சம் இருக்கப்பெறுமானால் நிச்சயம் அவர்கள் பாலியலில் வீரியக்குறைவுக்கு ஆளாக நேரிடும் என்பதை நினைவில் இருத்திக்கொள்ளவேண்டும்.

- இருதய நோய்
- நீரிழிவு, நெஞ்சுநோய், இரத்த அழுத்தம்
- சிறு பிரச்சனையையும் பெரிதாக்கி உணர்ச்சிவசப்படுதல்
- சந்தைகளில் கிடைக்கும் கண்டநிண்ட மாத்திரைகளை அடிக்கடி பாவித்தல்
- தமது எதிர்பார்ப்புக்கள் நிரந்தரமாகவே சிதைவுபட்டோர்.

இந்த தகவல்களை அமெரிக்க 'ஹெல்த்' சஞ்சிகை வெளியிட்டுள்ளது.



"குழந்தை சிரிக்கிறது. இன்னுமொரு தடவை பிளீஸ்....."

மனோகருக்கு காதல் ஒரு தொழில் என்று இந்திரா சொன்னாள். சொன்னபோது கண்களில் நீர் திரையிட்டது.

'தெரியும்' என்றாள் காயத்திரி. மனோகர் பெண்களை நேசிக்கவில்லை- சேகரித்தான் என்றும் தெரியும் என்றாள் காயத்திரி.

காயத்திரிக்கு எதுவரை தெரிந்திருக்கிறது என்று அறிய,

"ஏன்?" என்று ஒற்றைச் சொல்லாய் கேள்வி போட்டாள் இந்திரா.

காயத்திரியின் முகம் இறுகியது. உதடுகளை மடித்து பற்களால் கவ்விக்கொண்டாள்.

□□□

"மனோ! இது சித்ரா. என் உயிர்த்தோழி."

இந்திரா அறிமுகம் செய்ய மனோ சித்ராவைப் பார்த்து மனதுக்குள் 'வாவ்' என்றான். கை நீட்டினான்.சித்ரா ஒரு நொடி தயங்கிவிட்டு கை நீட்டினாள். கை குலுக்கிவிட்டு,

"சித்ரா உங்களை பார்த்தால் எனக்கு பொறாமையாக இருக்கிறது"

சித்ரா ஆச்சரியமாகி விழி விரிக்க,

அதுவும் அவளுக்கு மேலும் அழகாகத் தெரிய மனோகர் மனதில் குறித்துக்கொள்ள, சித்ரா,

"ஏன் மிஸ்டர் மனோகர்?" என்றாள்.

"இந்திரா என் உயிர். அதில் பாதி உங்களிடம் தந்துவிட்டாள் என்றால் மீதிதானே பொருத்தமான வேலை தேடுவது கஷ்டம்!"

சித்ராவின் முகம் சிவப்பு ரோஜாவாக, இந்திரா சித்ரா அருகில் நிற்பதையும் மறந்து மனோகரின் வயிற்றில் குத்தினாள்.

"எப்போ?"

"என்ன?"

"சித்ராவுக்கு வேலை?"

"எப்போவென்றாலும்."

"இப்போவேயா?"

"நான் ரெடி."

"என்ன?"

"வேலையில் சேர்த்துவிட."

"எங்கே? என்ன வேலை?"

"என் கம்பனியிலேயே. என்ன வேலை என்பதை பொஸ்தான் தீர்மானிக்க வேண்டும்."

என்றவன், பிறகு சட்டென்று,

"சித்ரா யூ ஆர் லக்கி."

சித்ரா முகம் முழுக்க சந்தோசமாகி,

"ஏன்?"

"ஒரு வாரத்திற்கு முன்னர்தான் பொஸ் தனக்கு ஒரு செயலாளர் வேண்டும் என்று சொன்னார். அநேகமாக அந்தப் பதவி உங்களுக்கு கிடைக்கலாம்."

பார்த்தாயா என் மனோவின் திறமையை என்பதுபோல சித்ராவைப் பார்த்தாள் இந்திரா.

" தாங்யூ மிஸ்டர் மனோகர்."

"இப்போதே சொல்லி தப்பிக்கொள்ள

என்றான் சித்ரா சென்று மறையும்வரை பார்த்துக்கொண்டிருந்த மனோகர்.

"என்ன அப்படியா? அது சரி நான் மட்டும் அழகாக இல்லையாக்கும்?"

"கண் இல்லாதவன்கூட அப்படிச் சொல்லமாட்டான்."

"கண் இல்லாதவனுக்கு எப்படித்தெரியும்?"

"கண்தானே இல்லை. கை இருக்கிறதல்லவா? கண்ணால் காண்பதும் பொய். காதால் கேட்பதும் பொய். தீர ஆராய்ந்து சொல்வதே மெய். சோ... கையால்..."

"போதும்...நீ மிக மோசம். எனக்குப் பிடிக்கவில்லை."

"எது கையால்.."

"சே... முட்டாள்! நீ சித்ராவை பார்த்து வழிந்தது, அழகி என்று புகழ்ந்து சோப் போட்டது."

"உண்மையைச் சொன்னேன் அது தப்பா?"

"அப்ப என்னைப் பற்றி நீ என்னிடம் சொன்னதெல்லாம் பொய். சரியா?"

"நோ.நோ. நீ மகா மகா அழகி. சித்ரா அழகி. ஏணி வைத்தாலும் உன்னை எட்டிப் பிடிக்க முடியுமா அவள்... என்ன பெயர்..ஆ. சித்ராவால் உன்னை?"

"டுப்தானே?"

"ஒரிஜினல் அபிப்பிராயம்."

"சத்தியம் செய்."

# எழுதுவது ரசிகன்

"குயிலுக்கு வான் பருந்து இணையாகுமா? நல்ல துணையாகுமா? சொல்லக் கூடாத ஆசை நெஞ்சில் வரலாகுமா? அது முறையாகுமா?"

கவியரசு கண்ணதாசன்

உடம்பெல்லாம் சூடாகி நாவரண்டது போல் இருந்தது.

சின்னத் திரையில் ஒரு பெண்ணும் அவள் காதலனும் காட்ஸ் விளையாடிக் கொண்டு, சிரித்துக்கொண்டு, இடைக்கிடையே தொட்டுக்கொண்டார்கள்.

இந்திரா நாவால் உதட்டை ஈரப்படுத்திக் கொண்டாள். தொண்டைக்குள் ஒரு பந்து விழுந்து அடைத்தது போல் இருந்தது. முயற்சித்து வார்த்தைகள் திரட்டி,

"மனோகர் என்ன இது? படம் பார்க்கவா என்னை.."

மனோகர் திரும்பி சிரித்தது அவள் பேச்சை நிறுத்தியது.

"படம்தான். ஆனால் வெள்ளித்திரையில் பார்க்க முடியாத படம் பொறு."

என்று கண்ணடித்தான். திரையில் அவள் அவனைப் பார்த்து "ரொம்ப புழுக்கமாக இல்லை."

கேட்டுக்கொண்டே கையில் இருந்த சீட்டுக்களை கீழே வைத்துவிட்டு, மிக அலட்சியமாக மேலே அணிந்திருந்த ரீசேட்டை தலை வழியாக கழற்றி எறிந்தாள்.

இந்திராவுக்கு கூச்சமாக இருந்தது. எழுந்து போய்விடலாம் என்று நினைத்தாள்.

திரையிலே அவன் ஏதோ மோசமான ஜோக் சொல்ல அவள் குலுங்கி குலுங்கச் சிரித்தாள்.

அவன் தன் கரத்தில் இருந்து 'காட்ஸ்' மேசை மீது போட்டான். மயக்கமாய் எழுந்துவந்து அவள் நெற்றியில் முத்தமிட்டான்.

இங்கே மனோகர் திரும்பி இந்திராவைப் பார்த்தான்.

"போதும், நான் போகவேண்டும்."

மனோகர் அவள் கையில் பிடித்து அழுத்தினான்.

"பந்தியில் பாதியில் எழும்புவது நாகரிகமில்லை. பந்தியே இப்போதுதான் ஆரம்பம். பார்த்தால்தானே பரிமாறலாம்."

"மனோ ப்ளீஸ் நான் போகவேண்டும்."

என்றவள் திரையில் விழிகள் சென்றதும் பட்டென்று முகத்தை மூடிக்கொண்டாள்.

மனோ அவள் முகத்தை மூடிய கரங்களை தன் கரங்களால் விலக்க, இந்திரா அவன் நெஞ்சில் முகம் புதைத்துக்கொண்டே,

"முதலில் அதை நிறுத்து."

என்றாள். மனோ அவளை விலக்கிவிட்டு எழுந்துபோய் வி.சி.ஆர் நிறுத்திவிட்டு தன் சட்டையைக் கழற்றினான்.

"இப்போது கண்களைத் திறக்கலாம் நிறுத்திவிட்டேன்."

என்றான். கண் திறந்த இந்திராவுக்கு அவனின் வெற்று மார்பும், வாளிப்பும் தடுமாற்றம் தர தலை குனிந்தாள்.

மனோ அருகில் வந்து,



அங்கம் 35

லாம் என்று நினைக்காதீர்கள் சித்ரா. வேலை கிடைத்தவுடன் உங்களை ஒரு முறி முறிக்காமல் விடமாட்டேன். பாருங்கள்."

சித்ரா வெள்ளையாய் சிரித்து,

"நீங்கள் கேட்காமலேயே நான் செய்வேன்."

"எதற்கு இந்திரா?"

"இனி எந்தப் பெண்ணையும் புகழ்வதில்லை என்று."

"போச்சுடா. பொறாமைதானே?"

"தான். நீ முதலில் சத்தியம் பண்ணு."

"எங்கேயடித்து."

என்றுவிட்டு விஷமமாய் பார்த்தான்.

"சீ...ராஸ்கல். தலையில் அடித்து."

"நம்பவில்லையா என்னை?"

"முதலில் சத்தியம் பண்ணு."

"இப்போதே சொன்னால் ஒரு திறில் இருக்காது. வா."

இந்திரா தயங்கி மணிக்கட்டு திருப்பி நேரம் பார்த்து,

"இப்போதே நேரமாகிவிட்டது மனோ. வீட்டில் அண்ணா துள்ளுவான்."

"விடாதே விடாதே டுப் விடாதே. வினோவுக்கு இன்று கச்சேரி இருக்கிறது. ஹோட்டல் தாபரோயில் இருப்பான்."

"யமகாதகன் நீ. சரி வா. ஆனால் உடனே போய்விடுவேன்."

"சரி.சரி. வேறு நிபந்தனைகள் ஏதாவது உண்டா அல்லது..."

எனக்கு."

இரு பெண்களும் சட்டென்று உடைந்து சிரித்தார்கள்.

"மனோ உன்னால் ஒரு உதவியாக வேண்டும்."

"என்ன இந்திரா இது. உதவி கிதவி என்று, உத்தரவு என்று சொல்."

இந்திரா சற்று வெட்கப்பட்டு,

"சித்ராவுக்கு ஒரு வேலை வேண்டும்."

"கஷ்டம்தான்."

இந்திரா முகம் சுருங்கினாள்.

"கவிழ்த்திட்டியே மனோ?"

என்றாள்.

"நானா? என்ன இந்திரா பொய் குற்றச்சாட்டு சுமத்துகிறாய். குற்றச்சாட்டுக்கு ஆதாரம் உண்டா? இல்லாவிட்டால் ஆயிரம் பொன் நஷ்டஈடாக செலுத்தவேண்டி வரும். ஓ.கேயா?"

"இந்த பேச்சுக்கு ஒன்றும் குறைச்சல் இல்லை. செயலில்தான் ஒன்றும் இல்லை."

"நீ விட்டால்தானே?"

இந்திரா அவனை முறைத்து, சித்ராவைப் பார்த்து வெட்கப்பட, சித்ரா வேறெங்கோ பார்ப்பதுபோல பாவனை செய்ய, மனோவிடம் திரும்பி,

"என் மனோகரால் முடியாதது எதுவுமில்லை என்று சொல்லி சித்ராவை அழைத்து வந்தேன் பார். கஷ்டம் என்று சொல்லி என்னை கவிழ்த்துவிட்டாய் நீ."

மனோகர் சிரித்தான்.

"நான் கஷ்டம்தான் என்று சொன்னது ஏன் தெரியுமா இந்திரா?"

"தெரியாது!"

கோபம் குரலில் தணிக்கையில்லாமல் தெரிந்தது.

"இப்படி ஒரு அழகான பெண்ணுக்கு

"அப்படியா? அதுதான் எனக்கும் பிடிக்கும். பார்க்கலாம்."

"பார்க்கலாமே?"

"பார்க்கத்தானே போறேன்."

என்றான். சித்ராவை தன் பார்வைக்குள் முழுதாக வாங்கியபடி.

"ஓ.கே. இந்திரா. இனி நான் வாபஸ்

# கொலை விழும் நேரம்

வாங்குவதுதான் முறை. இல்லாவிட்டால் சிரித்துக்கொண்டே மனதில் கரடி என்று எனக்கு பட்டம் தருவாய் நீ. வரட்டுமா. எங்கே நான் வரவேண்டும் மிஸ்டர் மனோகர்?"

என்றாள். அதுவரை அவளை சுவாரசியமாக விழுங்கிக்கொண்டிருந்த மனோகர் நிதானித்து,

"நாளைக்கு வேண்டாம், மறுநாள் காலை 9 மணிக்கு என் கம்பனிக்கே வந்துவிடுங்கள். கம்பனி முகவரி தெரியும் அல்லவா?"

"தெரியும். ஓ.கே.....ஸீ.யூ."

"நில்லடி நானும் வருகிறேன்."

"மனோகர் முறைக்கிறார் பார். பிறகு கோபத்தில் எனக்கு வேலையே கிடைக்காது தாயே. நீ நின்று நிதானமாக வா. மிஸ்டர் மனோகர் இந்திராவை சேதமில்லாமல் திருப்பி அனுப்பி வையுங்கள் ப்ளீஸ்."

இந்திரா கைப்பையை ஓங்க சித்ரா விலகிச் சிரித்து, திரும்பி நடக்க, அசைவுகள் இரசித்து முறைத்தான் மனோகர்.

"வாயாடி.. ஆனால் ரொம்ப நல்லவள்."

"அப்படியா?"

"காதலின் எதிரி சந்தேகம்தான் இந்திரா."

"சத்தியம் பண்ணு. கதை வேண்டாம்."

"உன் பிடிவாதமும் அழகாக இருக்கிறது."

"குளிரமாட்டேன். சத்தியம் பண்ணு."

"இந்தச் சத்தியத்தை கண்டுபிடிச்சது யார்..? காந்தியா?"

"தெரியாது! நீ சத்தியம் பண்ணு."

"சத்தியத்தால் அரிச்சந்திரன் போனது காட்டுக்கு. அம்மாடி! என்னை நீ எங்கே கொண்டுபோய் நிறுத்தப் போகிறாயோ!"

"டேய்! சத்தியம் பண்ணடா."

"இது மரியாதை. சரி விடு இந்தா."

தலையில் அடித்து சத்தியம் செய்தான்.

"இப்போ திருப்தியா?"

கொஞ்ச நேரம் மனோகரை முறைத்துவிட்டு, சட்டென்று நெருங்கி அவன் கன்னத்தில் உதட்டை ஒற்றியெடுத்தாள்.

"இது போதாது."

"போதும். மீதி நாளைக்கு."

"மார்பு துடிக்குதடி கண்ணம்மா!"

"ஏன் துடிக்குது கண்ணா?"

"வார்த்தை தவறிவிட்டாய்."

"என்ன வார்த்தை?"

"இன்று நான் எங்கு கூப்பிட்டாலும் வருவேன் என்றாய் நேற்று."

"ப்ளீஸ் இன்று வேண்டாம்."

"நோ. வருகிறாய். உனக்கு ஒரு அதிர்ச்சி. ஐ மீன் இன்ப அதிர்ச்சி காட்டப்போகிறேன்."

"அது என்ன இன்ப அதிர்ச்சி?"

"உண்டு. அங்கே வந்து கை காலை நல்ல பிள்ளையாக வைத்திருக்கவேண்டும் நீ."

"முயற்சிக்கலாம்."

"அப்படியானால் முடியாது நீ போ. நான் வீட்டுக்கு..."

"சரி வா. கை-கால் நிபந்தனைக்கு ஓ.கே"

□□□

மனோவின் ரூமில் இந்திரா அவசரப்பட்டாள்.

"நான் போகவேண்டும். பொய்சொல்லி ஏமாற்றிவிட்டாய்."

"என்ன பொய்?"

"ஏதோ இன்ப அதிர்ச்சி மண்ணாங்கட்டி என்றாய். இங்கே ஒன்றையும் காணோம்."

"இப்படி அவசரப்பட்டால் எப்படி?"

மனோகர் சென்று ரி.வி சுவிட்ச் அழுத்தினான். அருகே வி.சி.ஆரில் 'பிளே' என்ற எழுத்துக்களின் கீழ் இருந்த பட்டனை விரலால் அழுத்த, ரி.வியில் சின்னதாய் புள்ளிகள் தோன்றின. வீடியோ கசட் ஓடத் துவங்கியது.

மனோ வந்து இந்திராவின் அருகே நெருக்கமாய் சோபாவில் அமர்ந்து,

"வீடியோ கசட்டில் இருக்கிறது அந்த அதிர்ச்சி."

என்றான். பின் எழுந்து ரூம் கதவை தாழிட்டுவிட்டு வந்து அமர்ந்துகொண்டான்.

இந்திரா முதல் தடவையாக அவன் சமீபம் பயம் தருவதை உணர்ந்தாள்.

"அதை நிறுத்தியாச்சு... இனி.."

என்று குனிந்து அவள் தாடையில் கைவைத்து நிமிர்த்தினான்.

இந்திரா மெல்ல மெல்ல தன் உறுதியை இழந்துகொண்டிருந்தாள்.

□□□

"என்ன இந்திரா கேள்வியைக் கேட்டுவிட்டு வேறெங்கோ போய்விட்டாய்?"

என்றாள் காயத்திரி. இந்திரா தவிர்க்க நினைத்தாலும் குறுக்கிடும் நினைவுகளை ஒத்திவைத்துவிட்டு, காயத்திரியைப் பார்த்து,

"முயன்றாலும் முடியவில்லை காயத்திரி. நினைவுகள் பொல்லாதவை. நிழல்போல தொடர்ந்து வந்து துன்பம் தருபவை. நிழலையும் முற்றாக அழிக்க முடியாது. நினைவுகளையும் வேரோடு பிடுங்கி எறிய முடியாது."

"ஏன் முடியாது. நீ இன்னும் மனோகரை நினைக்கிறாயா? பெண்களை ஏமாற்றி அவன் செய்த தொழிலுக்கு அவனுக்கு கிடைத்த தண்டனை தேவைதான்."

"உங்கள் சட்டம்கூட கொடுக்க முடியாத தண்டனை!"

"யெஸ். நீலப்படம் தயாரிப்பவனுக்கு பரிசு அவனுக்கான மரணம் என்பது நமது சட்டத்தால் கொடுக்கக்கூடியதல்ல."


"இல்லை காயத்திரி. மனோகர் தனியாள் இல்லை. ஒரு கூட்டமே இதில் இருக்கிறது. மனோகர் வெறும் அம்பு. எய்தவர்கள் பலர். முக்கியமான ஆள் யார் தெரியுமா?

காயத்திரி இந்திராவை நெருங்கி, ஆர்வமாய் கேட்டாள்.


"சொல் இந்திரா, அது மட்டும் தெரிந்தால் பல முடிச்சுக்கள் அவிழ்ந்துவிடும்."

(தொடர்ந்து வரும்)


## பேனா நண்பர் அரங்கம்




பெயர்: பி. தியாகராசா
வயது: 34
முகவரி: கோட்லொஜ், கந்தப்பளை.
பொழுதுபோக்கு: தொலைக்காட்சி, பத்திரிகை, வானொலி.




பெயர்: எம். இனாம்
முகவரி: 86, நாப்பாவளை, அவிசாவளை.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், கிரிக்கெட் விளையாடுதல்.



பெயர்: வி. சுமித்திரா
வயது: 16
முகவரி: 9, மன்ராசி பசார், அக்கரப்பத்தனை.
பொழுதுபோக்கு: கதைப்புத்தகம், பத்திரிகை, பேனாநட்பு.



பெயர்: எஸ். நஸ்ரின் ஜகான்
வயது: 17
முகவரி: ரஹ்மானியா வீதி, கிண்ணியா-1
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல்.



பெயர்: என். ராமச்சந்திரன்
வயது: 25
முகவரி: B.M.B. P.O.BOX. No: 177, SAFAT-13002, KUWAIT.
பொ.போ: பத்திரிகை வாசித்தல்.



பெயர்: என். முபாரக்
வயது: 24
முகவரி: 13829, P.O.BOX. No. 8078, JEDDAH SACO. K.S.A.
பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகை, தொலைக்காட்சி.

பெயர்: ரவிசங்கர்
முகவரி: இல.71, கெய்சர்வீதி, புறக்கோட்டை, கொழும்பு-11.
பொ.போ: வழமையான பொழுதுபோக்குகள்.

பெயர்: என். முகமட்
வயது: 23
முகவரி: 122, காலி வீதி, பேருவளை.
பொழுதுபோக்கு: கதைப்புத்தகம் வாசித்தல், உதைபந்து விளையாடுதல்.

பெயர்: எஸ். ஜீவா
முகவரி: MAINTANANCE DEPT. CARPENTRY WORK SHOP, P.O.BOX. NO-1679, BURAYDAH. K.S.A.
பொ.போ: வழமையான பொழுதுபோக்குகள்.

பெயர்: எல். முகமட் ஜலீல்
வயது: 21
முகவரி: K.N.P.C., P.O.BOX-7250, FANAHEEL-64003, KUWAIT.
பொழுதுபோக்கு: ரீ.வி., பத்திரிகை.

பெயர்: எஸ். சரவணன்
முகவரி: 182, 6ம் கட்டை, உடுவரை, ஹாலி-எல.
பொ.போ: வழமையானவை.

பெயர்: எம். ஹலீம் சாதிக்
வயது: 14
முகவரி: அனுத்கம, கம்பிரிகஸ்வெவ, அனுராதபுரம்.
பொழுதுபோக்கு: பத்திரிகை, கதைப்புத்தகம் வானொலி.

# நெக்லஸ்

நேற்றுத்தான் வாங்கியது அந்த நெக்லஸ். அதற்கிடையில் தொலைத்துவிட்டாள். கணவன் வியர்வை சிந்தி உழைத்த பணத்தை குருவி குறுனல் சேகரிப்பதுபோலச் சேர்த்துச் சேர்த்து சீட்டுக்குக்கட்டி மாதாமாதம் என்ன அவஸ்த்தை....

ஹரீரா அனஸ்



**எ**ன்ன வாகன நெரிசல். இடித்துத் தள்ளும் ஆட்கள் ஒருவரை ஒருவர் முறைத்துப் பார்த்துக்கொண்டனர். கோட்டும் சூட்டும் அணிந்தவர்கள் சப்பாத்தில் சேறு படாத மாதிரி காலை எட்டி எட்டி வைத்து நடந்தனர். பெரிய வீட்டுப் பெண்கள் சேலையை கணுக்கால்களுக்கு மேலால் தூக்கிவிட்டுக் கொண்டு வலது கையால் ஒதுக்கிப் பிடித்தபடி அவதானமாக நடந்தனர். முஸ்லிம்களுக்குப் பிரச்சனை இல்லை. சாரத்தை கணுக்காலுக்கு மேலால் கட்ட வேண்டும் என்று இஸ்லாமியச் சட்டம் இருப்பதால் வசதியாகப் போய்விட்டது. சேற்றில் வழுக்கி தொப்பென்று ஒரு வயோதிபர் விழுந்தார். அவரைக் கூட்டிவந்த பெண் அவரைத் தூக்குவதற்கு மற்றவர்களின் உதவியை நாடினாள். "விலகு...விலகு.." முதுகில் பாரம் சுமந்தபடி தொங்கோட்டம் ஓடும் நாட்டாமைக்காரரின் சத்தம். என்ன அவசரம். என்ன அவஸ்தை. தேவதை தன்னையே நொந்து கொண்டாள். நேற்றுத்தான் வாங்கியது அந்த நெக்லஸ் . அதற்கிடையில் தொலைத்து விட்டாள். கணவன் வியர்வை சிந்தி உழைத்த பணத்தை குருவி குறுனல் சேகரிப்பதுபோலச் சேர்த்துச் சேர்த்து சீட்டுக்குக்கட்டி மாதாமாதம் என்ன அவஸ்தை! கணவனின் அன்பினால் தான் அவ்வளவு அவளால் சேகரிக்க முடிந்தது. சில கணவன்மார் என்றால் உழைப்பது அத்தனையும் செலவழிப்பது என்று கங்கணம் கட்டிக்கொண்டவர்கள் மாதிரி செலவழித்து விட்டுத்தான் மறுவேலை. அழாதகுறை. போவோர் வருவோரிடம் எப்பிடிக் கேட்பது. இந்த சேத்துப் பூமியில் விழுந்தது யார் எடுத்தார்களோ? யாராவது எடுத்துக்கொண்டு போய் குறைந்தது ஒரு இருபதாயிரம் ரூபாவிற்காகவாவது விற்று தங்கள் குடும்பத்தினருடன் கும்மாளமிடுவது போல எண்ணினாள்.

யாராவது எடுத்துக்கொண்டுபோய் தன் மனைவிக்குப் போட்டு அழகு பார்ப்பார்களோ? கள்ளர் காடர் கையில் அகப்பட்டால் இன்று அவர்களுக்குத் திருவிழாதான். குடிக்கவும்-சூதாடவும் குதிரை ரேஸ் போடவும், தூள் அடிக்கவும் என்று எத்தனை நாட்கள் கழியும். தேவதையின் முகம் சுருங்கிப் போனது. முகம் கறுத்துவிட்டது. கையில் இருக்கும் குழந்தை அழுவதுகூட அவளுக்கு நினைவிலில்லை. மனம் முழுக்க இனம் புரியாததோர் அடைப்பு. அவர் முகத்தில் எப்படி விழிப்பது. தன் கணவனை எண்ணிக் கொண்டாள்.

ஒரு தள்ளுவண்டிக்காரன் ஒருவன் அவளைக் கடந்து செல்லும்போது ஆசையாகப் பார்த்தான். அப்போதுதான் தனது முந்தானை விலகிக் கிடந்ததை அவளால் உணர முடிந்தது. அவசரமாக மாராப்பை இழுத்துச் சீர்படுத்திக்கொண்டாள்.

"என்னம்மா தேடுறீங்க..? குரல் கேட்டு நிமிர்ந்தாள் தேவதை.ஒரு முதியவர்.

"ஒண்ணுமில்லீங்க."

பதுட்டப்பட்டாள். சொல்லாமல் விடுவோமென்று விஷயத்தை மறைத்தாள்.

"இல்லைம்மா ஒண்டை முகமே காட்டிக் கொடுக்குதே புள்ளே, நீ பொய் சொல்லுறாய்." அவளுக்குத் தர்ம சங்கடமாய் இருந்தது. பெரியவர் கேட்பதற்கு என்ன பதில் சொல்வ தென்று தடுமாறினாள். மனம் தடுமாறியது.

"வந்து..வந்து...ஒரு நெக்லஸை... காணாமலாக்கிப்.."மேலே பேசமுடியாமல் விக்கினாள்.

"சரிம்மா இங்கேயே...வா... இரண்டு பேருமாத் தேடுவம்.." அந்த முதியவரும் அவளுக்கு உதவி செய்தார். களைத்துப் போனதுதான் கடன், சாமான் கிடைக்கவில்லை.

□□

**அ**ழுத கண்களும் சிவந்த மூக்குமாய் குழந்தையை இடுப்பில் ஏந்தியவளாய் களைத்துப்போய் வீடுவந்து சேர்ந்தாள் தேவதை. நேரம் மாலை ஏழு மணி. கணவன் வேலைக்குச் சென்று வந்த களைப்பினால் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தான். அவனை எப்படி எழுப்புவது? எப்படி விடயத்தைச் சொல்வது? உணர்வுகளில் திராணியற்று ஓசையில்லாமல் அடிமேல் அடி எடுத்துவைத்தாள். உண்டானோ, குடித்தானோ என்ற நினைவுகள் மறந்தும் எழவில்லை. பதட்டம், அந்த நெக்லஸ் எவ்வளவு குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அவன் புரண்டு படுத்தான். ஓசைப்படாமல் குசினிக்குப்போய் வெறும் பச்சைத் தண்ணீரை மட்டும் குடித்தாள். பிள்ளையும் தூங்கி விட்டான்.

"அம்மா...தாயே...பிச்சை போடுங்கம்மா!"

"அம்மா வீட்டிலை யாருமே இல்லீங்களா?"

பசிக்குது தாயே!"

இடம் வலம் வழங்காமல் பிச்சைக்காரனொருவன் இந்த நேரத்தில் வந்து நிற்பது அவளுக்கு எரிச்சலைக் கொடுத்தது. மெதுவாக வெளியில் வந்து "இங்கை வீட்டிலை ஒண்ணுமில்லை!" சொல்லியனுப்பினாள். கொஞ்சத்தூரம் போனவன் திடீரெனத் திரும்பிவந்தான்.

"அம்மா சொன்னாக் கோவிக்க மாட்டீங்கேள? எனக்குப் பசியாற ஏதாச்சும் கொடுங்கம்மா. ஒங்கடை சஞ்சலத்திற்கு விடை சொல்றன்."

"எவனடா இவன் இந்த நேரத்திலை வந்தவன் சஞ்சலம் என்கிறானே அவனுக்கு விளங்கிவிட்டதா?"

இந்தப் பரபரப்பில் பேச்சு வாக்கில் கணவன் விழித்துவிட்டதை அவதானித்தாள் தேவதை.

"சரி..சரி..இப்ப போ பிறகு பாப்பம்.."

பிச்சைக்காரன் விடுவதாய் இல்லை. இல்லைம்மா நான் உங்களுக்கு ஒரு நல்ல சேதிதான் சொல்லப் போறன்.

"ஒங்கடை ஒரு பெறுமதியான பொருள் காணாமல் போய்விட்டது."

தேவதைக்கு 'திக்' என்றது.

"அதாலை ஏற்பட்ட துக்கம் ஒங்கடை தொண்டையை அடைச்சுக்கிட்டிருக்கு."

"என்னா தேவதை என்னா..? அவர் என்னா சொல்றார்?"

"ஆமாங்க... அதுங்க.. அந்த.. நெக்...கி..லஸ்....

தொலைஞ்சு.."

விக்கி திக்கி நாவு சுருண்டு கொழுவுப்பட்டு கையும் களவுமாய் பிடிபட்ட ஒரு கள்வனைப்போல தேவதை கணவன் முன் நின்று கொண்டிருந்தாள்.

பிச்சைக்காரர் தொடர்ந்தார்.

"அம்மா...ஒங்கடை பொருள் திரும்பக் கிடைச்சுடுமுங்க.."

தேவதையின் அகமும் முகமும் மலர்ந்து போயிற்று.

ஆனால் எப்படிக் கிடைக்கும்? எங்கே கிடைக்கும்? மீண்டும் சபலபுத்தி ஆடத் தொடங்கியது. தேனீர் ஊற்றிக்கொடுக்க அதனைப் பருகிவிட்டு அவர்போய்விட்டார்.

அவர் மதிப்புடையவராய் தேவதைக்குத் தென்பட்டார். தேவதை பவ்வியமாக கணவனிடம் விடயத்தைச் சொன்னாள். அவன்

"வந்து..வந்து...ஒரு நெக்லஸை... காணாமலாக்கிப்.." மேலே பேச முடியாமல் விக்கினாள்.
"சரிம்மா இங்கேயே...வா... இரண்டு பேருமாத் தேடுவம்.." அந்த முதியவரும் அவளுக்கு உதவி செய்தார்.

கடவுளிடம் பாரம் சாட்டினான். எவ்வளவு கஷ்டப்பட்டுச் சேர்த்தது.. பெருமூச் செறிந்தான்.

□□

**பொ**ழுது புலர்ந்துவிட்டது.

மனக்கலக்கத்துடனேயே தேவதையும் கணவனும் இருந்தார்கள். படலையடியில் ஒரு மனிதர் தொப்பி போட்டு சாரமணிந்து,

"அட..நம்ம ராவுத்தர் நானா.." தேவதை கணவனிடம் கூறினாள்.

சிறுகதை

"வாங்க ராவுத்தர் நானா வாங்க.."

"ராமன்! என்னா இப்பிடி இரிக்கீங்க..? இந்த விடிய வெள்ளனத்தோடை வெளியிலை வந்து ஒக்காந்து இரிக்கீங்க..?"

விசாரித்தபடி வந்தார் ராவுத்தர் நானா.

"வாங்க இப்பிடி ஒக்காருங்க ராவுத்தர் நானா! உவள் தேவதை ஒரு காரியத்தைப் பண்ணிப்போட்டாள். அதுதான் சரியான கவலையாய் ஒக்காந்திருக்கம்."

"என்னா...என்னா விஷயத்தைச் சொல்லுங்களேன். ஒங்கடை முகத்தைப் பாத்தா ஏதோ பெரிய பொருளை இழந்துவிட்ட மாதிரி எல்லா இரிக்கி..."

"ராவுத்தர்நானா... ஆமா... நான்தான் உவர் கஷ்டப்பட்டு சாமான் தூக்கி மூட்டை தூக்கி வேலை செஞ்சு ஒழைச்ச பணத்தாலை வாங்கின நெக்லஸை தொலைச்சுப் போட்டேனுங்க.."

ராவுத்தர் நானாவுக்கு விடயம் ஊர்ஜிதமாய்விட்டது.. இன்னும் கொஞ்சம் விளக்கம் கேட்பதற்காய்...

"ஆமா..அது எப்பிடி டிசைன்ல இருக்கும்? எத்தினை பவுணு தேறும் புள்ளை?" கேட்டார்.

"அது ஐஞ்சு பவுண் ராவுத்தர் நானா சுளையா இருவத்தைஞ்சாயிரம் குடுத்து வாங்கினது" தேவதை சொன்னாள்.

ராவுத்தர் நானா சிரித்தபடி அவர்கட்டியிருந்த அந்த அகலமான இடுப்புப் பட்டியின் பையில் இருந்த ஸிப்பைத் திறந்து தேவதையின் நெக்லசை எடுத்தார்.

"ஆமா..அது ஏண்டை நெக்லஸ்தான்" தேவதை தன்னை மறந்து கூறினாள்.

"ராவுத்தர் நானா இது..ஒங்கடை கையிலை எப்பிடி..?" ராமன் கேட்டான்.

"அதுவந்து நான் நம்மட தள்ளுவண்டியைத் தள்ளிண்டு போய்க் கொண்டிருக்கையிலை மழைச் சேத்துக்குள்ளை இது கெடந்திச்சி..அப்பிடியே யாருக்கும் தெரியாம சேத்தோடை எடுத்து மடியிலை வைச்சுக் கிட்டேன்..அப்புறம் அந்தியாவுற டைமிலை கட்டிலை ஒக்காந்து பேசிண்டு இருக்கிற நேரத்திலை நம்ம புவாது சொன்னான். இப்பிடி ராமனின்டை பொஞ்சாதி நகையொண்டைத் தொலைச்சுப் போட்டுத் தேடினாள் ராவுத்தர் நானா எண்டு. அப்புறமாத்தான் யாருக்கும் சத்தம் காட்டாம எடுத்துக் கிட்டு வந்தேன்... ஆமா."

இந்த நாட்டாமையின் உள்ளத்தில் இவ்வளவு பெரிய மனசா? இந்தக் காலத்தில் இப்படியும் ஒரு மனிசனா? தேவதையும் ராமனும் ஆச்சரியப்பட்டுப் போனார்கள்.

"ஆமா....இதை எடுத்திட்டுப் போனா என்னா? வித்திட்டு ஒரு இருவதினாயிரம் தேறுமா? ஊராவூட்டுச் சொத்து எங்களுக்கு எடுக்க ஆகா-அது ஹராம் எண்டில்லையா எங்கட மார்க்கம் சொல்லியிருக்கு. ஆமாமவள்."

அந்த முஸ்லிமின் மார்க்கப்பற்றையும் நேர்மையையும் எண்ணியபோது தேவதையின் கண்கள் பனித்துவிட்டன. 'இப்பிடியான நல்ல மனிசர் இருக்கிறதாலை தாங்க உலகமே ஒருசீரா இயங்கிக்கொண்டிருக்கு. இல்லாட்டி எப்பவோ அழிஞ்சு போயிருக்குமுங்க..' வாய் நிறைய வெற்றிலை. தேனீரை மறுத்துவிட்டு எந்தப் பிரதி பலனுமில்லாமல் போய்க்கொண்டிருக்கும் ராவுத்தர் நானாவின் உயர்ந்த தன்மையை எண்ணியபடியே அவர் போவதையே வைத்தகண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்தனர் தேவதையும்-ராமனும்.

# தப்புக் கணக்கு

ஓட்டமாவடி அறபாத்

"**இ**ன்று உலகில் நடக்கும் யுத்தங்களுக்கு வேர்- காரணம் புரியாமைதான். ஒவ்வொரு மனிதனும், தேச, மொழி, இன, மத வெறிபிடித்து நரபலிக்கு தேர்ந்தெடுப்பதும் மனிதர்களைத்தான்." பஸ் வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. அதைவிடவும் அசுர வேகத்தில் அவனுக்கு கோபம் வந்தது. கழுத்து நரம்புகள் புடைத்தெழுந்தன. தோள்கள் தினவெடுத்தன. பற்களை நறநற வென கடித்துக்கொண்டான். முஷ்டியை மடக்கி கன்னத்தில் குத்த வேண்டும்போல் அவனுக்குள் ஆவேசம் பரவியது.

எரிகிற எரிப்பில் எண்ணெய் ஊற்றுவதைப் போல் அவனுக்கு பக்கத்திலிருந்தவன், சிகரெட் புகை ஊத, அது அவன் முகத்தில் படர்ந்து, இன்னும் எரிச்சலை கிளப்பியது. மூன்றுபேர் அமரக்கூடிய ஆசனத்தின் மையத்தில் அவன் அமர்ந்திருந்தான். அவனது வலது புறமும் இடப் புறமும் அந்நியர்கள். பரிச்சயமில்லாத முகங்கள். அவர்களின் பாஷையை வைத்தே அவன் எடை போட்டுக்கொண்டான், அவர்கள் எம்நாட்டின் விரோதிகள் என்று. அவனை நடுவில் வைத்தே சூழ இருந்தவர்கள் சுவாரஸ்யமாய் பேசிக்கொண்டிருந்தனர்.

"நிகங்கே கஹன்னெதுவ என்ட" சும்மா கத்தாம வாய மூடிக்கிட்டு வாங்கடா" அவர்களின் மொழியின் வாடை அவனுக்கு வயிற்றை குமட்டியது. அருவருப்பாய் முகம் சுழித்து சத்தமிட்டான். பஸ்ஸிலிருந்த, சக பிரயாணிகளின் கவனம் இவர்கள் பக்கம் சிதறியது. அவர்களுக்கு சங்கடமாகவும், கூச்சமாகவும் இருந்தது. "டேய் நாதன் இவன் சிங்களவனுக்கு நெருக்குதுபோல, அதான் தள்ளச் சொல்றான்" கொஞ்சம் ஜன்னலோரமா தள்ளிப் போ." அவன் இவர்களை துவேஷமாய் ஏசியதைக்கூட புரிந்துகொள்ள முடியாமல், நாதனும், சுரேஷும் இருக்கை தளர்த்தி இடம்விட்டு, விட்ட இடத்தில் இருந்து ஜோக்கை ஆரம்பித்தனர்.

அவனுக்கு இன்னும் வெறியேறியது.

'தமிழ் நாய்கள் என்ன கிண்டலா பண்ணுறானுகள்,' மனசுக்குள் மெல்லியதான கொலை வெறி நர்த்தனமாடியது. தன் 'ரவலிங்பேக்' திறந்து சிகரெட் எடுத்து அதன் தலைக்கு தீ வைத்தான். புகை வட்டமடித்து அவன் மூக்கைத் தொட்டு கரைந்து போனது. "சுரேஷ்..." நாதன்தான் குரல் கொடுத்தான். "என்ன மச்சான்.." "இல்லடா நம்மட நாட்டுல மொழிப் பிரச்சின இல்லாட்டி- கொலைகள்ற வீதம் குறைஞ்சிருக்கும் இல்லயா?"

"ஓமடா, அவங்கள் என்ன பேசுறாங்கண்டு எம்மால புரிஞ்சிக்க முடியல்ல. எங்கட தமிழ் மொழிய அவங்களால புரிஞ்சிக்க முடியல்ல. அதனால ஒருத்தர ஒருத்தர் விரோதியா பார்க்கிறம். அந்த மொழி தெரியலியே என்ற அறியாமையால அதன வெறுக்கிறம். அவங்கட பழக்க வழக்கம், கலாச்சார நிகழ்வுகளைக்கூட எம்மால புரிந்துகொள்ள முடியல்ல." சுரேஷ் அடிமனதில் பதுங்கிக்கிடந்த, உணர்வுகளை அள்ளிவைத்தான்.

"அதுமட்டுமில்லடா இன்றைக்கு எங்கட கஷ்ட நஷ்டங்கள்கூட, அவங்களிட்ட சொல்ல முடியாம இந்த மொழிதானே தடையா இருக்கு, அவங்களிலயும், மனிதாபிமான முள்ளவங்க இருக்காங்க. எங்கட பிரச்சினைகள, துயரங்கள அறிந்து அனுசரித்து போறவங்க இருப்பாங்க. இல்லையா? நாதன் பேசிக்கொண்டிக்கும் போதே பகல் உணவுக்கு பஸ் நிற்பாட்டப்பட்டது.

அவனையும் சாப்பிடக்கூப்பிடலாமென்றால், அங்கேயும் மொழி வேலி போட்டது. அவனுக்கு, மனசின் மூளையெங்கும் வெப்பம் பரவியது. 'இவனுகள் என்னமோ திட்டம் போடுறானுகள்.' அவன் உள் மனம் கூவியது. ஹோட்டலிலும் அவன் அவர்களை கவனித்து வந்தான்.

நாதனும், சுரேஷும், பார்சல் பிரித்து, சாப்பிட்டுவிட்டு கை கழுவும்போது, "நுவர பஸ்யண்ட் யனவா விகஹட நகின்ன" கண்டி பஸ் போகப் போகுது, கெதியா ஏறுங்க" குரல் கேட்டது. தன்னுடன் கூட வந்தவர்கள் விரைவதை பார்த்து அவர்களும் விரைந்து முன்னர்போல் இருக்கையில் அமர்ந்துகொண்டனர். அவன் சிங்கள பத்திரிகையொன்றில் தன்னை தொலைத்துக் கொண்டிருந்தான். "சுரேஷ் வகுப்புல சிங்கள பாடத்துக்கு 'கட்' அடிச்சது இப்பதான்டா விளங்குது." நாதன் மனம் வெதும்பினான். அவர்கள் இருவரும் அவனுடன் ஒரு வார்த்தைதானும் பேசவில்லை என்பதை நினைக்கும்போது, இருவருக்கும் சங்கடமாகவும், வெட்கமாகவும் இருந்தது. அவன் என்ன நினைப்பான். இங்கிதமில்லாமல், இருவரும் சிரித்து பேசிக்கொண்டு வருகிறோமே குறைந்த பட்சம் ஊர் பெயரையாவது விசாரித்திருக்கவேண்டாமா?

இருவரின் இதயத்திற்குள்ளும் இரக்கம் சுரந்தது. பாவம் அவனுக்கும் 'போர'டிக்கும்.



என்ன செய்ய நாம் பேசி அவன் புரிந்து கொள்ளவா போகிறான்? அவன் பேசி நாம் புரிந்துகொள்ளவா போகிறோம்? நாதன் மலைநாடு நெருங்க, நெருங்க அதன் அழகில் மயங்கிப் போனான். ஜன்னலின் வழியே விழிகளை பறக்கவிட்டு, பசுமையையும், குளிர்மையையும் ஒன்றாக அனுபவித்தான். சில்லென்ற காற்று, இதமாக வதனம் தடவிச் செல்ல, ஊரிலுள்ள மனைவியின் முந்தானைக் கனவு 'பிலிம்' விரித்தது.

திடீரென பஸ் ஒரு வளைவில் திரும்ப, அவன் நாதனின்மேல் முட்டுண்டான். முட்டிய வேகத்தில் வாய் நிறைய வாந்தியெடுத்தான். நாதனுக்கு அவன் மேல் அனுதாபம் பிறந்தது. தனது ஜன்னலோர இருக்கையை அவனுக்கு ஒதுக்கிவிட்டு சுரேஷின் அருகில் அமர்ந்து கொண்டான். அவன் வாந்தியெடுக்க உதவியாய் இலேசாக தலையை வருடி, நெஞ்சை தடவிவிட்டான். பின், அவன் கைக்குட்டை எடுத்து, 'ஷேர்ட்'டில் படிந்த அசுத்தங்களை துடைத்து விட்டான். அவனுக்கு நெஞ்சு நெகிழ்ந்தது. இவ்வளவு தூரமும் மனசுக்குள் கருவறுத்த இருவரையும் பாசத்துடன் பார்த்தான். அவனுக்கு அவமானமாய் இருந்தது. நாதனின் கரம் பற்றி "தேங்க்ஸ்" என்றான். குரல் கம்மியிருந்தது. நாதனும், கவனித்தான் அவன் விழிகள் நிரம்பி வழிந்தன. "மாத்தள கட்டிய பஹிண்ட" என்ற கண்டக்டரின் குரல் கேட்டு சுரேஷும் நாதனும் தம் இருக்கை விட்டு எழும்ப, ஜன்னலோரத்தில் அமர்ந் திருந்த சோமபால நன்றியுடன் தலையசைத் தான். அவர்கள் பேச முடியாத வரலாற்று நிகழ்வுகளை விழிகள் பேசிக்கொண்டன. சோமபால தனக்குள் முணுமுணுத்தான் "பாவம் தமிழர்கள்" பின், அவர்கள் விட்டுச் சென்ற கைக்குட்டை அவன் கண்ணில்பட்டது. அவனது வாந்தியை அவர்கள் துடைத்துவிட்டு, மறந்துபோய் விட்டார்கள். அக்கைக் குட்டையை வெறித்துப் பார்த்தான். சோமபால இப்போது தனிமையை உணர்ந்தான். அவர்கள் இருவரும் அருகில் அமர்ந்திருந் தால் மனம் இறக்கை முளைத்து பறக்கும் என்ற மெல்லிய உணர்வு தேகமெங்கும் சில்லிட்டது. கைக்குட்டையை மெல்ல எடுத்தான். அதன் மடிப்பு குலையாமல், ஒரு மலரை அணைப்பதாய் நெஞ்சுடன் அணைத்துக்கொண்டான். பஸ் வேகம் குறைக்காமல் ஓடிக்கொண்டிருந்தது. ■

# உறவுக்கு என்றும் இரண்டு பக்கம்

சிலாபம் பொ.புஷ்பராஜு

சிரிசேன காக்காப்பள்ளி சந்தைக்குப் போய்விட்டு வீட்டுக்கு வந்தவன், சந்தையில் வாங்கிவந்த உணவுப் பொருட்களை மனைவி எலிஸ்நோனாவிடம் கொடுத்துவிட்டு, வீட்டின் பின்புறம் மாமரத்தின் நிழலில் இருந்த சாய்வு நாற்காலியில் சாய்ந்தார்.

**போன மாதம் முன்னேஸ்வரம் திருவிழா நடந்தது. எல்லோரும் போனீர்களா? நாம் வருடா வருடம் பத்தினி அம்மாளுக்கு பூசைதட்டு தருவோம். இம்முறையும் தவறாது பூசைத்தட்டு கொடுத்திருப்பீர்கள் என எண்ணுகிறேன்.**

சாய்வு நாற்காலியில் இருந்தவாறே, மகள் லீலா கொண்டுவந்த தேனீரை குடித்துவிட்டு யோசித்துக்கொண்டிருந்தார்.

மகன் மகிந்தவிடமிருந்து ஒரு மாதமாக கடிதம் வரவில்லை. யுத்த முனையில், அதுவும் தாண்டிக்குளத்தில் இருக்கிறான். என்ன நடந்ததோ, ஏது நடந்ததோ தெரியவில்லை..? வாரா, வாரம் கடிதம் போடும் மகிந்த ஒரு மாதமாக கடிதமே போடவில்லை. ஏதும்..நடந்து...இருக்குமோ....?

'சீச்சீ..... அப்படியிருக்காது. மகிந்த நல்லவன். கடவுள் நம்பிக்கையுள்ளவன். ஒரு ஈ, எறும்புக்குகூட தவறு செய்ய எண்ணாதவன். ஆபத்து எதுவுமே நடக்காது. முன்னேஸ்வரம் பத்தினி அம்மா அவனுக்கு துணை நிற்பாள்.' சிரிசேன தனது மனதிற்குள்ளேயே பேசிக்கொண்டவாறு மகனின் சிந்தனையில் இருந்தான்.

சிரிசேன முன்பு ஒரு சில்லறைக்கடை முதலாளி. கடைவியாபாரம் நஷ்டம் அடைந்ததால் தனது சொந்த வயலிலேயே விவசாயம் பண்ணுகிறார். முன்னேஸ்வரம் ஆலயத்திற்கு தெற்கு வாசல் திசையில் காக்காப்பள்ளி கிராமத்தில் வாழ்கிறார். இவருக்கு ஒரு பையனும் பொண்ணும் உள்ளனர். இவரின் பையன்தான் மகிந்த.

சைக்கிள் மணி அடிக்கும் சத்தம் கேட்டு லீலா ஓடினாள். ஆம்! தபால்காரன்தான்.

இன்று மகிந்தவிடமிருந்து கடிதம் ஒன்று வந்திருந்தது.

லீலா கடிதத்தைப் பெற்றுக்கொண்டு தகப்பனிடம் ஓடினாள் கடிதம் வந்த செய்தி கேட்டு சிரிசேனவின் முகம் சந்தோசத்தில் துள்ளியது. லீலாவையே கடிதத்தை படிக்க சொன்னார்.

"அம்மா அப்பா லீலா எல்லோருக்கும் எழுதுவது, நான் நல்ல சுகமாக உள்ளேன். (சிரிசேன ஒரு பெருமூச்சை விட்டார்) நீங்கள் எல்லோரும் எப்படி சுகம்?

போன மாதம் முன்னேஸ்வரம் திருவிழா நடந்தது. எல்லோரும் போனீர்களா? நாம் வருடா வருடம் பத்தினி–அம்மாளுக்கு பூசை தட்டு தருவோம். இம்முறையும் தவறாது பூசை தட்டு கொடுத்திருப்பீர்கள் என எண்ணுகிறேன்.

இப்போது இங்கு ஒரு பிரச்சனையும் இல்லை. சமாதானம் கூடிய விரைவில் தோன்றுமாப்போல் பச்சை வெளிச்சம் தெரிகிறது. இப்போது யாழ்ப்பாணத்திற்கு ஒரு சில பொருட்களைத் தவிர மற்ற எல்லாப் பொருட்களையும் கொண்டு போகலாம்.

கடந்த புதன்கிழமை– முன்பு காக்காப் பள்ளியில் எமது கடைக்கு அடுத்து கடை வைத்திருந்த யாப்பனே சுருட்டு கடை கோண்டாவில் சுந்தரம் அங்கிள் முதலாளி தாண்டிக்குளம் தடை முகாமில் நான் பரிசோதனை செய்யும்போது என்னை எப்படியோ அடையாளம் கண்டுகொண்டார்.

"மகனே என்னடா நீ எப்ப வந்தாய்?" என சொல்லிக்கொண்டே என்னை முத்தமிட்டவாறு கண்ணீர் விட்டார். கட்டி அணைத்தார்.



நானும் கடமையிலிருப்பதை மறந்து அழுதுவிட்டேன்.

சுந்தரம் அங்கிள் காக்காப்பள்ளியிலிருந்து 1983 கலவரம் நேரம் யாழ்ப்பாணம் போகும்போது எவ்வளவு அழகாகவிருந்தார்.

வைரக்கடுக்கன், நீண்ட ஜிப்பா, தோளோடு ஒரு நான்கு முழ சால்வை. எட்டு முழ வேட்டி. நெற்றியிலே விபூதி பட்டை. சந்தனப் பொட்டு. காதுக்கிடையில் மல்லிகைப்பூ மொட்டு. இப்படி என்னால் அவரின் பழைய உருவத்தை தொடர்ந்து மனதில் நினைக்க முடியவில்லை.

இப்போது அவரின் உருவம் கண்ணாடி துண்டு, துண்டாக உடைந்து சிதறியது போன்று சிதறிப்போயிருந்தது.

அவரின் கண்கள் இரண்டும் உள்ளே செல்ல காதில் வைரக் கடுக்கண் இல்லை. ஜிப்பா, எட்டு முழவேட்டி, தோளிலே சால்வை ஒன்றுமே இல்லை எல்லாமே தலை கீழாக இருந்தது.

முடி சிதறி கிடந்தது. எமது ஊரில் சுத்தமான யாழ்ப்பாண நல்லெண்ணெய் விற்ற அவர் தனது தலை முடிக்கு தேங்காய் எண்ணெய்கூட தேய்க்காது, மழை நீரைக் காணாத வயலைப்போல முடி காய்ந்து கரடுமுரடாக இருந்தது. முகம் சோப்பையே காணவில்லை போல் தெரிந்தது. முகம் சவரம் செய்யாது ஆங்காங்கே வெள்ளை முடியுடன்கூடிய தாடி. என்னால் தொடர்ந்து அவரைப் பார்க்க முடியவில்லை.

வாய்விட்டே அழுதுவிட்டேன். 'அங்கிள் அந்த கதிரையில் உட்காருங்கள். இன்னும் பதினைந்து நிமிடமே எனது டியூட்டி, ஓடிவந்து விடுகிறேன்' என்றேன். அவரும் சிறிது நேரம் எனக்காக பொறுமையுடனிருந்தார்.

எனது டியூட்டி முடிந்து முதலில் எனது அறைக்கு அங்கிளை அழைத்துச் சென்றேன். தாகமாக இருப்பதாகக் கூறினார். நல்ல கூள் டிரிங் ஒன்று கொடுத்தேன்.

"அப்பா எப்படி மகன் இருக்கினமே"

"ஆமாம் அங்கிள் போனவாரம் வீட்டிற்குப் போயிருந்தேன். ராசா அண்ணன் சுகமாயிருக்கின்றனரா? அன்ரி, கிளி அக்கா எப்படி அங்கிள்?"

"மகன் மகிந்த, கிளி அக்கா அன்ரி, உன்னுடைய கூட்டாளி ராசா எல்லோரும் நல்ல சுகமாய் இருக்கினம். இருந்தும் மகனே, எங்கட் அம்மன் கோவிலடி கோண்டாவிலில் இருந்த வீடு ஷெல் விழுந்து தரை மட்டம் ஆகிவிட்டது. நாங்கள் கொக்குவிலில் எனது மச்சான் வீட்டில் இருக்கிறோம். ராசாவுக்கும் கொஞ்சம் காது கேட்காது மகனே. பொம்பர் விமானங்களுக்கும், ஷெல் அடிக்கும் பயந்து பாதுகாப்பு அரணில் பல நாட்கள் பூமிக்கு அடியில் இருந்தமையினால காதுகேட்காது போய் விட்டது. எனக்கும் அடிக்கடி நெஞ்சுவலியும் வருகிறது" என்றார்.

எனக்கு அங்கிளின் கதையை கேட்டதும், இந்த வாழ்வே வெறுத்துவிட்டது. இரும்பு மனிதரைபோல வாழ்ந்த அங்கிள் லெவரியா போல துவண்டு இருந்ததைப் பார்த்தபோது 'ஆண்டவனே ஏன் எங்களைப் படைத்தாய்?' ஆண்டவனை எனது மனதிற்குள்ளேயே திட்டினேன்.

'ஏன் ஆண்டவனே மதம், மொழி, என எங்களைப் பிரித்து இப்படி வேடிக்கை பார்க்கிறாய்? உமக்கு இதில் என்ன இலாபம். அல்லது எதைத்தான் கண்டாய்? இந்த யுத்தத்தினால் அர்த்தமில்லாது எத்தனை தமிழ், சிங்கள இளைஞர்கள் இறந்து விட்டனர்? எத்தனை பெண்கள் வாழாவெட்டியாக வாழ்கின்றனர். கை, கால் இல்லாது கண் இல்லாத குருடர்கள், முடவர்கள், அனாதைகள், ஐயோ ஆண்டவனே இந்தப்

## சிறுகதை

பாழாம் போன யுத்தத்தில் நீ இளைத்தாள் கண்டாய். உனக்கு பேச முடியாது ஏனென்றால் நீ இப்போது பொம்மையாகிவிட்டாய்." எனக்கு அப்போது அவ்வளவு கோபம் வந்தது.

எனது இளம் வயதில் அங்கிள் எத்தனை நாட்கள் காக்காபள்ளி நீரோடையில் என்னை குளிப்பாட்டி விடுவார். நானும், அங்கிளின் குடும்பமும் வெசாக் பந்தல் பார்க்க கொழும்பு போனபோது, அவரின் தோளில் என்னை சுமந்துகொண்டு கொழும்பில் சுற்றிய நினைவுகள் மனதில் மலர்ந்தபோது ஆண்டவன்மீது மீண்டும் கோபத்தை உண்டாக்கியது.

வவுனியா போக வந்தவர், என்னைக் கண்ட மகிழ்ச்சியில், மீண்டும் கொக்குவிருந்து போய்விட்டார். என்னிடம் இருந்த சேர்ட், சோப், பிஸ்கட், சாரம் துந்து, பற்பசை எல்லாவற்றையும் ராசா அண்ணனுக்கும், கிளி அக்காவுக்கும் கொடுக்கச் சொல்லி அனுப்பிவைத்தேன்.

மூன்று நாட்களுக்குப் பின் மீண்டும் அன்ரியும், அங்கிளும் என்னைப் பார்க்க வந்தார்கள். எனக்கு அன்று விடுமுறை நாள்.

என்னை கண்டதும் அன்ரி அழுது விட்டாள்.

"அடேய் மகிந்த எப்படியடா இருக்கிறாய்?"

இந்த எமது பழைய உறவு முறையை சக இராணுவ வீரர்களும் ஏதோ புதுமையைப் பார்ப்பதுபோல் பார்த்தனர். அன்ரி என்னை ஒரு இராணுவ வீரனாக பார்க்கவில்லை.

காக்காப்பள்ளி சிரிசேனவின் மகனாகத்தான் பார்த்தாள். எனக்கு இருபது தோசையும், சாம்பார், சட்டினி, முப்பதுக்கும் மேற்பட்ட பசித்தம்பலகாரம், கொண்டு வந்திருந்தார்கள்.

அன்று நாங்கள் மூவரும் எங்களது காம்பில் உள்ள விருந்தினர் அறையில் வைத்து சாப்பிட்டோம்.

அன்ரி எனக்கு தோசையை ஊட்டி விட்டார். என்னால் அன்று இரவு தூங்கமுடியவில்லை.

ஏனப்பா இப்படி வாழ்ந்த நாம் எதற்காக யுத்தம் செய்யவேண்டும்? ஆண்டவன் ஏன் மௌனம் சாதிக்கிறான்? இது யாவும் நீதிதானா இல்லை ஆண்டவனுக்கு இரக்கமில்லையா? அல்லது ஆண்டவன் மீண்டும் பிறக்கத்தான் வேண்டுமா— சமாதானம் பிறக்க?

நான் இன்னும் ஒரு மாதத்தில் வீட்டுக்கு வருவேன். வரும்போது அங்கிள் குடும்பத்தினரும் என்னுடன் வருவார்கள். அதற்கான ஏற்பாடுகளை செய்து வருகிறேன்.

அங்கிள் அன்ரி, கிளி அக்கா, ராசா அண்ணன் எல்லோரும் சிறிது காலம் எமது ஊரில் இருக்கட்டும். அவர்கள் இவ்வளவு காலமும் பட்ட கஷ்டம் போதும்.

அங்கிளுக்கும் கண்பார்வையும் குறைவு. நெஞ்சுவலியும் உள்ளது. ராசா அண்ணனுக்கும் காது வருத்தம்.

நான் இவர்களுடன் வந்ததும் கொழும்புக்கு கூட்டிப்போய் விசேட வைத்தியரிடம் காண்பித்து, சிகிச்சை பெறவேண்டும். அதற்கான ஏற்பாடுகளை செய்துவைக்கவும்.

எமது விகாரை ஆனந்த தேரோவிடமும், வெத மாத்யா பண்டப்புகாமியிடமும் அங்கிள் அவ்விடம் வரும் விடயத்தை சொல்லுங்கள்.

எல்லோருக்கும் மும்மணிகளின் ஆசிகள்."

லீலா கடிதத்தை வாசித்து முடித்ததும் ஊரே அதிரும்படி "எங்கள் கிளி அக்கா வரப்போகிறாள்" என சத்தமிட்டாள்.

சிரிசேனவும், எலிஸ்நோனாவும் லீலாவின் மகிழ்ச்சியையும், மகிந்தவின் மனதையும், கூட்டி, கழித்து, பெருக்கி, பிரித்து (+–×=) பார்த்தனர். விடை "உறவுக்கு என்றும் இரண்டுப்பக்கம்" என இருந்தது.

மன நிறைவால் சிரிசேனயும் மாமர நிழலிலே பகல் சாப்பாட்டையும் மறந்து உறக்கத்தில் மூழ்கிவிட்டார்.

மாமரத்தில் குடிகொண்டிருந்த வெண்புறாக்கள் ஊர் முழுவதும் அன்று பறந்து திரிந்தது.

# "நீயா?"

நிஸ்வா ஸலாம்-தர்கா நகர்

"இங்க பாருங்க உங்களோடு விளையாட எனக்கிப்போ டைம் இல்ல மொதல்ல நீங்க யாருன்னு சொல்லுங்க. இல்லேன்னா பேசாம இடத்த காலி பண்ணுங்க" சுபா



எளிமையான அலங்காரத்தில் தன்னைத் தயார்படுத்திக்கொண்ட ப்ரியா, வெளியே எட்டிப்பார்த்தாள். 'ம்..மாமா இன்னும் வரலியே' என மனதிற்குள் நினைத்தவளாக பக்கத்திலிருந்த மேசையில் விரித்துவைத்திருந்த "தினமுர"சை எடுத்துப் புரட்டினாள். தனக்கு மிகவும் பிடித்த பகுதியான ரசிகனின் இலக்கிய நயத்தில் மூழ்கிப் போனவள் திடீரென ஏதோ நினைத்த வளாக தனது கைக்கடிகாரத்தில் பார்வையைப் பதித்தாள். 'ஓ...மணி ஏழரையாச்சே.. இப்பவே (தர்கா)டவுனிலிருந்து பஸ் புடிச்சிப் போனாத்தான் அளுத்கம போய் 7.55 ரெயினைப் பிடிச்சி ஒன்பதரைக்கெல்லாம் கொழும்புக்குப் போயிடலாம். மீண்டும் அவளது பார்வைகள் முற்றத்தை முத்தமிட, மாமா அவசரமாக வந்துகொண்டிருப்பது தெரிந்தது. "என்ன ப்ரியா ரெடியா?" கேட்டவாறே அவர் கதிரையில் அமர "என்ன மாமா நீங்க ஏற்கனவே லேட்! நீங்க என்னடான்னா. கைகால நீட்டி உட்கார்ந்துட்டீங்களே" "ஓ.கே. கிளம்பு" தாயிடம் விடை பெற்றுக்கொண்ட ப்ரியா, மாமாவோடு புறப்பட்டாள்.

"ப்ரியாம்மா நீ இன்னிக்கு அங்கு வாறது உன் ஃப்ரண்டுக்குத் தெரியுமா?" "இல்லமாமா நான் அங்கு வாறது அவளுக்குத் தெரியவே தெரியாது திடீர்னு சொல்லாம கொள்ளாம போனாத்தான் அவள 'ஷொக்' பண்ணலாம். மாமா அவ இதுவரைக்கும் என்ன கண்டதேயில்ல. கொஞ்சம் பொறுத்துத் தான் பாருங்களேன். அங்க போனா நடக்கப் போறத" சிறுபிள்ளையின் துடுக்கோடு பேசிக்கொண்டுவந்த ப்ரியாவை மாமா வினோதமாகப் பார்த்தார்.

அதிக சிரமத்தின்பின் வீட்டைக் கண்டு பிடித்தார்கள். வீட்டின் விசாலம்கண்டு ஒரு கணம் விக்கித்து நின்ற ப்ரியா, விலாசம் சரிதானா என்று பார்த்து ஊர்ஜிதப்படுத்திக் கொண்டாள். "அடேங் கப்பா! சுபாவின் வீடு இம்முட்டுப் பெரிசா?" அவள் ரொம்பப் பணக்காரியாயிருக்காளே இல்லையா மாமா?" அவள் கண்களையே அவளால் நம்பமுடியவில்லை. வீடு பூட்டியிருப்பது அவர்களால் பார்க்க முடிந்தது. கேட்டைத் திறந்துகொண்டு உள்ளே போனவர்களை "ப்ரியா...ப்ரியா.. ஓ..ப்ரியா" பாடல்தான் முதலில் வரவேற்றது. "மாமா எல்லோரும் படம் பார்க்கிறாங்க போல." நேரே போய் அழைப்புமணிக்கு உயிர் கொடுத்த ப்ரியா கதவைத் திறந்த உருவத்தைக் கண்டு மனதில் குதூகலம் கோடி கொண்டாள்.

அந்த உருவம் நிச்சயமாக சுபாவினுடையதுதான். ப்ரியா நினத்துக்கொண்டாள். "போட்டோவில பார்த்த அதே முகம். ஆனா நேரில அதை விட சூப்பர். அவளை வர்ணிக்க வார்த்தைகள் தேடினாள்.

"யார் நீங்கள்?" சுபாவின் மென்பட்டு இதழ்கள் திறந்து சொற்கள் வெளிவர,

'நல்ல வேளை நான் போட்டோ அனுப்பல.இப்போ கொஞ்சம் நேரம் உன் பொறுமையை சோதிக்கவேண்டும்' ப்ரியாவின் மனதில் குறும்பான எண்ணங்கள் ஓட,

"ஆமா..நாங்க யாருன்னு நீங்களே சொல்லுங்க பார்ப்போம்" சிரிப்பை துணைக் கழைத்தவாறு ப்ரியா கூற, அவள் பேசுவதை இரசிக்க சுபாவுக்குப் பொறுமை இருந்தாத் தானே?


"இங்க பாருங்க உங்களோடு விளையாட எனக்கிப்போ 'டைம்' இல்ல. மொதல்ல நீங்க யாருன்னு சொல்லுங்க. இல்லேன்னா பேசாம இடத்த காலி பண்ணுங்க" சுபாவின் ஆவேசப் பேச்சு ப்ரியாவின் இதயத்தில் ஆயிரம் வேல்கள் பாய்ச்சின.

'சுபாவா இப்படி பேசுவது? அவளது மடல்களில் ஒவ்வொரு எழுத்தும் மெய்யன்பால் இதயத்தில் எழும்பும் உணர்ச்சியின் பிரதிபலிப்புக்களாச்சே, அவளா இப்படி?'

ப்ரியாவால் நினைத்துப் பார்க்கவே கஷ்டமாக இருந்தது. மறுகணம் தன்னை ஆசுவாசப்படுத்திக்கொண்டவள் "ப்ளீஸ் உங்க வீட்டு நம்பர் எத்தனையென்று சொல்ல முடியுமா?" தெரிந்ததை திரும்ப தெரியாதவள்போல் கேட்க, "ஓ..இதக் கேட்கத்தானா இவ்வளவு நேரம்? ஒழுங்கா படம்கூடப் பார்க்க முடியல. ச்சே" வெறுப்பை வார்த்தைகளில் வைத்து வெளியிட்டாள் சுபா. ப்ரியா உள்ளுக்குள் உடைந்து போனாள்.

"...மன்னிச்சுக்க வேண்டும்; உங்கள தொந்தரவு பண்ணியதற்கு; நாங்க தேடி வந்தது உங்க வீட்டையல்ல. மீ...மீண்டும் ஸாரி உங்க டைம் வே..வேஸ்ட் பண்ணியதற்கு" ப்ரியாவுக்கு துக்கம் தொண்டையை அடைத்தது. "வாங்க மாமா போகலாம்" மறு பேச்சின்றி மாமாவின் கரம் பிடித்திழுத்தவாறே கேட்டின் வெளியே வந்துவிட்டாள். படார் என சுபா கதவை மூடியவேகம் ப்ரியாவின் கன்னத்தில் அறைந்ததைவிட வலித்தது.

"என்னம்மா எனக்கு ஒண்ணுமே புரியலியே?" மாமா எதுவும் புரியாமல் விழிக்க, "மாமா நான் இன்னாருதான்னு அவளுக்கு அறிமுகப்படுத்தியிருந்தா பழகின தோஷத்துக்காகவாவது என்ன வரவேற்று பேசியிருப்பாள். ஆனா..ஆனா..மனுசன மதிக்கத் தெரியாத அவளோட எல்லாம் இனி எதுக்குமாமா 'ஃப்ரண்ட்ஷிப்' வேண்டியிருக்கு? தூய நட்புக்குத் தகுதியில்லாதவள். வேறென்ன மாமா பணத்திமிர் அவளுக்கு?" கண்களிலிருந்து கண்ணீர் எட்டிப்பார்க்க ப்ரியாவின் முகம் சிவந்திருந்ததைக் கண்ட மாமா அவளது தலையை மென்மையாக வருடிக்கொடுக்க ஹோ..வென அழுதவாறு அவரது மார்பில் சாய்ந்துகொண்டாள் ப்ரியா. அவளது அழுகை அவமானத்தால் ஏற்பட்ட ஆத்திரத்தின் அடையாளமோ? இல்லை தூய்மையில்லா நட்பைத் துடைத்தெறிய இறைவன் அளித்த சந்தர்ப்பத்தை எண்ணி நிம்மதியில் பிறந்த ஆனந்தத்தின் அடையாளமோ?




## வாசகர் கவனிக்க.....

முரசுடனான சகல கடிதத் தொடர்புகளுக்கும்,

**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல.1772**
**கொழும்பு -6.**

என்ற முகவரியை குறிப்பிடவும்.

பதிவுத் தபால்கள் எக்காரணம் கொண்டும் ஏற்கப்படமாட்டா.
அனுப்பப்படும் ஆக்கங்கள் எவையும் திருப்பியனுப்பப்படமாட்டா.
ஆக்கங்கள் அனுப்புவோர் தமது சொந்த பெயர், முகவரி ஆகியவற்றை தெளிவாகக் குறிப்பிடவேண்டும். புனை பெயர்களில் ஆக்கங்கள் வெளியிடுவதாக இருந்தாலும் சொந்தப் பெயர் விபரங்கள் தெரிவிக்கப்படவேண்டும்.

# இலக்கிய நயம்

வானத்திலே ஒரு பொட்டு. அதற்கு நிலாவென்று பெயர். தரையிலே ஒரு சிட்டு. அவளுக்கு நீலா என்று பெயர்.

நிலா சிந்தும் ஒளியும் வெள்ளை.

நீலா சிந்தும் நகையும் அப்படித் தான் வெள்ளை.

நிலா வானத்திற்கு அழகு. நீலா வாலிபர் கண்களுக்கு அழகு.

நிலாவை இரசித்துக்கொண்டே இருக்கலாம். சலிக்காது.

நீலாவையும் அப்படித்தான். பார்த்துக்கொண்டே இருக்கலாம். கண்களுக்கு களைப்பே வராது.

இப்போது நீலா இரசிக்கப்பட்டுக் கொண்டிருந்தாள்.

இரசித்துக்கொண்டிருந்தவன் அன்ரனி.

கடலின் மடியில் கட்டுமரத்தில் நின்று அன்ரனி வலை வீசினால் சிக்காத மீனும் சிக்கும்.

கைராசிக்காரன் என்பார்கள் சக மீனவர்கள் அவனை.

இப்போது கன்னிராசிக்காரன் என்று கிண்டல் செய்கிறார்கள் காளை அன்ரனியை: அவன் கூடத்திரியும் தோழர்கள்.

கன்னிராசிக்காரன் என்பதற்கு காரணம் அவன் காதல் வலையில் சிக்கிய பெண்மீன் நீலா.

அந்த நீலாவைத்தான் அன்ரனி இப்போது' இரசித்துக்கொண்டிருந்தான்.

"பார்த்தது போதும். தினமும்தான் பார்க்கிறீர்கள். புத்தாய் பார்ப்பது போல் புதிராய் பார்ப்பது என்ன மச்சான்?"

பனியில் நனைந்த பூவைப்போல, ஈரம் தெரிந்த இதழ் திறந்து நீலா கேட்டாள் வெட்கத்துடன்.

"கற்றது கையளவு கல்லாதது கடலளவு என்பார் அன்றோ- கற்றறிந் தோரும்! கல்வியை அவர் சொன்னார். கன்னியே எனக்கு நீயும் அப்படித்தான்."

"மீனுக்கு வீசும் வலைபோல பேச்சாலே வலை வீசும் பொல்லாத மச்சான் நீர்!"

"விலையில்லா காரிகையே! வலையல்ல என் பேச்சு. படிக்காதவன் நான் எனினும் பொய்யாகப் பசப்பத் தெரியாதவன் நானடி நீ யறிவாய்."

"ஏட்டைத்தான் புரட்டவில்லை. அதனால் என்ன? பெரும் கூட்டத்தையே கவரும் இன்ப பாட்டெல்லாம் எடுத்து விடும் கலை உமக்கு வருகலையாய் வருகிறதே."

"அப்படிக்கேளடி - செப்படி வித்தை விழி என் அத்தை மகள் சித்திரமே அப்படிக் கேளடி! ஓலைச் சுவடிகளில் புரட்டியறிய முடியாத இன்பச் சுவை அனைத்தையுமே அத்தை மகள் உன் உருவில் கண்டுபிடித்தேனடி. களித்துப் பார்த்தேனடி."

"போ மச்சான் எறும்புக் கடிதான் உன் குறும்பு."

"அடி பிள்ளை- அருகே வா என் கிள்ளை!"

"வரமாட்டேன் போ மச்சான். வா என்பீர். வந்து நின்றால் தா என்பீர். பின் என்மீது தாவியும் கொள்வீர். ஏன் எனக்கு அந்த வம்பு? அதனாலே அதிகருகே வரமாட்டேன்-சொல்லிவிட்டேன். சொல்வதை நீர் அங்கிருந்தே சொல்லும் மச்சான்."





## சொரிப்பது போலே இதுவும்

எழுதுவது
**ரசிகன்**

"கண்ணிருந்தும் சித்திரத்தை இரசிக்காதே என்றுரைத்தல் முறையோ பிள்ளை. கையிருந்தும் காவியத்தை எழுதாதே என்றுரைத்தல் தருமோ கிள்ளை. உதடிருந்தும் தேன் அருந்த தடைதானே தொல்லை."

"பருவம் பாராமல் பயிர்செய்தல் முறையோ மச்சான். காலம் வரும் அதுவரை பொறுப்பதுதான் முறையாகும் மச்சான்."

"பருவம் பாராமல் பயிர் செய்தல் மெத்தப் பிழைதான் பிள்ளை. உன் உருவம் பார்த்தபின் பொறுமை காப்பது தகுமோ சொல்லு?"

"பேசி வெல்ல முடியாது உம்மோடு."

"உன்னை பார்த்த விழியும் மூடாது முரண்டுபிடிக்கும் என்னோடு."

"இமைக்க மறப்பது போல, எனை நினைக்க மறக்காமல் இருப்பீரோ ஆசை மச்சான்?"

"நான் இமைக்க மறப்பதும் உன்னால். விழி தூங்க மறுப்பதும் உன்னால். நினைவே நீயான பின்னால் மறப்பது என்பது என் மரணத்தின் பின்தான்."

"போதும் மச்சான் உம் பேச்சு. மூச்சு முழுக்க நீயென்ற உம் பேச்சு வெறும்பேச்சாய் போனது மச்சான். மரணம் வந்து நினைவை பிரிக்கும் என்றால் நம் காதலுக்கில்லை வலிவு என்றுதானே அர்த்தம் மச்சான்?"

"எடி பிள்ளை, இது என்ன வம்பாய் போச்சு. சிட்டே, மலர் மொட்டே சுட்டதோ உன்னை என் பேச்சு?"

"சுட்ட புண்கூட ஆறும் மச்சான். உம் பேச்சோ என்னை துன்பமெனும் சுழலில் அன்றோ வீசியதாய் ஆச்சு மச்சான்."

"பொன் மயிலே, பொங்கு கடல் கோபம் போல் குமுறாதே. திட்டமிட்டு பேசவில்லை. தப்பிருந்தால் என் மன மாடப் புறாவே மன்னியடி."

"எப் பிறப்பு நேர்ந்தாலும் அப்பிறப்பில் நம் உறவு தொடரும் என்ற சத்தியமே நம் காதல். பிரிவென்ற திரையில்லா நம் காதல் மரணமென்னும் நிகழ்வாலே அழியும் என்ற உம் நினைப்பு குளிர்காற்றாய் தழுவும் என்றோ நினைத்திட்டீர்?குமுறும்தான் நெஞ்சு கொதிக்கும்தான். துடிக்கும்தான் உயிர் முடிச்சு துடிக்கும்தான். தவிக்கும்தான் இதயம் வெம்பித் தவிக்கும்தான். நான் போகிறேன். இனி இங்கே எனக்கென்ன வேலை மச்சான்?"

எழுந்து அவன் தடுக்க முன்னர் புள்ளிமானாய் அவள் துள்ளி ஓடினாள்.

அவள் துள்ளி மறைந்த பின்னும் அவள் கூந்தல் சுமந்திருந்த முல்லைப்பூ வாசம் மட்டும் அவன் சுவாசமாகிவிட்ட அவள் நினைப்பு போல அங்கேயிருந்தது.

□□

"பாவமடி உன் மச்சான். ஏன் முறைத்து முறித்து வந்தாய்?"

தோழியவள் வேதனையாய் தொடுத்தாள் வினா.

"சங்கதி புரியாமல் சன்னதம் கொள்ளாதே. விசயம் தெரியாமல் வேதனைப்படாதே."

"நீயறிந்த சங்கதிகள் அத்தனையும் நானறிய வேண்டுமானால் காதல் வலையதனில் நானும் விழவேண்டு மன்றோ. அறிந்தவள் நீ சொல்வித்தா. அது எனக்கு அனுபவமாய் ஆகுமடி."

தோழியை முறைத்தாள். பின் இருளை கழுவும் வெளிச்சம் போல் வெள்ளையாய் புன்னகைத்தாள்.

"ஒரு தவறும் அவர்மீது கண்டேனல்ல. காணாத போதும் தவறு கண்டதுபோல் நடித்தோடி வந்தேனடி."

"நீ நடித்தாய். அதனால் அவர் துடிப்பார் என்று நீ அறியாயோ?"

"அடியே தோழி உண்பது முக்கியமோ உண்ட உணவு செரிப்பது முக்கியமோ?"

"முன் உண்ட உணவு செரிக்காமல் இருக்க உண்பதால் என்ன பயன்?"

"செரிப்பதுதானே பலன்?"

"ஆமடி அது உண்மை."

"அப்படித்தானடி கூடுவதை விட ஊடுதல் இன்பம். அதற்கில்லை நிகர் வேறு இன்பம்."

"அம்மாடி நீ பொல்லாத பொண்ணடி."

"எனக்கிந்த பட்டம் வீணடி. நான் இந்த சங்கதியறிய காரணம் திருக் குறளடி. அதை நீயும் கேளடி."

**"உணலினும் உண்டது அறல் இனிது காமம்**
**புணர்ந்தபின் ஊடல் இனிது"**

குறள்-136
அதிகாரம்-133

## குறுக்கெழுத்துப் போட்டி இல-71

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | ■ | 3 | | 4 |
| | ■ | | ■ | 5 | | |
| 6 | | | ■ | | ■ | |
| | ■ | ■ | 7 | | | |
| 8 | 9 | | | ■ | ■ | ■ |
| ■ | | ■ | 10 | | | |
| 11 | | | | ■ | 12 | |

### இடமிருந்து வலம்

1. நம்முன்னோர்கள் நோய் தீர்க்க நாடியது இதனைத்தான்.
3. இந்த வார்த்தை வரும் ஒரு பாடல் கமல் நடித்த படமொன்றில் இடம் பெற்றிருக்கிறது.
5. விரோதியை இப்படியும் அழைக்கலாம். (குழம்பியுள்ளது)
6. இது அதிகமாகச் சூழலும் அசுத்தமாகும்.
7. ஏதாவது ஒருதுறையில் அறிவும் அனுபவமும் கொண்டவர்களை இப்படி அழைப்பதில் தப்பேயில்லை.
8. மனதை ஒரு கட்டுக்குள் கொண்டு வருவதற்கு இது உதவும் என்பார்கள்.
10. தவறான செய்திகளுக்கு இது தெரிவிக்கப் படுவதுண்டு,
11. இதனோடு விழாவையும் சேர்த்து விட்டால் ஒரு நிகழ்ச்சி ஆகிவிடும். (குழம்பியுள்ளது)
12. இவர் கண்ணதாசன் காலத்திலிருந்தே எழுதிக்கொண்டிருக்கிறார்.

### மேலிருந்து கீழ்

1. இதில் ஒற்றைக்கல்லு வைத்தால் அழகாக ஜொலிக்கும்.
2. வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு இது ஏற்றது.
3. உறுதிக்கு இதை உதாரணமாகச் சொல்லலாம்.
4. பட்டணத்தாரையும் இப்படி அழைக்கலாம்.
7. பிரச்சனையும், போரும் இல்லாவிட்டால் நாமும் இதனை அனுபவிக்கலாம்.
9. இதற்கு முன்னால் அரசியல் என்ற சொல்லையும் சேர்த்து விட்டால் முக்கியமான ஆவணம் ஒன்றின் பெயர் கிடைக்கும்.

**இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 22.10.1994க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:**

குறுக்கெழுத்துப் போட்டி இல-71
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல-69க்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 வி | ஞ் | 2 ஞா | னி | ■ | 3 ஓ | 4 சை |
| னா | ■ | 5 ப | ய | ணி | ■ | வ |
| டி | 6 ப | க | ■ | 7 ஏ | ல | ம் |
| ■ | ல | ம் | 8 க் | ■ | ■ | ■ |
| 9 ம | கா | ■ | 10 சி | த் | தி | 11 ரை |
| 12 கு | ர | க் | க | ன் | ■ | பி |
| டி | ம் | ■ | ல் | ■ | 13 மு | ள் |

**குறுக்கெழுத்துப் போட்டி இல.69இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்**

1. எஸ். வத்சலா நீர்கொழும்பு.
2. மர்ழியா நஸீர் கண்டி.
3. கே. சுபாஸ்கரன் கண்டி.
4. எம். ஹரீஸ் கல்நேவ.
5. எஸ். சரோஜினிதேவி வவுனியா.
6. எம். பாலகிருஷ்ணன் கொழும்பு-13.
7. வை.ஜுலியட் மேரி ஹட்டன்.
8. எஸ். சஹர்பானு அக்கரைப்பற்று-06.
9. முகமட் பௌஸர் புத்தளம்.
10. தயாநிதி தட்சணாமூர்த்தி மட்டக்களப்பு.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

---

நடிகர் கவுண்டமணி, செந்திலைப் பற்றி ஒரு சில வரிகள்?

**நா.மகேஸ்வரன்-கோட்டை கல்லாறு.**

ஒருவர் உதைத்து சம்பாதிப்பவர். மற்றவர் உதைவாங்கி சம்பாதிப்பவர்.

□□

யுத்தத்தில் இருக்கும் மோகம் சிலருக்கு சமாதானத்தில் இல்லையே ஏன்?

**ஏ.எச்.எம்.மௌநீத்-ஷிஜ்ராபுரம்.**

குட்டை குழம்பியிருந்தால்தானே மீன்பிடிக்க வசதி.

□□

காதல் என்பது கலையா அல்லது வலையா?

**சகிலா கமால்தீன்-ஏறாவூர்-3.**

ஏமாற்றுகிறவர்களுக்கு கலை. ஏமாறுகிறவர்களுக்கு வலை.

□□

நடிகை ஸ்ரீதேவி சல்மான்கானுடன் நடிப்பது எப்படியிருக்கும்?

**மரியம் காலித்-கண்டி.**

ஸ்ரீதேவிக்கு வயது இறங்குவரிசையில் என்று நினைக்கக்கூடியதாக இருக்கும்.

□□

இன்றைய தமிழ் சினிமாவில் மிகச் சிறந்த நடிகர் யார்?

**பெருமாள் ராஜேந்திரன்-பொரலங்கட.**

நடிகர்திலகம் இன்னமும் முற்றாக ஒதுங்கவில்லை. ஒதுங்கும்வரை வேறு பெயருக்கு இடமே இல்லை.

□□

அன்பின் சிந்து, தூங்கிக்கொண்டிருக்கும் யானை மீண்டும் எழுந்திடுமா?

**க.பிறேமலதன்-அக்கரைப்பற்று-08.**

புதிய யானைப் பாகனின் கறுகறுப்பைப் பார்த்தால் எழாது என்று சொல்ல முடியாது.

□□

மனிதர்களாகிய நாம் நினைப்பதை இறைவன் மாற்றுகின்றார். அதன் காரணம் என்ன?

**நா.சலேத்தம்மா-வெல்லம்பிட்டிய.**

நீங்கள் நினைப்பதெல்லாம் நடந்தால் அவரை நினைக்கமாட்டீர்களே! அதனால் தான்.

□□

இந்தியாவில் இருக்கும் காதல்

சின்னமான தாஜ்மஹால் இலங்கையில் இருந்திருந்தால்?

**சகுந்தலா கந்தசாமி-இரத்தினபுரி.**

தாஜ்மஹால் எங்கிருக்கிறது... எங்கிருக்கிறது என்ற கேள்விக்கு இலங்கையில் என்று விடை எழுதலாம்.

□□

ஓர் இரகசியத்தை இரகசியமாக வைத்திருக்க வழி என்ன?

**ரம்ஸி ஹமிட்-குளியாப்பிட்டி.**

இதயத்தின் சாவியை நீரே வைத்திருக்க வேண்டும். வேறு எவரும் திறந்து பார்க்க முடியாதல்லவா? (எனக்கு மட்டும் அந்த இரகசியத்தை எழுதியனுப்பும்)

□□

இன்றைய சினிமா உலகம் எப்படியிருக்கிறது?

**எஸ்.சந்திரகலா-கண்டி.**

ஆச்சரியப்படவைக்கும் காட்சியமைப்புக்கள். ஆனால் மனதில் ஆழமாகப் பதியும் கருத்தமைவுகள் மட்டும் மிஸ்ஸிங்.

□□

முதியோரைக் கேலி செய்யும் இளையோர் பற்றி?

**கே.சுமித்திரா-கல்முனை.**

வருமுன் அறியாதவர்கள். அதாகப்பட்டது- தாமும் ஒருநாள் முதியோராவோம் என்பதை.

□□

மாசற்ற அன்பை எங்கு காணமுடியும்?

**நினோஸா ஆதம்-அ/ஹாறவபொத்தனை.**

மாசும் தூசும் இல்லாத மனதில்.

□□

பொதுஜன முன்னணியில் தொண்டா இணைவாரா?

**அபுல்-பைஸால்-அம்பாறை.**

இல்லை. சற்று தூரத்தில் நின்று ஆதரிப்பார்.

□□

இன்றைய அரசியல் பற்றி என்ன கருதுகிறீர்கள்?

**ரெங்கசாமி ஜீவராணி-பொகவந்தலாவ.**

மெய் சொன்னால் பொரியும் கிடைக்காது.

□□

ஒரு பெண் வாழ்க்கையில் செய்யும் முதல் தியாகம் எது?

**நிசானா ஜிப்ரி-பேருவளை.**

அந்த உன்னதமான பத்துமாதம்!

□□

இன்றைய நடிகைகளிடம் அதிகமுள்ளது நடிப்பா-கவர்ச்சியா?

**ஏ.யோகநாதன்-புத்தளம்.**

சதைப் பிடிப்பால் நடிப்பு வெற்றிடத்தை நிரப்பும் தந்திரம்.

□□

வை.கோபால்சாமி என்ன் செய்கிறார்?

**எஸ்.ராமலிங்கம்-நுவரெலியா.**

புலிகளுக்கு சார்பானவர்களுக்கு தனது கட்சியில் இடமில்லை என்று கூறிக் கொண்டிருக்கிறார்.

□□

சமீபத்தில் உங்களை பாதித்தது அல்லது பயப்படுத்தியது?

**கா.பாரதி-கொழும்பு-06.**

பிளேக் பயங்கரம்.

□□

புலிகள் ஏன் தொடர்ந்தும் தாக்குதல் நடத்துகிறார்கள்?

**எம்.ஜுனைதீன்-மருதானை.**

போர் நிறுத்தம் வேண்டும்-என்கிறார்கள்.

□□

உங்கள் உள்ளம் கவர்ந்த தலைவர் யார் என்று சொல்லுங்கள்?

**ஆர்.தெய்வநாயகி-கண்டி.**

பகுத்தறிவு என்ற பலமான காவல் போட்டு வைத்திருப்பதால் யாரும் கவர்ந்து கொள்ளும் வாய்ப்பேயில்லை.

□□

சமீபத்தில் அதிக வசூல் குவித்த தமிழ் திரைப்படம் எது?

**வி.சிறிதரன்-மட்டக்களப்பு.**

அமைதிப்படைதான் அட்டகாசம்.

□□

# மகாபாரதம் அங்கம் 50

**இவ்வாரம் (16.10.94 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.**

**அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்**



**காலத்தின் குரல்:** குருதியில் குளித்தே இக்காவியம் முடிகிறது. இன்று கண்ணீர்க் கடலாடும் கட்டத்தைக் கடக்கிறது. பாண்டவரும் தாயும் பாஞ்சாலியுடன் சேர்ந்தே பிரியாவிடை கூறிப் புறப்படும் வேளையிது. அஸ்தினாபுரத்தின் அரியணையிலுள்ளவரும் அவை நடுவே வீற்றிருக்கும் பிதாமகரும் குருமாரும் அவைக்களத்திலுள்ளோரும் அருமை மிகு நாடுமன்றி அவமதிப்பைத் தேடியவர் வேறெவருமில்லை என்ற உண்மைதனை அறிவுறுத்த அவை நடுவே வந்து நின்ற பாண்டுமாமன்னவனின் பத்தினியாம் குந்தி அங்கு பகன்றிடும் வார்த்தை நல்ல பாடமதாகுமன்றோ!

-காட்சி மாற்றம்-

தர்பாரில் துரியோதனனும் சகுனியும் கைகுலுக்கி மகிழும்போது ஐவருடன் குந்தியும் பாஞ்சாலியும் வருகின்றனர்.

__பின்னணிப்பாடல்:__

**குடை நிழலிருந்து குஞ்சரமூர்ந்தோ ரின்று**
**படை இழந்து பதியிழந்து பதவிகளும் துறந்த**
**விடை காண முடியா விதியினடி தேடி**
**நடைமெலிந்து நடக்கின்றார் நாணித் தலை கவிழ்ந்தே!**

**குந்தி:** பாரத வம்சத்தின் பெருமைக்கும் புகழுக்கும் பாரம்பரியப் பண்பான மேன்மைக்கும் பொக்கிஷமாய்த் திகழ்கின்ற மாமன்னர் பெருந்தகையை மன்னவரின் பின்னவரின் மனையாள் நான் வணங்குகிறேன்!

**திருத:** மாமந்திரியாரே! மதியூகி விதுரரே! குந்தியின் குரலன்றோ கேட்கிறது இங்கே! காரணம் என்னவென்று கடுகி அறிந்திடுக!

**விதுர:** ஆகட்டும் அரசே.....! அண்ணியரே! தாங்கள் அவைக்கின்று வந்ததேனோ? அறியலாமோ நாங்கள்?

**குந்தி:** அஸ்தினாபுர நாட்டைவிட்டு அகல்வதற்கு முன்னர் மன்னர் விடைபெறவே வந்தோம் நாம் இப்போது!

**திருத:** அண்ணன் தம்பியர்க்கிடையில் அமைதி அறுந்ததற்கு அரிவை இவர்க்கென்ன குறை? அரண்மனையில் இருக்கட்டும் ஆட்சேபமேதுமில்லை!

**குந்தி:** மன்னிக்க வேண்டுகிறேன்! வீட்டுக்கு மருமகளாய் வந்த வனிதையவள் மானத்தைக் காக்க உடல்-மூடிக்கிடந்த துயில் நாடிக்களைந்ததனை நாணமின்றிப் பார்த்திருந்த நாட்டின் அரண்மனையில் கூடியிருப்பதற்கு குலமகளுக்கிணக்கமில்லை!

**விதுர:** அண்ணி! என்னுடன் வாருங்கள்! என் குடிலில் என்றும் அன்புடனே தங்கிடலாம். மகனே யுதிஷ்டிரா! கானகத்தில் உன்னுடனே கடுகி நடந்திடவே உன் அன்னையினால் முடியாது. அவள் உடம்புக்காகாது. சொல்லப்பா அண்ணி எங்களுடன் இருக்கட்டும்! சதுரங்க ஆட்டத்தில் உன் அன்னைக்கும் பங்கில்லை. துரியோதனனும் எதிர்ப்பேதுவும் எடுத்துரையான்..!

**துச்சா:** சின்னம்மா அச்சமின்றி என்மனையில் சில காலம் தங்கட்டும்!

**பீமன்:** நடவாது நடவாது அதுமட்டும் நடவாது! எமதருமைத் தாயார் உமது மனையிலேயிருந்தால் உன் மார்புதனைப் பிளந்து ஊற்றெடுக்கும் குருதியினை உவப்புடன் நானெடுத்து பாஞ்சாலியவள் போட்ட பெருஞ்சபதம் முடிப்பதெப்போ?

**யுதிஷ்:** அஸ்தினாபுர நாட்டின் அதிபதிகளானோரே! அருமைமிகு தம்பியரும் அன்பு மனையாளுடனும் கானகம் தனில் ஏக ஆசிபல கூறி அன்பு விடை தாருங்கள்!

**குந்தி:** என்னை ஏன் சேர்க்கவில்லை என் அன்பு மகனே?

**அர்ச்:** சித்தப்பா விதுரர் மகான் கூறியதே உண்மை அம்மா! சிலகாலம் அவரில்லம் சிரமமின்றி இருந்திடுங்கள்! பதின்மூன்று ஆண்டுகளும் பறந்தவுடன் வருவோம்! ஆசிகூறி எம்மை அனுப்புங்கள் எம் தாயே!

**குந்தி:** உங்களைப் பிரிந்திங்கே என்ன செய்யப் போகின்றேன்? மகளே எழுந்திரம்மா! மாசிலா உன் புன்னகையே என் மைந்தர்க்கு மகிழ்வளிக்கும். இளைய மகன் சகாதேவன் என் அன்பின் உறைவிடமாம். இடரின்றிக் காத்திடுங்கள். தடையின்றிச் சென்றிடுவீர்!

-காட்சி மாற்றம்-

கானகத்தில் பாண்டவரும் திரௌபதியும்

__பின்னணிப்பாடல்:__

**இன்றுபோல் நாளை என்றுமே இருப்பதில்லை.**
**நன்றென்றும் தீதென்றும் நடப்பதுவே உண்மை!**
**காலத்தின் வலிவதனை கணிப்பதற்கோர் வழியேது?**
**ஞாலத்தில் அதுபோல நிகழ்வேதும் நடவாது**

**நாடாளப் பிறந்தவர்கள் நயவஞ்சகர் சதியால்**
**காடாளச் செல்கின்ற காட்சியது கண்டோம்**
**பாடாகப் பெரும் துயரம் பட்டாலும் அவர் என்றும்**
**நாடாரே நலிவுதரும் நெறிகளையே மீண்டும்.**

□□□

பீஷ்மரின் மாளிகைக்கு விதுரர் வருகின்றார்.

**விதுர:** வணக்கம் பெரியப்பா!

**பீஷ்ம:** அருமை மகனே! எப்படி உனை வாழ்த்த? நீடூழி வாழ்க என்று நிலையற்ற காலமதில் நிறைவாக வாழ்த்திடவே நினைப்பதற்கு முடியவில்லை.

**விதுர:** மூத்தோரின் வாழ்த்துரைகள் எத்தகையதானாலும் மகிழ்ச்சியுடன் ஏற்பதுவே மைந்தனிவன் கடமை! ஆனாலும் பிதாமகரே! அறிவொளி சேருங்களில்லம் ஒளியிழந்து களையிழந்து இருளூறங்கக் காரணமேன்?

**பீஷ்ம:** என் உள்ளத்தில் புகுந்த இருள் இவ்விடத்தில் சூழ்கிறது. தெளிவான சிந்தனையின் ஒளியாகத் திகழ்ந்த உந்தன் ஒளி மழுங்கிப் போகும், என்னருகே நீயிருந்தால். அஸ்தினாபுரி நாட்டின் அருங்காவல் நீயன்றோ! அழிவு நிலை அணுகாமல் அணைப்பதுமுன் பணியன்றோ?

**விதுர:** பேரழிவு சூழாமல் தடுப்பதற்கு நானெடுத்த பெரு முயற்சி எல்லாமே சிறுமதியால் சீரழிந்து சிதைந்துபட்டுப் போனதன்றோ?

**பீஷ்ம:** உண்மைதனை உரைக்கவல்ல உயர் பண்பு படைத்தவன் நீ! என்னால் முடியவில்லை ஏமாந்து போனேன் நான். பகடைக்காய் உருட்டுகையில் பாண்டவர்க்கே வெற்றி பண்புடனே கிட்டுமென பேராசை கொண்டிருந்தேன். தருமன் ஜெயித்திருந்தால் சூழ்ச்சியாளன் சகுனி தலைகவிழ்ந்து போயிருப்பான். அவனுடைய ஆதிக்கம் அடி தளர்ந்து போயிருக்கும். ஏமாந்து போய்விட்டோம். நாடு எதிர்நோக்கும் நாசத்தைத் தடுப்பதற்கு நல்ல வழி காண்பதற்கு உன்னால்தான் முடியும்! பாண்டவர்கள் வனவாசம் போன தினம் நாளையுடன் பதின்மூன்று ஆகிறது. சிறப்பான சூழ்நிலையில் அவசரமும் ஏற்படுங்கால் பதின்மூன்று நாட்களையே பதின்மூன்று ஆண்டுகளாய் கணித்திடுதல் தவறில்லை. சாத்திரமும் சாற்றுகின்ற உண்மையிது உணரப்பா! மன்னவனிடம் சென்று மறுப்பின்றி எடுத்துரைத்து, பாண்டவரை மீண்டும் தருவிக்கத் தூண்டிடுவாய்!

**விதுர:** மன்னவர் இந்நிலைக்கு மறுத்துவிட்டால் செய்வதென்ன?

**பீஷ்ம:** மன்னவர்க்கு மட்டும்தான் பற்றுறுதி கொண்டிருப்பேன். பின்னவன் துரியன் மறுத்தால் தக்கபடி தண்டிப்பேன். மன்னனிடம் போய் வா நீ! உண்மைதனைக் கூறி உரிய வழி தேடு! முயற்சி எடுத்துப்பார்-முடியாத தொன்றில்லை.

-காட்சி மாற்றம்-

திருதராட்டிரன் அரண்மனை

**விதுர:** வணக்கம் மாமன்னவரே! வணக்கம் அண்ணியரே!

**திருத:** பொழுது புலர்வதன்முன் புறப்பட்டு வந்துள்ளீர்! பொறுக்க முடியாத இறுக்கமான காரணமோ? ஏற்க முடியாத ஏதாவதும் உண்டோ?

**காந்:** உங்கள் கருத்துக்கள் விதுரர்க்கு எப்போதும் ஏற்புடையதல்ல என்பதனால் போலும்..!

**திருத:** அரசமாளிகை தன்னில் அமர்வதற்குப் பிடிக்காமல் விதுரரின் குடிலுக்கே குந்தியவள் போனமையால் கசப்பான உண்மையினை கடுப்பாக உணர்கின்றேன்!

**காந்:** குந்தியின் மைந்தர்களின் குலக்கொடியாள் திரௌபதியின் கூந்தலைப் பிடித்திழுத்து கட்டாடை தனைக்களைந்து மானம் பறித்த இந்த மாளிகையில் மங்கை இவள் தங்குவது இழிவன்றோ? பாஞ்சாலியின் பெருமை பாரதத்தின் பெருமையன்றோ?

**திருத:** என்னைத் தனியாக்கி விட்டு விட்டீரெல்லோரும்! ஒன்றை மட்டும் உணருங்கள்! அண்ணன் தம்பியரின் அரும்புதல்வர்களுக்கிடையில் அமர் பொருத நேர்ந்தால் எத்தனைபேர் உயிரிழப்பார்? எத்தனைபேர் பிழைத்திருப்பார்? சாவைத் தடுத்திடவே சமர் தனைநான் தடுத்தேன். நாட்டைப் பிரித்ததுவே என் நெஞ்சமதைப் பிரித்தது போல்! குந்தியிடம் கூறு! என்னெண்ணம் எடுத்துரைத்து எம்முடன் வந்திருக்கச் சொல்! இல்லையெனில் இன்றே இங்கிருந்து தன்மக்கள் இருக்குமிடம் தேடி கானகத்துக்கேகச் சொல்!

**விதுர:** மகாராஜா..!

**திருத:** பாண்டவர்கள் வனவாசம் புகுந்த கதை தன்னை அஸ்தினாபுரி மக்கள் மறந்திருக்க வேண்டும்! விதுரரவர் குடிலினிலே குந்தியவளிருந்தால் மக்கள் மனதினிலே மாறாதிருக்கும் துயர்!

**விதுர:** சிக்கல் தனைத் தீர்க்க சிறந்த மார்க்கமொன்றுண்டு!

**திருத:** கானகத்துக்கேக குந்தியவள் துணிந்தாளோ?

**விதுர:** காடுகளில் அலையும் நிலையிலில்லை அண்ணி இப்போ! பாண்டவர்கள் வனவாசம் மேற்கொண்டு இன்றோடு பதின்மூன்று நாட்கள் பறந்தோடி விட்டனவே! ஒருநாளதனை இப்போ ஓராண்டாய்க் கணிப்பதற்கு சாத்திரங்களில்கூட சிறப்பு வழியுண்டு. தூதனுப்பி இன்றே அன்னவரை அழைத்திடுங்கள். எல்லாம் சீராக முடிந்து நலமெய்திடலாம்.

**திருத:** துரியோதனன் தற்கொலைக்கு தூபமன்றோ போடுகின்றீர்? பாண்டு மன்னன் மீதும் பஞ்சபாண்டவர் மீதும் பேரன்பு பூண்டவர் நீர்! பிரிவை விரும்பவில்லையெனில் அவருடனே கானகத்தில் அலைந்திடவே போகாமல் அரண்மனையில் ஏன் இருந்தீர்?

**காந்:** மகாராஜா..!

**திருத:** விதுரர் யாருக்கு முதல் அமைச்சர்? அஸ்தினாபுரத்துக்கா? இல்லை அந்தப் பாண்டுவின் புதல்வருக்கா? போர் முழக்கம் கேட்காமல் பதின்மூன்று ஆண்டுகளை பின் தள்ளிப் போட்டுவிட்ட நிம்மதியில் நானிருக்கும் வேளை தனைப் பார்த்து போர் முரசு ஒலிப்பதற்கு புதிய வழி காட்டுகின்றீர்! விதுரரே...! எங்கே அவர்? என் ஆணையின்றி அவரே போய்விட்டாரோ...?

**காந்:** புறக்கணிக்கப்பட்டவர்கள் போய் வாறேன் என்று சொல்லி விடைபெறுவதில்லையன்றோ? போய்விட்டார் விதுரர்..!

**துரி:** கானகத்துக்கேதான் நடந்திருப்பார் விதுரர்! என் நாட்டை நிர்வகிக்க எனக்கு வழி தெரியும்! யுதிஷ்டிரனிடம் விதுரர் எதனைப் போயுரைத்தாலும் விதித்தபடி பதின்மூன்று ஆண்டுகளும் கடவாமல் இடைநடுவில் ஓடிவரும் எண்ணத்துக்கிடம் தரவே துடித்திடவும் மாட்டார் என் தம்பி பிள்ளைகள்தான்!

-காட்சி மாற்றம்-

கானகத்தில் யுதிஷ்டிரர் தியானத்திலிருக்கிறார். சகோதரர்கள் அவரிடம் வருகின்றனர்.

**யுதிஷ்:** ஓம் நமசிவாய! ஓம் நமசிவாய! ஓம் நமசிவாய!

**பீமன்:** அண்ணா வணக்கம்! அஸ்தினாபுரிமீது தாக்குதல் தொடுப்பதற்கு ஆணையிடுங்கள் அண்ணா!

**யுதிஷ்:** அஸ்தினாபுரியை தாக்குவதா? என்ன தம்பி சொல்லுகிறாய்?

**அர்ச்:** ஆம் அண்ணா! தாக்குதலைத் தொடுப்பதற்கு தருணம் இதுதானண்ணா!

**பீமன்:** பாஞ்சாலி அவிழ்த்துவிட்ட கூந்தலினைப் பார்ப்பதற்கு பரிதாபமாகிறதே!

**யுதிஷ்:** எனக்கும்தான் வேதனை! துரியோதனனை இதற்குத் தண்டிப்பதால் மட்டும் துயரங்கள் தீராது. பாஞ்சாலிதன்னையும் தம்பிமார் தம்மையும் சூதுப்பொருளாக தாயத்தில் வைத்தாடி தோற்றுப் போனவனான நானேதான் பழிகாரன்.

**பீமன்:** எங்களில் எவரேனும் எக்குறையும் சொன்னதுண்டோ?

**யுதிஷ்:** பதின்மூன்று ஆண்டுகள் பதுங்கியே வாழ்கின்ற பெரும் பொறுப்பை ஏற்றுள்ளேன்! மறந்து விட்டீரா எனதருமைத் தம்பியரே..?

**பீமன்:** பதின்மூன்று ஆண்டுகளும் பறந்தோடி விட்டதன்றோ!

**யுதிஷ்:** பதின்மூன்று நாட்களை பதின்மூன்று ஆண்டுகளாய் கணிப்பதற்குச் சிறப்புக் காரணங்கள் வேண்டும். சான்றோர் எமக்களித்த சாத்திரத்தை தானெடுத்து சந்தர்ப்பம்போல் வளைத்து சாதகமாக்கிடுதல் செம்மை வழியல்ல..! சிறப்பும் அதுவல்ல.

**திரௌ:** அண்ணன் கூறியதை அப்படியே ஏற்றிடுங்கள். அவமானத்தால் இன்று அடங்குவதே நன்று. விவாதிப்பதுக்கிங்கே வேறு பொருளில்லை. சூதாடும்போது வைத்தாடுவதற்கு ஒரு தோதான பொருளின்றி மாதென்னை வைத்தாடி மறுபடியும் தோற்றுவிட்டார். சந்தர்ப்பத்துக்கேற்றபடி சாத்திரத்தைப் புரட்டுவது சாதுரியமானதல்ல!

**யுதிஷ்:** பெரும் பிழைகள் விட்டவன் யான்! பொல்லாங்கு செய்தமையால் சூழ்ந்த பெரும் பழியை உள்ளபடி நீக்கும் கடமை எனக்கேயுண்டு! வனவாசமும் முடிந்து மற்றுமோராண்டு தனில் அஞ்ஞாதவாசத்தை ஏற்றே முடித்திடுவேன். இத்தனை இடர்களையும் ஏற்றே அனுபவிக்க பாஞ்சாலியாள் துயர்படவும் வேண்டியதே இல்லை. நான் விட்ட பெரும் பிழைக்கு பரிகாரம் காண்பதுவே பெரும் கடமை எனக்கு. தம்பிமார் நால்வரும் திரௌபதி நல்லாளும் திரும்பிடலாம் இன்றோடு!

**அர்ச்:** அண்ணனை விட்டுப் பிரியும் அவா வில்லை எங்களுக்கு! அத்தனையும் தாங்கள் அறிந்ததன்றோ அண்ணா? தூரத்தே படை ஒன்று வரும் சப்தம் கேட்கிறது.

**யுதிஷ்;** தம்பி சகாதேவா! சப்தமொன்று கேட்கிறது. சென்று பார்த்து வா இப்போ!

**அர்ச்:** பல்லாயிரம் இரத்தங்கள் பவனி வருவதுபோல் பேரொலி எழுந்தன்றோ பேரோசை கேட்கிறது. வனவாசம் ஏற்றதையும் விரும்பாமல் எம்மை வேரோடு ஒழித்திடவே துரத்தி வருகின்ற துரியோதன் படைதானோ...?

**யுதிஷ்:** சகுனி மாமா விரிக்கும் சூழ்ச்சி வலை அறியாது சந்தேகப்படுகின்றாய்-பொறுத்திரடா தம்பி! பதின்மூன்றாம் ஆண்டின்பின் பதிதேடி வராமல் எமை ஏய்த்திடவே ஏற்ற வழி தேடிடுவரே அன்றி துரியனைப் போர் முனைக்கு போக விடமாட்டார்-புரிந்திடுவாய் இவ்வுண்மை பேரன்புத் தம்பி! வந்திருப்பதெதிரிகளின் வீரப் படையல்ல! நண்பரின் படையன்றி வேறில்லை என உணர்வாய்!

**நகுல:** பெரும் படையுடன் இங்கு வந்திருப்போர் யார் அண்ணா?

**யுதிஷ்:** படையுடன் வருபவர் நண்பருமல்ல மற்றும் எதிரியுமாக மாட்டார்! படை நடத்தும் பாங்கு படைத் தளபதிக்கே உண்டு.

-காட்சி மாற்றம்-

திஷ்டத்துய்மனுடன் சகாதேவன் வருகிறான்.

**திஷ்ட:** வணக்கம் மைத்துனரே!

**யுதிஷ்:** வணக்கம் இளவரசே- வாருங்கள்! அமருங்கள்!

**திஷ்ட:** அமைதியுடன் அமர்ந்து ஓய்வெடுக்க என்னை எம் அரசர் அனுப்பவில்லை! அஸ்தினாபுரிமீது அமர் பொருத எமது படைகளெல்லாம் ஆயத்தம்! தங்கள் கொடியின் கீழ் எங்கள் படை நடக்கும். வெற்றிதனை எட்டாதெம் ஆயுதங்கள் உறங்காது.

**யுதிஷ்:** போர்தனை நான் நாடவில்லை! போர்தான் வழியென்றால் என் சோதரர்கள் போதுமன்றோ!

**திஷ்ட:** சூதாடும் சபைதனிலே - என்-சோதரிதான் சோகமுற்றாள். அவமானத்தை அணைத்து அலறித்துடிதுடித்தாள். தங்கைக்கு அபகீர்த்தி இழைத்தோரைப் பழிதீர்த்தல் தமையனின் கடமையன்றோ?

**யுதிஷ்:** நியாயமான உன் நினைவை நிராகரிக்க முடியாது. இருப்பினும் பாஞ்சாலிதன் பெருமை பாண்டவர் தம் பெருமைக்கு மாறுபட்டதொன்றோ என அவளிடமே கேட்டு அறிந்த பின்னர் போர்முனைக்கு ஏகுவதே சிறப்பு!

**திரௌ:** எனதருமை அண்ணா! என் வாழ்வும் தாழ்வும் என்றும் இனி வேறல்ல...என் கணவர் வாழ்வுடனே என்றென்றும் பிணைந்திருப்பேன். எமதருமைத் தந்தையிடம் என் கருத்தைக் கூறண்ணா!

**திஷ்ட:** அப்பாவிடம் உன் கருத்தை அப்படியே கூறுகிறேன். வேண்டுமென விருப்பிருந்தால் வீறுடனே வருவோம். விடை கொடுங்கள் இப்போது!

**யுதிஷ்:** இளவரசே நன்றி! வேண்டும்போது எம் வேண்டுகோள் விரைந்து வரும்!

**திஷ்ட:** தங்கை திரௌபதியாள் தங்களுடன் கானகத்தில் தங்கியிருக்காமல் எங்களுடன் வந்திருந்தால் நன்றாயிருக்குமன்றோ? நயந்து விடை தருவீரோ?

**திரௌ:** என் குடும்பத்தலைவருடன் என்றும் பிணைந்ததுவே என் தலைவிதியாகும்! அவ்விதிதனை மாற்ற எண்ணுவது அழகல்ல-என் அண்ணா! வனவாசமே எனது விதிகாட்டும் போர்முனையாம்! குலைந்துவிட்ட என் கூந்தல் நிலையான படைக்கலங்கள்!

-காட்சி மாற்றம்-

கானகத்தில் பாண்டவரை காணவருகிறார் விதுரர்.

**ஐவரும்:** வாருங்கள் சித்தப்பா! வணக்கத்தை ஏற்றிடுங்கள்!

**விதுர:** வாழ்க வாழ்க பல்லாண்டு! காண விரும்பி வந்தேன்! காணாதிருந்தமையால் கவலையும் எழுந்ததன்றோ!

**யுதிஷ்:** அஸ்தினாபுரத்தினிலே அனைவரும் நலம்தானா?

**விதுர:** திருப்தியான விடைதனை தருவதற்கு முடியவில்லை! மகனே பாஞ்சாலி! பாண்டவர் தம் குடும்பத்தின் முதுகெலும்பு நீயன்றோ? உன் அத்தை உங்களுடன் உடல் நலிவால் வரவில்லை. பிதாமகர் முதல் தொடங்கி மாமன்னர் திருதருடன் குந்தியும் ஒன்றிணைந்தே எம் நாட்டின் முதியவர்கள். அஸ்தினாபுரி நாட்டின் இன்றுள்ள பிம்பங்கள் நீங்களல்லால் வேறில்லை! எதிர்காலச் சிறப்பதனை எடுப்பாக அமைப்பதற்கு ஏற்ற வழி தேடுங்கள். அரிய திட்டம் வகுத்து அமைதியுடன் செயற்படுங்கள்! கானகம் தானின்று உங்கள் கர்மபூமியானதுவே!

**அர்ச்:** சற்றுத் தெளிவாகக் கூறுங்கள் சிறப்புடனே சித்தப்பா?

**விதுர:** உண்மையின் உயர்வதனை உணர முடியாதவர்கள் உருக்குலையும் பெருமைகளை உணரவும் முடியாது. நம் நாடு சிதைகிறது. சிதைவைத் தடுப்பதற்கு சீர்வழி வேறேதுவுமில்லை. சீரழியும் நாட்டருகில் சிறிதேனும் தங்காமல் வேறு வழி ஏகுங்கள்! வேறாட்சி தேடுங்கள். உண்மை உறைக்கும்தான். இந்த உண்மைதனை உணராத என் அண்ணன் திருதன் என்னைத் துரத்திவிட்டான். உற்ற வழி கூறும் உயர்வுடையோர் எவரையுமே எற்றிவிட்டு இன்று தனிமையில் தவிக்கின்றான்!

**அர்ச்:** சித்தப்பா!

**விதுர:** உண்மைதான் மகனே! மன்னவன் தனித்துவிட்டான்.

□□□

திருதராட்டிரன் அரண்மனைக்கு கோபமுடன் வருகிறார் பீஷ்மர்.

**திருத:** அடங்காத கோபத்துடன் ஆவேசமேன் பிதாமகரே!

**பீஷ்ம:** அஸ்தினாபுரியின் அரியணையை அழிப்பதற்கு அத்திவாரமிட்டீரா?

**திருத:** நான் விட்ட தவறென்ன? தயவுடனே கூறுங்கள்!

**பீஷ்ம:** என்ன தவறென்று என்னிடமா கேட்கின்றாய்? மன்னன் என்று என்றும் மகுடமேற்க முடியாத மாபெரிய முட்டாள் நீ! உண்மை கசக்கும்தான்! இனிக்காத தன்மையினால் ஏற்க முடியாதென்று எண்ணுவது பொருந்திடுமா? உள்ளதை உள்ளபடி உரைக்கின்ற விதுரர் தன்னை உதைத்துவிட்டாய்! நீ விட்ட பெரும் தவறால் நாடு நாசமடைகிறது! மாமந்திரி தனை இழந்து மதியழிந்து போனாய் நீ! விதுரர் மீண்டும் வராவிட்டால் நெருங்கிவிடும் நாட்டழிவு! உன் அரசும் அரியணையும் அழிவதுதான் திண்ணம்! இருள் சூழ்ந்து வருமுன்னே விதுரரை நீ தருவித்து வருமிழிவைத் தடுக்கும் மார்க்கமதைத் தேடிக்கொள்!

-காட்சி மாற்றம்-

கானகத்தில் திருதராட்டிரரின் இரதத்தை சாரதி சஞ்சயன் செலுத்தி வருகிறான்.

**சஞ்ச:** வணக்கம் இளவரசே! விதுரரை அழைத்துச்செல்ல விரைந்தோடி வந்தேன் நான்!

**பீமன்:** வாருங்கள் சஞ்சயரே!

**விதுர:** மாமன்னர் என்னை வெளியேற்றி விட்டதன் பின் விரைந்தே உனை அனுப்பி வைத்ததும் ஏனப்பா?

**சஞ்ச:** மாமன்னருடன் பீஷ்மர் மனந்திறந்து உரைத்திருப்பார். வேறேதும் யான் அறியேன்! மன்னவரே விளக்கிடுவார்..!

**விதுர:** மன்னவரின் கட்டளைக்கு மதிப்பளிப்பதென் கடமை!

**பீமன்:** சித்தப்பா! இந்த சிறியவனின் செய்தி ஒன்று! செவி மடுத்துச் செல்லுங்கள். பதின்மூன்று ஆண்டுகளைக் கடந்த பின்னர் படை நடத்தி துரியனவன் தொடையை உடைக்காமல் விடமாட்டேன்! துச்சாதனன் மார்பை என் கைகளால் பிளந்து குருதியினைக் கை நிறைய குவித்தெடுப்பேன் கூறுங்கள் அவர்க்கே!

-காட்சி மாற்றம்-

துரியோதனன் அரண்மனை-

**துரி:** அப்பாவின் புதுமைகளை புரிந்து கொள்ள முடியவில்லை. விதுரரை விரட்டிவிட்டார். இப்போ விரைந்து வரவழைத்து விட்டார்!

**கர்ண:** அவர் வருகையும் எமக்கு அருமையான வாய்ப்பே! பிதாமகரும் குருமார் இருவரையும் புரிந்துகொள்ள விதுரரால் மட்டும் வழி கிடைக்கும் எமக்கு!

**துரி:** பாண்டவரை மீண்டும் தருவிக்கவே இவர்கள் ஒன்றாக இணைவார்கள். மீண்டும் அவர் வந்தால் மரணத்தை நான் தழுவும் மார்க்கமதே முடிவாகும்!

**சகுனி:** சாவதற்கு ஏனப்பா துணிகின்றாய் என்றும் நீ போருக்குப் போகுமுன்னர் எதிரிகளின் பலமதுதான் என்னதென்று அறிவது தான் உன்னுடைய கடமையப்போ! பாண்டவர்களின் பலம் ஆயுதத்தில் இல்லையடா! நெறிதவற மாட்டாத நேர்மை வழிதான் பலம் அவர்க்கு! பதின்மூன்று ஆண்டுகாலம் பயமின்றி இருந்திடலாம். அதன்பின்னே நடப்பவற்றை அமைதியுடன் அமைத்திடலாம்!

__பின்னணிப்பாடல்:__

**கேடு விளைவிப்பவன் என்றும் கேட்டாலேதானழிவான்**
**கொடு வினையால் படு பயனைத் தானுணர மாட்டான்.**
**நயவஞ்சகம் புரிந்து நலன்கள் சிதைப்போரெல்லாம்**
**சுயசிந்தனை தன்னை சூது வழி மீதிழப்பர்!**

எம்.ரி.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.

அருள் ஜுவலர்ஸ்



4 3 6 3 3 3 1

பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.


3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு


நானும்கூட செல்லம் தான்



செல்லம் என்றால் அப்படி ஒரு செல்லம். சாப்பாட்டு வேளை சேர்கிறதென்றால் மூன்று வேளை உணவும். அதுவும் கரடியாருக்கு என்ன ஏது பிடிக்கும் என்று ஆராய்ந்துதான் சமையல் செய்ய வேண்டும். கவனிப்பே அலாதி.


Kala



JEWELLERY

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு

4 3 3 6 8 6

61 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு


தினமுரசு வாரமலர்

வியக்கவைக்கும் தொழில் நுட்பத்தால் புதிய ரக தொலைபேசிகள் பெருகி வருகின்றன. படத்தில் இருப்பது லேட்டஸ்ட் உற்பத்தி.

ஹலோ—கன்னத்தில் என்ன காயம்?




இதில் உள்ள புதிய வசதி என்னவென்றால் மறுமுனை...

விரும்பின் உங்களது உங்கள் புகைப் படத்தை அனுப்பி வைக்கும் வசதி இதில் உண்டு. அத்தோடு கருவி (புகைப் படக்கருவி) இதனோடு உள்ளது.

ஆனால் மறுமுனையில் இருப்பவரும் இதே போன்ற தொலைபேசி வைத்திருந்தால்தான் இந்த காரியம் சாத்தியம். இந்த கமரா கம்-போன்.

ஓய்விலும் ஒரு ஸ்ரைல்

இளவட்டம் கை தட்டும்



வயது 21.
நிறை-138கிலோ.
உயரம் 2.16மீற்றர்.
பெயர்-ஓநீல். அமெரிக்க கூடைப் பந்தாட்டத்தில் நம்பிக்கை நட்சத்திரம். கலபமாக கூடைக்குள் பந்தை தள்ளிவிடுவார். பெண் இரசிகைகள் அதிகம். ஆனாலும் நீல் நேசிப்பவை மூன்று. 1. தாய்-தந்தை 2. விளையாட்டு 3. காதலி. பந்தாட்டம் மூலம் நீல் பல கோடிகளுக்கு அதிபதியாகியுள்ளார். மைக் ஜோடானுக்கு பின் நீல்தான் அமெரிக்க கூடைப் பந்தாட்ட சூப்பர் ஸ்டார்.

இப்போது அமெரிக்காவில் 4000 டொலருக்கு விற்பனைக்கு வந்துள்ளது.

சுமப்பதும் ஒரு சுகம் அதற்காக இப்படியா?!



சொர்க்கத்தில் தூக்கம்

கனடாவில் வெட வெடவைக்கும் பனி உறையும் காலத்தில் இவருக்கு மட்டும் அதுவே சுகம். வட துருவத்தில் அதிகமாகக் காணப்படும் துருவக் கரடியார் இரசித்து லயித்து தூங்கும் அழகே தனிதான். பனிதான் சொர்க்கம்.





யாழ்ப்பாணத்தில் போக்குவரத்துக்கு கண்கண்ட தெய்வம் சைக்கிள்தான். அதனையறிந்தவர்கள் இப்படம் யாழில் எடுக்கப்பட்டதாக நினைத்தால் தப்பு! இது வியட்நாம் நாட்டில் எடுக்கப்பட்டது. மூங்கில் கூடைகளை சுமந்து செல்லும் சைக்கிள்காரர் உள்ளே இருக்கிறார். வடக்கிலும் இப்படி பொதி சுமக்கும் சைக்கிள் காட்சிகள் உண்டு.